# வருடாந்த அறிக்கை

# 2011

## தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| • சபையின் அமைப்பும் தொலைநோக்கும் குறிக்கோளும் | 02 |
| • அதிகார சபையின் நோக்கங்களும் அதிகாரங்களும் கடமைகளும் | 02-04 |
| • கட்டுப்பாட்டுப் பிரதேசம், பணிப்பாளர் சபை, மற்றும் நிர்வாக அமைப்பு | 05-08 |
| • தலைவர் / பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு | 09-13 |
| • கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழுத் தலைவரின் அறிக்கை | 14-16 |
| • 2011 ஆம் ஆண்டின் அபிவிருத்தித் திட்டங்களின் நிலைமை கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை | 17-55 |
| • நிதிச்செயற்பாடு பற்றிய அறிக்ஜ | 56-76 |
| • 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் நிதி நிலைமை அறிக்கை | 77-78 |
| • 2011 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான | 79 |
| • 2011 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் பற்றிய அறிக்கை | 80 |
| • 2011 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான திரட்டிய காசுப் பாய்ச்சல் அறிக்கை | 81 |
| • கணக்கியல் கொள்கைகள் மற்றும் நிதிக்கூற்றுக்கள் பற்றிய குறிப்புக்கள் | 82-89 |
| • கணக்குள் பற்றிய குறிப்புக்கள் | 90-96 |
| • நிதி அறிக்கைகளுக்கான அட்டவணைகள் | 97-107 |
| • நிதி மீளாய்வு 2005 - 2011 | 108-115 |

# இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை

## வருடாந்த அறிக்கை 2011

### அதிகார சபையின் ஸ்தாபிதம்

தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை பாராளுமன்றத்தின் 1996 ஆம் ஆண்டு 18 ஆம் இலக்க தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு அரசாங்க அதிகார சபையாகும்.

### தொலைநோக்கும் இலக்கும்

### தொலைநோக்கு

துரிதமாக வளர்ச்சியடைந்துவரும் ஆசிய - பசிபிக் பிராந்தியத்திற்கு நுழைவாயிலாக அமையும் அதேசமயத்தில், கவர்ச்சிகரமான, சவால் விடுக்கக்கூடிய சந்தர்ப்பங்களை, இளைஞர்களுக்கு உருவாக்கி, புவியியல் ரீதியில், நிலைபேறான கலாசார அடிப்படையில், அதிசயிக்கத்தக்க சூழலை உள்ளடக்கிய, பொருளாதார சுபீட்சம் கொண்ட, தென் பிராந்தியத்தை உருவாக்குவதே எமது தொலைநோக்காகும்.

### இலக்கு

தனியார்துறையினரதும், உப அமைப்புக்களினதும் ஒத்துழைப்புடன், பிராந்திய மக்களுக்கு அவசியமான தேவைகள், பிராந்தியத்தின் மூலவளங்கள் என்பனவற்றை கடும் பரிசோதனையின் அடிப்படையில் இனம் காண்பதன் மூலம் சிறந்த வாழ்க்கைத் தரத்தையும், சவாலாக அமைந்துள்ள சந்தர்ப்பங்களையும் வழங்கும் சூழலுக்கு உட்பட்ட வகையில் இலக்குத் தீர்மானிக்கப்பட்ட தனி நபர் வருமானத்தை அடைவதும், பிராந்தியத்தின் மொத்த பொருளாதார உற்பத்தியின் துரித வளர்ச்சிக்குப் பங்களிப்பை வழங்குவதுமே எமது இலக்காகும்.

### தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையின் நோக்கங்களும் அதிகாரங்களும் கடமைகளும்

சட்டத்தின் 12ஆம், 13ஆம் பிரிவுகளின் கீழான நோக்கங்கள், அதிகாரங்கள், கடமைகள் என்பனவற்றின் விபரங்கள் வருமாறு:

**அதிகார சபையின் நோக்கங்கள்:**

(அ) குறிக்கப்பட்ட பிரதேசத்தில் உற்பத்தியை அதிகரிக்கவும், பொருளாதார அபிவிருத்திக்கு உதவவும், வருமானம் மற்றும் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கவுமென அபிவிருத்திச் செயற்திட்டங்களை திட்டமிட்டு நடைமுறைக்கிடுதல்.

(ஆ) குறிக்கப்பட்ட பிரதேசத்தின் மொத்த அபிவிருத்தித் திட்டத்தின் இனம் காணப்பட்ட செயற்திட்டங்கள் பற்றி முன்னுரிமை அடிப்படையில் விரிவான ஆய்வுகளை மேற்கொள்ளல்.

(இ) குறிப்பிட்ட திட்டங்கள் மற்றும் செயல்திட்டங்களுக்கென வெளிநாட்டு உதவி கோருமாறு சம்பந்தப்பட்ட அமைச்சின் அமைச்சருக்கு வேண்டுகோள் விடுத்தல்.

(ஈ) பந்தி (ஆ) யில் தெரிவிக்கப்பட்ட ஆய்வுகளை மேற்கொள்வதில் அரசாங்கத் திணைக்களங்கள், அரச நிறுவனங்கள், உள்ளூராட்சி சபைகள், அரச கூட்டுத்தாபனங்கள் என்பனவற்றினதும், தனியார் மற்றும் அரசாங்கப் பிரமுகர்களினதும் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளலும், குறிக்கப்பட்ட பிரதேசத்தில் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைக்கிடுதலும்.

(உ) பந்தி (ஆ) யில் தெரிவிக்கப்பட்ட விரிவான ஆய்வுகளை மேற்கொள்வதிலும், குறிக்கப்பட்ட பிரதேசத்தில் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைக்கிடுவதிலும் வெளிநாட்டு மற்றும் உள்ளூர் தனியார்துறை நிறுவனங்களின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளல்.

**அதிகார சபையின் அதிகாரங்கள், கடமைகள், செயற்பாடுகள்**

(a) அதிகார சபையின் நோக்கங்களை நிறைவேற்றுவதில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு அமைப்புக்களிடம் இருந்து தொழில்நுட்ப மற்றும் நிதி உதவியைப் பெற்றுக்கொள்ளல்.

(b) குறிப்பிட்ட பிரதேசத்தில் விசேட அபிவிருத்தித் திட்டங்களுக்கான ஆய்வுகளை மேற்கொள்ளவும், அவற்றை நடைமுறைக்கிடவுமென உள்ளூர் மற்றும் வெளிநாட்டு அனுசரணையைப் பெற்றுக்கொள்ளல்.

(c) குறிப்பிட்ட பகுதிகளில் அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைக்கிடப்படுவதற்கு பொறுப்பான அமைச்சுக்கள், திணைக்களங்கள், ஏனைய நிறுவனங்கள் என்பன அவற்றைத் திட்டமிட்டு நடைமுறைக்கிடுவதில் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளல்.

(d) அதிகார சபையினால் பொறுப்பேற்கப்பட்ட எந்தவொரு அபிவிருத்தித் திட்டத்தையும் ஜனாதிபதியின் அங்கீகாரத்துடன் பொறுப்பேற்று, பராமரித்துச் செயற்படுத்தும்படி அரச அமைச்சுக்கள், திணைக்களங்கள், ஏனைய நிறுவனங்களைக் கோருதல்.

(e) அதிகார சபையின் கடமைகளை நிறைவேற்றுவதில் உருவாகும் எந்தவொரு பொறுப்பையும் நிறைவேற்றவென சொந்தத் திணைக்களங்களை அல்லது நிறுவனங்களை உருவாக்குதல்.

(f) குறிப்பிட்ட பிரதேசத்தின் பொருளாதார, சமூக அபிவிருத்தி சம்பந்தமாக ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்.

(g) குறிப்பிட்ட பிரதேசத்திற்குள் மேற்கொள்ளப்படவிருக்கும் எந்தவொரு அபிவிருத்தித் திட்டம் சம்பந்தமாகவும் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரித்தல்.

(h) அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைக்கிடுவதற்குத் தேவையான பொருட்களையும், சேவைகளையும் பெறுவதற்குரிய கேள்விப்பத்திரங்கள் சம்பந்தமாக காலத்திற்குக் காலம் அரசாங்கம் வெளியிட்ட கேள்விப்பத்திர வழிமுறைகளுக்கு அமைய அவற்றை வழங்குதல்.

(i) குறிப்பிட்ட பிரதேசத்தினுள் அதிகார சபையினால் வழங்கப்படும் சேவைக்கு கட்டணம் விதித்தல்.

(j) எந்தவொரு அபிவிருத்தி திட்டத்தையும் நடைமுறைக்கிடுவதற்குத் தேவையான எத்தகைய அலுவலகத்தையும், இயந்திரங்களையும், உபகரணங்களையும் வேறு எந்தப் பொருளையும் கொள்வனவு செய்தல், சுவீகரித்தல், நிர்மாணித்தல், பராமரித்தல், புனரமைத்தல், தகுதியாக்கல்.

(k) அரச அல்லது தனியார் நிறுவனத்தின் மூலம் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைக்கிடுதலும் அல்லது அவற்றுடன் இணைந்து நடைமுறைக்கிடுதலும்.

(l) நிதித்துறைக்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்துடன் நாட்டின் வளங்களிலிருந்து கடனைப் பெறுதல், நிதி திரட்டுதல், கடப்பாடுகளை நிலைநாட்டுதல்.

(m) அசையாத சொத்து எதனையும் எவ்வகையிலாவது சுவீகரித்து வைத்திருத்தல், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விடுதல், ஈடு வைத்தல், விற்பதற்கு அல்லது வேறு எந்த வகையிலும் விற்பனை செய்வதற்கு உறுதிகூறுதல்.

(n) அரசியல் யாப்பு அல்லது வேறு எந்தவிதமான எழுத்துமூல சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு உட்பட்ட வகையில் அல்லது சட்டத்தின் கீழான அதிகாரங்களை உபயோகித்து, அதிகார சபையின் இந்தச் சட்டத்தின் கீழான நோக்கங்களை அடைவதற்கென தேவையான தற்செயலான மற்றும் நிருவாக ரீதியிலான ஏனைய சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.

## பணிப்பாளர் சபை, பொது நிர்வாகம், சிரேஷ்ட முகாமைத்துவம் என்பனவற்றின் ஆணைக்குட்பட்ட பிரதேசங்கள்

### குறித்துரைக்கப்பட்ட பிரதேசங்கள்

சட்டத்தின் 3(1)ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் குறித்துரைக்கப்பட்ட பிரதேசம் என்பது காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, மொனராகல மாவட்டங்களையும், இரத்தினபுரி மாவட்டத்தின் இரண்டு பிரதேச செயலாளர் பிரிவுகளான கொலன்ன மற்றும் எம்பிலிப்பிட்டிய என்பனவற்றையும் உள்ளடக்கியதாகும். இதற்கமைய தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையின் குறித்துரைக்கப்பட்ட பிரதேசத்தில் 60 பிரதேச செயலகப் பிரிவுகள் உள்ள.

### அதிகார சபையின் பணிப்பாளர் சபை

சட்டத்தின் 4ஆம் பிரிவிற்கமைய, ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட கீழ்க்காணும் 07 அங்கத்தவர்களை அதிகார சபை கொண்டிருக்கும்

**ஜனாதிபதி அவர்களினால் நியமிக்கப்பட்ட பின்வரும் அங்கத்தவர்களை சபையின் பணிப்பாளர் சபை கொண்டுள்ளது.**

(அ) அமைச்சின் அமைச்சரினால் நியமிக்கப்பட்ட அமைச்சின் அதிகாரியொருவர்
(ஆ) நிதித்துறைக்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்பட்ட அமைச்சின் அதிகாரியொருவர்
(இ) 'நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள்' என கீழே விபரிக்கப்பட்ட ஏனைய 05 அங்கத்தவர்கள்

### அதிகார சபை ஒழுங்கமைக்கப்பட்ட அமைச்சு

| | |
|---|---|
| அமைச்சு | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு |

### சபையின் கடமைகளை வகிக்கும் அமைச்சர்கள்

| | |
|---|---|
| பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் | கௌரவ பசில் ராஜபக்ஷ அவர்கள் |
| பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் | கௌரவ லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன |
| | கௌரவ முத்து சிவலிங்கம் |
| செயலாளர் | கலாநிதி பி.பி.ஜயசுந்தர அவர்கள் |

## பணிப்பாளர் சபை, பொது நிர்வாகம் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவம்

### பணிப்பாளர் சபை

### 2011 ஆம் ஆண்டின் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள்

தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையின் சட்டத்தின் நான்காம் பிரிவின் பிரகாரம் பணிப்பாளர் சபை ஒவ்வொரு மாதத்திலும் ஒரு கூட்டத்தை நடத்தும். இருந்த போதிலும், நடைமுறை ரீதியிலான காரணங்களின் அடிப்படையில் 2011 ஆம் ஆண்டில் 08 தடவைகள் மாத்திரமே சபை கூடியுள்ளது. இந்தக் கூட்டங்களுக்கு அதிகார சபையின் தலைவர் தலைமை வகித்துள்ளார். 2011 ஆம் ஆண்டில் பதவிகளை வகித்த சபை அங்கத்தவர்களின் பெயர் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

| | | |
|---|---|---|
| 01. | திரு. ஏ.பி.எஸ்.ரஞ்சித் குணசேகர - சட்டத்தரணி<br>(2006.06.07 - 2011.12.31 வரை) | தலைவர்/பணிப்பாளர் நாயகம் |
| 02. | திரு.சுனில் சூரிய பண்டார திசாநாயக்க<br>(2007.09.01 - 2011.12.31 வரை)<br>சிரேஷ்ட தேயிலைப் பரிசோதகர்<br>சிறிய தேயிலைத்தோட்ட அபிவிருத்தி அதிகார சபை | அங்கத்தவர் |
| 03. | திரு. லலித் யூ கமகே - சட்டத்தரணி<br>(2005.05.19 - 2011.07.06 வரை) | அங்கத்தவர் |
| 04. | திரு.சரத் அமரவீர<br>(2010.05.12 - 2011.12.31 வரை) | அங்கத்தவர் |
| 05. | திரு. சந்தரன பிரியலால் பத்திரண<br>(2010.05.12 - 2011.12.31 வரை) | அங்கத்தவர் |
| 06. | திருமதி றிஸ்னா அனஸ்<br>(2010.07.22 – 2011.04.08 வரை)<br>பிரதிப் பணிப்பாளர் - நிதி அபிவிருத்தி திணைக்களம்<br>நிதி அமைச்சு | அங்கத்தவர் |
| 07. | செல்வி புஷ்பா றொட்றிகோ<br>(2010.07.22 - 2011.04.05 வரை)<br>பணிப்பாளர் நாயகம் - கிராமியப் பொருளாதாரம்<br>பொருளாதார அபிவிருத்தி அமைச்சு<br>பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பிரதிநிதி | அங்கத்தவர் |
| 08. | திரு. டீ.சி.சிரிவத்தன<br>(2011.04.08 - 2011.12.31 வரை)<br>பணிப்பாளர் - அரச வர்த்தக திணைக்களம், மத்திய திறைசேரி<br>நிதியமைச்சின் பிரதிநிதி | அங்கத்தவர் |

## அதிகார சபையின் முகாமைத்துவம்

| | |
|---|---|
| திரு. ஏ.பி.எஸ்.ரஞ்சித் குணசேகர (சட்டத்தரணி) | தலைவர்/பணிப்பாளர் நாயகம் |
| திரு. ஜே.கே.பத்மசிரி | பணிப்பாளர் (நிதி மற்றும் நிர்வாகம்) |
| திரு. டபிள்யூ.ஜீ.பீ.எல்.விஜயரத்ன | பணிப்பாளர் (திட்ட அமுலாக்கம் மற்றும் மேற்பார்வை) (2011.08.29 வரை) |
| திரு. பீ.என்.விஜேரத்ன | பதில் பணிப்பாளர் (திட்ட அமுலாக்கம்) (2011.09.07 - 2012.01.04 வரை) |
| திரு. பீ.என்.விஜேரத்ன | பதில் பணிப்பாளர் (கொள்கைத் திட்டமிடல்) (2010.06.01 - 2011.12.31 வரை) |
| திரு. சுனில் வன்னிகம | துறை முகாமையாளர் (கைத்தொழில்) |
| திரு. எல்.எம்.ஏ.பெரேரா | துறை முகாமையாளர் (திட்டமிடல்) |
| திரு. எச்.கே.ரணவீர | துறை முகாமையாளர் (மீன்பிடி) |
| திருமதி எஸ்.டீ.கல்யாணி | துறை முகாமையாளர் (காணிகள்) |
| திரு. ஷரியந்த லியனாராச்சி | துறை முகாமையாளர் (பயிற்சி) |
| திரு. எஸ்.ஆர்.விஜேசேகர | துறை முகாமையாளர் (அடிப்படை வசதிகள்) |
| திரு. சீ.எல்.வேகிரிய | துறை முகாமையாளர் (பெருந்தோட்டம்) (2010.10.15 – 2011.12.31 வரை) |
| திரு. டபிள்யூ.எம்.ஏ.பெரேரா | துறை முகாமையாளர் (விவசாயம்) (2010.10.15 – 2011.12.31 வரை) |
| திரு.எஸ்.சீ.வனிகதுங்க | உள்ளகக் கணக்காய்வாளர் |

**அதிகார சபையின் மாவட்ட நிர்வாகம்**

| | | |
|---|---|---|
| திரு. ரஞ்ஜித் டி சில்வா (2010.08.31 - 2011.05.01 வரை) | மாவட்டப் பணிப்பாளர் | காலி மாவட்டம் |
| திரு. கே.ஐ.மாசகோரள (2011.05.02 - 2011.12.31 வரை) | மாவட்டப் பணிப்பாளர் | மாத்தறை மாவட்டம் |
| திரு. கே.ஐ.மாசகோரள (2010.06.01 - 2011.05.01 வரை) | | |
| திரு. ரஞ்ஜித் டி சில்வா (2011.05.02 - 2011.12.31 வரை) | மாவட்டப் பணிப்பாளர் | ஹம்பாந்தோட்டை மாவட்டம் |
| திரு. கே.குணதிலக (2010.08.31 - 2011.12.31 வரை) | | |
| திரு. பீ.எம்.குலதுங்க (2010.06.01 - 2011.12.31 வரை) | மாவட்டப் பணிப்பாளர் | மொனராகலை மாவட்டம் |

**அதிகார சபையின் ஊழியர்கள்**

| | |
|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 03 |
| மூன்றாம் தரம் | 90 |
| இரண்டாம் தரம் | 95 |
| அடிப்படை மட்டம் | 78 |
| **மொத்தம்** | **266** |

## தலைவர் / பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு

1996 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 15 ஆண்டுகளை 2011 ஆம் ஆண்டில் நிறைவு செய்யும் தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையின் சகலவித நடவடிக்கைகள் பற்றிய மீளாய்வைச் சமர்ப்பிப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த மீளாய்வின் மூலம் சபையின் ஆரம்பம் முதல் இதுவரை எனது செயற்பாடுகள் 2011 ஆம் ஆண்டின் திட்டங்களைச் செயற்படுத்துவதன் முன்னேற்றம் சபையின் ஏனைய பிரிவுகளின் செயற்பாடுகளும் தற்போதைய நிலைமைகளும் மற்றும் 2011 ஆம் ஆண்டில் சபையின் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது கடந்து வந்த விசேட நிகழ்வுகளையும் தெளிவுபடுத்த எதிர்பார்க்கின்றேன்.

தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை 1996 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்டது. இந்த அதிகார சபை அமைக்கப்பட்டதன் முக்கிய நோக்கம், உற்பத்தியைத் தரமுயர்த்துதல், பொருளாதார அபிவிருத்தியை மேம்படச் செய்தல், தென் பிராந்தியத்தின் வருமானத்தையும், வேலைவாய்ப்புக்களையும் அதிகரிப்பதை இலக்காகக் கொண்ட அபிவிருத்தி நடவடிக்கைகளைத் திட்டமிட்டு நிறைவேற்றுதல் என்பனவாகும். இத்தகைய நோக்கங்களை அடைவதற்கென அதிகார சபை பலதரப்பட்ட அணுகுமுறைகளைக் கடைப்பிடித்து செயலாற்றி வந்துள்ளது.

இதற்கமைய ருஹுணுபுர அபிவிருத்திக்கு அதிகார சபை முக்கியத்துவமளித்து, தென் பிராந்தியத்தின் அபிவிருத்திக்குத் தேவையான பாரிய அபிவிருத்தித் திட்டங்களை வகுத்துள்ளது. ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகம், தென் பிராந்திய நெடுஞ்சாலை, தென் பகுதிக்கான போக்குவரத்து அமைப்பு, தெற்கு சர்வதேச விமான நிலைய நிர்மாணம், மாத்தறை - கதிர்காம ரயில் பாதை என்பன இவற்றுள் சிலவாகும்.

இவற்றிற்கு மேலதிகமாக, மேற்பார்வை அமைச்சுக்களின் பணிப்பின் பிரகாரம் பிராந்திய அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட சிறிய, நடுத்தர அளவிலான அபிவிருத்தித் திட்டங்களுக்கும் அதிகார சபை கவனம் செலுத்தி இவற்றை அமைப்பதற்குத் தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதன் மூலம், தென் பிராந்தியத்தில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் கவனத்தைப் பெற்றுள்ளது. இவற்றுள் மிதிகமவில் லோட்ஸ்டார் டயர் தொழிற்சாலை (1996), எம்பிலிப்பிட்டியவில் தொழில் திறன் நிலையம் (1997), மாத்தறையில் ஒலியகொடவத்தை நிலக்கரி மின் உற்பத்தி நிலையம் (1998), மாத்தறையில் மாத்தறை கும்பல்கமவில் இசுறு பீங்கான் தொழிற்சாலை (1999), கம்புறுப்பிட்டியவில் ரட்டலங்காவத்த ஓட்டோ லங்கா டயர் தொழிற்சாலை (2001), மாத்தறை கம்புறுப்பிட்டியவில் ரட்டலங்காவத்த ட்ரகன் பழமரத் தோட்டத் திட்டம் (2009) போன்ற வெற்றிகரமான திட்டங்கள் முக்கியமானவையாகும். இத்தகைய திட்டங்களின் மூலம் வெளிநாட்டு நாணயமாற்றுக்களை பெருமளவில் நாம் பெற்றுக்கொண்டது எமக்குக் கிடைத்த வெற்றியாகும்.

அத்துடன், பல வருடங்களாக செயலிழந்திருந்த தேயிலைத் தொழிற்சாலைகளை மீளமைத்து, தென் பிராந்தியத்தின் தேயிலைப் பொருளாதாரத்திற்கு மாபெரும் சேவையாற்றவும் இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையினால் முடிந்துள்ளது. இவற்றில் தனியார் மற்றும் உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கு வசதி வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் மீள் நிர்மாணம் செய்யப்பட்ட காலி, பனில்கந்த தேயிலைத் தொழிற்சாலை - 1999, அக்குரஸ்ஸயில் கலகாவ தொழிற்சாலை - 2001, தவளமவில் ஜெஸ்மின்வெலி தேயிலைத் தொழிற்சாலை - 2001 மற்றும் 2009 இல் ஆரம்பிக்கப்பட்ட ஹந்துகல - வலஸ்முல்லயில் தேயிலைத் தொழிற்சாலை என்பன இவற்றுள் சிலவாகும்.

இத்தகைய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக, 1998 ஆம் ஆண்டிலிருந்து 2007 ஆம் ஆண்டு வரைக்குமான காலப்பகுதியில் கிராமப்புறப் பொருளாதாரத்தைத் தரமுயர்த்தவென சில திட்டங்களை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை நடைமுறைக்கிட்டுள்ளது. கிராமப்புற மக்களின் தேவைகளும், பொருளாதார சமூகப் பிரச்சினைகளும் இனங்காணப்பட்டதை அடுத்து, பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வகையில், தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை கைத்தொழில், பெருந்தோட்டம், கடற்றொழில், விவசாயம், கால்நடை வளர்ப்பு, காணி, பயிற்சி மற்றும் உட்கட்டமைப்பு ஆகிய துறைகளில் உள்ள பலதரப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைக்கிட்டுள்ளது. பின்தங்கிய கிராமங்களை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களின் மூலம் கிராமப்புறப் பொருளாதாரம் அபிவிருத்தியடைவதற்கு அதிகார சபை மேலும் உதவி வழங்கியுள்ளது. இதனையடுத்து, மஹிந்த சிந்தனை தேசியத் திட்டத்திற்கு உட்பட்ட வகையில் 2007 ஆம் ஆண்டில் இருந்து தேசிய மட்டத்திலான தேவைகளைக் கருத்திற்கொண்டு ஜாதிகசவிய, கமநெகும திட்டத்தின் கீழ் காலி (18), மாத்தறை (12), ஹம்பாந்தோட்டை (17) மாவட்டங்களில் உள்ள 47 கிராமங்களில் அதிகார சபை அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது.

2008 ஆம் ஆண்டில் *ஜாதிகசவிய, கமநெகும அபிவிருத்தித் திட்டம்,* மொனராகல மாவட்டத்தையும், இரத்தினபுரி மாவட்டத்தில் கொலன்ன மற்றும் எம்பிலிப்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கிய வகையில் மேலும் விஸ்தரிக்கப்பட்டது. காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை மாவட்டங்களுக்கு மேலதிகமாக இவை உள்ளடக்கப்பட்டன. புதிய 103 கிராமங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடும் இந்த அதிகார சபைக்கு வழங்கப்பட்டது. மொத்தமாக தென் பிராந்தியத்தில் 150 கிராமங்களை அபிவிருத்தி செய்யும் பொறுப்பு 2010 ஆம் ஆண்டு எமக்கு வழங்கப்பட்டது. (காலி மாவட்டம் - 43, மாத்தறை மாவட்டம் - 45, ஹம்பாந்தோட்டை மாவட்டம் - 37, மொனராகலை மாவட்டம் 25).

இத்தகைய திட்டங்கள் முன்னுரிமை அடிப்படையிலும் *ஜாதிகசவிய கமநெகும அபிவிருத்தித்* திட்டத்தின் பிரகாரமும் கிராம அபிவிருத்தித் திட்டத்திற்கு அமைய நடைமுறைக்கிடப்பட்டன. இவை அனைத்தும் மூன்று பிரிவுகளாக - பொருளாதாரம் மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி, உட்கட்டமைப்பு அபிவிருத்தி, ஆன்மீக மற்றும் சமூக அபிவிருத்தி ஆகிய துறைகளில் இடம்பெற்றிருந்தன. இதற்கமைய இந்த அதிகார சபை ஆரம்பிக்கப்பட்ட 1996 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டின் இறுதி வரை தென் பிராந்தியத்தின் விசேட செயற்திட்டங்களுக்கான செலவுகளுடன் மொத்தமாக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென ரூபா 1,701 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

ஜாதிகசவிய கமநெகும அபிவிருத்தித் திட்டங்களை தொடர்ந்து நடைமுறைக்கிடவென அதிகார சபைக்கு 2010 ஆம் ஆண்டில் 280 மில்லியன் ரூபா திறைசேரியினால் வழங்கப்பட்டது. இந்த நிதி ஒதுக்கீட்டில் சம்பந்தப்பட்ட திட்டங்களில் அதிகார சபை 201.1 மில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளது. திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் 71.8 சதவீத நிதிப் பெறுபேற்றை அடைந்தது எமக்கு மகிழ்ச்சியூட்டும் விடயமாகும். எஞ்சியுள்ள நிதி ஒதுக்கீடு பெறப்பட்டிருந்தால், 100 சதவீத நிதித்துறை முன்னேற்றத்தை நாம் அடைந்திருப்போம். இந்த வருடத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தப் பெறுபேறு 80.5 சதவீதமாகும். இத்தகைய நடைமுறைக்கிடப்பட்ட திட்டங்களின் மூலம் பெறப்பட்ட உத்தேச பொருளாதார அனுகூலம் 300 மில்லியன் ரூபாவாகும்.

இவற்றுக்கு மேலதிகமாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பணிப்புரைக்கு அமைய காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலாளர்கள் ஜாதிகசவிய கமநெகும இரண்டாம் கட்ட திட்டத்தின் கீழ் இந்த மாவட்டங்களில் பொருளாதார உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்யவென 2010 ஆம் ஆண்டில் 159.8 மில்லியன் ரூபாவை வழங்கியிருந்தனர். இந்த நிதியில் 96.7 மில்லியன் ரூபாவை செலவிட்டதன் மூலம் 215 பொருளாதார உட்கட்டமைப்புத் திட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் நடைமுறைக்கிடப்பட்டன. இதற்கமைய இந்த விசேட திட்டங்களின் கீழ் 69% நிதித்துறை முன்னேற்றத்தையும் 90% பௌதீக முன்னேற்றத்தையும் சபை பெற்றுக்கொண்டது.

2011 ஆம் ஆண்டில் தயார் செய்யப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கு அமைய பிரதான மூன்று வேலைத்திட்டங்களுக்காக ரூபா 300.5 மில்லியன் செலவிட எதிர்பார்க்கப்பட்டது. அதாவது, திவிநெகும தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் 150 கிராமங்களில் 15,000 வீட்டுப் பொருளாதாரப் பிரிவுகளை ஸ்தாபிப்பதும், அவற்றுக்கான விவசாய அபிவிருத்தி, வீட்டுக் கைத்தொழில் அபிவிருத்தி, மீன்பிடி மற்றும் கால்நடை வள அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக ரூபா 215 மில்லியன், ஜாதிகசவிய கமநெகுமவில் எஞ்சியிருந்த திட்டங்களை செயற்படுத்வதற்காக ரூபா 73 மில்லியன் மற்றும் தலைமை அலுவலகக் கட்டடத்தை அமைப்பதற்கான செலவுகளாக ரூபா 12.5 மில்லியன் என்ற வகையில் செலவிட எதிர்பார்க்கப்பட்டது.

மேலே கூறப்பட்ட வேலைத்திட்டங்களுக்கு மொத்தமாக ரூபா 152.3 மில்லியன் செலவிடப்பட்டு, 51% நிதிப் பெறுபேறுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. அதாவது, திட்டங்களில் உள்ளடக்கப்பட்டவாறு மூன்று பிரதான வேலைத்திட்டங்களில் எதிர்பார்க்கப்பட்ட அளவில் செலவுகள் மேற்கொள்ளப்பட்டன. திவிநெகும தேசிய வேலைத்திட்டத்திற்காக ரூபா 77.4 மில்லியன், ஜாதிகசவிய கமநெகுமவின் எஞ்சியிருந்த வேலைத்திட்டங்களுக்காக ரூபா 62.6 மில்லியன், தலைமை அலுவலகக் கட்டடத்திற்கான செலவுகள் உட்பட ஏனைய செலவுகளுக்காக ரூபா 12.3 மில்லியன் என்ற வகையில் செலவிடப்பட்டன.

மேற்கூறப்பட்ட அனைத்து வேலைத்திட்டங்களுக்காகவும் பௌதீக ரீதியில் 1,048 வேலைத்திட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவற்றில் 529 திட்டங்கள் முற்றாக நிறைவு செய்யப்பட்டு 51% பௌதீக பெறுபேறுகளை 2011 ஆம் ஆண்டில் அடைய முடிந்துள்ளது.
சபையின் 04 மாவட்டங்களுக்கான, மாவட்ட காரியாலயங்களின் அடிப்படையில் பார்க்கும் போது, மேற்கூறப்பட்டவாறு அடைந்துள்ள பெறுபேறுகளை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

**இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை**

**2011 ஆம் ஆண்டின் மாவட்ட அடிப்படையிலான அபிவிருத்தி திட்டங்களின் பெறுபேறுகள்**

| மாவட்டம் | திட்டமிடப்பட்ட வேலைத் திட்டங்கள் | நிறைவு செய்த திட்டங்கள் | % | பயனாளி களின் எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு ரூபா | நிதிப் பெறுபேறுகள் ரூபா | % |
|---|---|---|---|---|---|---|---|
| காலி | 296 | 123 | 42 | 60,574 | 79,500 | 33,468 | 42 |
| மாத்தறை | 308 | 178 | 58 | 62,421 | 87,500 | 45,338 | 52 |
| ஹம்பாந்தோட்டை | 270 | 164 | 61 | 49,252 | 71,200 | 41,680 | 58 |
| மொனராகல | 174 | 64 | 37 | 28,566 | 49,300 | 19,482 | 39 |
| தலைமையகம் | | | | | 12,500 | 12,300 | 98 |
| **மொத்தம்** | **1,048** | **529** | **51** | **200,813** | **300,500** | **152,268** | **51** |

மேற்கூறப்பட்டவாறு அடையப்பெற்ற மொத்தப் பெறுபேறுகளுக்கு மேலதிகமாக இந்த வேலைத்திட்டங்களை முன்னெடுத்ததன் மூலம் தென் பிராந்தியத்தின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட வளர்ச்சியின் பிரதிபலனாக மொத்தமாக ரூபா 280 மில்லியன் அளவிலான பொருளாதாரப் பெறுமதியை மொத்த தேசிய உற்பத்தியில் சேர்க்க முடிந்துள்ளது. அதாவது, திவிநெகும வேலைத்திட்டங்களின் மூலம் ரூபா 154 மில்லியன், ஜாதிகசவிய கமநெகும வேலைத்திட்டத்தின் மூலம் ரூபா 126 மில்லியன் என்ற வகையிலாகும். இந்தப் பெறுமதி பௌதீக வேலைத்திட்டங்களின் பெறுபேறுகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட பெறுமதிகளாகும் என்பதுடன், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் வீடுகள் இல்லாத 398 பேருக்கு வீடுகளை அமைத்துக் கொடுத்ததன் மூலம் அந்த பயனாளிகளுக்கு கிடைத்த புலப்படாத பொருளாதார மற்றும் சமூக சேவைகளின் தாக்கம் 2011 ஆம் ஆண்டில் இச்சபையினால் வழங்கப்பட்ட சேவைகளின் பெறுபேறுகளின் எண்ணிக்கையில் காண்பிக்கப்படவில்லை என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன். தெளிவாகக் காணப்படும் சமூக சேவையாகவும் பிரதான தேசிய பிரச்சினை ஒன்றின் பகுதிக்கு வழங்கப்பட்ட தீர்வு என்ற வகையிலும் இந்த வீடமைப்பு வேலைத்திட்டம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஆலோசனைக்கு அமைய ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலாளரிடம் இருந்து பெறப்பட்ட ரூபா 44.1 மில்லியன் செலவில் 2011 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.

மேலே கூறப்பட்ட திவிநெகும வேலைத்திட்டத்திற்கு அமைவான திட்டங்கள், ஜாதிகசவிய கமநெகும வேலைத்திட்டத்திற்கு அமைவான திட்டங்கள் மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட வீடமைப்பு வேலைத்திட்டம் ஆகியவற்றின் மூலம் தென் பிராந்தியத்தில் இரண்டு இலட்சத்தை (200,000) தாண்டிய மக்களுக்கு சேவையாற்ற முடிந்தது நாம் பெற்ற மாபெரும் ஒரு வெற்றியாகும். அதன் மூலம் அவர்களது உணவு உற்பத்தியை அதிகரித்தல், வருமான மற்றும் போஷாக்கு மட்டம் என்பனவற்றின் வளர்ச்சி ஆகியன குறிப்பிடத்தக்கதாகும். இதன் பலனாக அம்மக்களை தேசிய பொருளாதாரத்தின் பங்காளிகளாக மாற்ற முடிந்துள்ளது. அதன் மூலம் நாட்டின் மொத்த தேசிய உற்பத்திக்கு மேலே கூறப்பட்டவாறு ரூபா 280 மில்லியன் பங்களிப்பையும் வழங்க முடிந்துள்ளது. இவற்றின் அடிப்படையில் இச்சபையை அமைப்பதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் அதாவது, சட்டத்தின் 12ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கோட்பாடுகளை அடைய முடிந்துள்ளது. அதனை சுருக்கமாகக் கூறுவதாயின், இச்சபையானது 1996 ஆம் ஆண்டு

அமைக்கப்பட்ட தினத்திலிருந்து 2011 டிசம்பர் 31 ஆம் திகதி வரை தென் மாகாணத்தில் செயற்படுத்திய சாதாரண மற்றும் விசேட வேலைத்திட்டங்களுக்காக மொத்தமாக ரூபா 2,300 மில்லியனைச் செலவிட்டுள்ளது. அதுபோன்ற பலமடங்கு பங்களிப்பை நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் சேர்க்கவும் முடிந்துள்ளது. அத்துடன், தென் பிராந்திய மக்களின் பொருளாதார மற்றும் வாழ்க்கை நிலை ஆகியவற்றில் வளர்ச்சியை ஏற்படுத்தவும், இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்கவும் அவற்றின் பலனாக மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தவும் சமூக நிலையை உயர்த்தவும் இச்சபையினால் முடிந்துள்ளது. இங்கு கூறப்பட்ட அனைத்து நடவடிக்கைகளின் மூலமும் தென் பிராந்தியத்தின் பொருளாதார சுபீட்சத்திற்காக குறிப்பிடத்தக்கதொரு சேவையை ஆற்ற சபையினால் முடிந்துள்ளது.

மேலே கூறப்பட்டவாறு சபையின் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு மேலதிகமாக, பிரதான பிரிவுகளாகக் காணப்படும் திட்டமிடல் பிரிவு, கணக்கு மற்றும் நிருவாகப் பிரிவு மற்றும் கணக்காய்வுப் பிரிவு ஆகியன 2011 ஆம் ஆண்டில் செயற்பட்ட விதம் மற்றும் அப்பிரிவுகள் அடைந்து கொண்ட பெறுபேறுகள் பற்றிய சுருக்கமான விபரம் பின்வருமாறு:

பணிப்பாளரின் (கொள்கைத் திட்டமிடல்) கீழ் நிர்வகிக்கப்படும் திட்டமிடல் பிரிவு தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ளது. அது, 08 பிரதான பிரிவுகளைக் கொண்டுள்ளது. அதாவது, திட்டமிடல், மீன்பிடி, கைத்தொழில், காணி, மனிதவளம், பயிற்சி, விவசாயம், பெருந்தோட்டம் மற்றும் கல்வி உட்பட அடிப்படை வசதிகள் அபிவிருத்தி என்பனவற்றைக் கொண்டுள்ளது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களின் கீழ் பணிப்பாளர் சபையின் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு அமைய இந்த 08 பிரிவுகளின் மூலம் காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை மற்றும் மொனராகல ஆகிய நான்கு மாவட்டங்களிலும், இரத்தினபுரி மாவட்டத்தின் கொல்லன்ன மற்றும் எம்பிலிப்பிட்டிய ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளிலும் மொத்தமாக தெரிவு செய்யப்பட்ட 150 கிராமங்களில் ஜாதிகசவிய கமநெகும மற்றும் திவிநெகும அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் திட்டமிடப்பட்டிருந்தன. இதன்போது பிரதேசத்தின் அரசியல் தலைவர்களின் கருத்துக்களும் ஆலோசனைகளும் உரிய கிராம மக்களின் ஆலோசனைகளும் அடிப்படைத் தேவைகளும் கருத்திற் கொள்ளப்பட்டன. 20 ஊழியர்களைக் கொண்ட சிறியதொரு குழுவினால் முழு வருடத்திற்குமான மீளாய்வுகளுடன் தேவையான சந்தர்ப்பங்களில் வெளிக்களப் பரிசோதனைகளையும் மேற்கொள்ளப்பட்டு இப்பிரிவின் செயற்பாடுகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவில் காணப்பட்டது.

மேலும், நான்கு மாவட்ட காரியாலயங்கள் உட்பட மொத்த சபையினதும் கணக்குகள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லுதல் என்பன காலத்திற்குக் காலம் தேவையான தகவல்களை பணிப்பாளர் சபையிடம் சமர்ப்பிப்பதும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சக்கும், மத்திய திறைசேரிக்கும் நிதி ஒதுக்கீடு சம்பந்தமாக பணிப்பாளரின் (நிதி மற்றும் நிருவாகம்) தலைமையில் இப்பிரிவின் ஊழியர்களினால் நன்கு செயற்படுத்தப்பட்டது. உரிய வேளைகளில் மத்திய திறைசேரியிடம் இருந்து பணத்தைப் பெற்றுக்கொள்ளல், சபையின் ஏனைய வருமானங்களைச் சேகரித்தல் உட்பட உள்ளக மற்றும் வெளியக வாடிக்கையாளர்களின் கொடுப்பனவுகளை உரிய நேரத்தில் மேற்கொள்வதும், செலவுகளை சிக்கனமாக கையாழ்வதும் காலத்திற்குக் காலம், வருடாந்தம் உரிய முறையில் கணக்குகளை முன்வைப்பதும் இப்பிரிவின் மூலம் மிகச் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறன. மேலும், 266 ஊழியர்களைக் கொண்ட இப்பிரிவு சபையின் மொத்த ஊழியர்களையும் நிர்வகிப்பதுடன், 44 வாகனங்களையும் நன்கு பராமரித்து வருவதுடன், அந்த வளங்களையும் ஏனைய வளங்களையும் சபையின் நோக்கங்களை

அடைவதற்கு ஏற்றவகையில் சகல துறைகளுக்கும் பயனளிக்குமாறு பகிர்ந்தளிப்பதும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமான செயற்பாடுகளாகும்.

மேலும், வழமையான முறையில் சாதாரண ஊழியர் மற்றும் முகாமையாளர்களின் திறமைகளை அபிவிருத்தி செய்வதற்கும் ஊழியர்களின் சேவை மனப்பான்மையை அபிவிருத்தி செய்வதற்கும் 2011 ஆம் ஆண்டில் அடையாளம் காணப்பட்ட ஊழியர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டதுடன், மத்திய திறைசேரியில் இருந்து கிடைக்கப்பெறும் வரையறைக்குட்பட்ட ஒதுக்கீடுகளின் மூலம் இப்பயிற்சிகளுக்காக 2011 ஆம் ஆண்டில் ரூபா 352,865 செலவிடப்பட்டது.

அத்துடன், 07 ஊழியர்களுடன் சிறிய குழுவாகச் செயற்படும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது, தமது கணக்காய்வு நடவடிக்கைகளை முடிந்தவரை சுதந்திரமாக மேற்கொள்ளும் வகையில் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லப்பட்டது. அலுவலகங்களையும் வெளிக்கள பிரதேசங்களையும் கணக்காய்வு செய்வதில் திட்டமிடப்பட்டவாறு ஆய்வுகளை மேற்கொண்டு முகாமைத்துவத்திடம் தேவையான சந்தர்ப்பங்களில் விசேட ஆய்வுகளை மேற்கொண்டு அறிக்கைகளை சமர்ப்பிப்பதும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது. சபையின் ஒவ்வொரு பிரிவு மற்றும் அம்சங்களின் குறைபாடுகளை முகாமைத்துவத்திடம் காண்பித்து சபையிலுள்ள பிரிவுகள் மற்றும் நிர்வாக முறைகளை பகுப்பாய்வு செய்து தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றை முன்னேற்றுவதற்கு வேண்டிய யோசனைகளை முன்வைப்பதும் இப்பிரிவின் மூலம் ஆற்றப்படும் சேவைகளில் ஒன்றாகும். இவை அனைத்தும் சபையின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவப் பிரிவின் அறிவுக்கு எட்டிய வகையிலும் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைவாகவும் மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். மேலும், உள்ளக கணக்காய்வுப் பிரிவு உண்மையிலேயே முகாமைத்துவத்திற்கு உதவும் வகையில் செயற்பட்டு வருகிறது.

மேலே கூறப்பட்ட வெற்றிகரமான பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வது மட்டுமன்றி, 2011 ஆம் ஆண்டில் ஒருசில சவால்களையும் சர்ச்சைகளையும் சந்திக்கவும் முகாமைத்துவத்தின் குறைபாடுகளை அடையாளம் காணவும் முடிந்தமையையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். அதாவது, திவிநெகும வேலைத்திட்டத்திற்கு உரித்தான திட்டங்கள் காலந்தாழ்த்தி உள்ளடக்கப்பட்டமையும், 2011 ஆம் ஆண்டின் அபிவிருத்தி திட்டங்களை அமைச்சின் மூலம் அங்கீகரிக்கப்படுவது 2011 ஆம் ஆண்டின் அரையாண்டு அளவில் நடைபெற்றதும், 2011 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் வேலைத்திட்டங்களை செயற்படுத்த முடியாமை மற்றும் திட்டமிடப்பட்டவாறு ஒருசில பிரிவுகளின் செயற்பாடுகள் காணப்படாமை என்பன அந்தச் சவால்கள் சர்ச்சைகளில் முக்கியமானதாகும். அவற்றை எதிர்வரும் வருடங்களில் வெற்றிகரமாக முன்னெடுத்து அவற்றின் மூலம் பெற்ற அனுபவத்தினை எதிர்வரும் வருடங்களில் சிறந்த முறையில் பயன்படுத்தி சபையின் மூலம் விசேடமாக தென் பிராந்தியத்திற்கும் மொத்தமாக முழு நாட்டிற்கும் மேலே கூறப்பட்டவாறு புலப்படும் வகையிலான ஒரு சேவையை ஆற்ற நானும் பணிப்பாளர் சபையினரும், தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையின் ஊழியர்கள் அனைவரும் திடமாக உள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறேன்.

**ஏ.பி.எஸ்.ரஞ்சித் குணசேகர**
தலைவர்/பணிப்பாளர் நாயகம்
இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை

# கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை - 2011

## கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் நடவடிக்கைகள்

இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினால் 2011 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் சுருக்கமான அறிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

**கணக்காய்வுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பிரதான நடவடிக்கைகள்**

- உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் செயற்பாட்டு எல்லையைத் தீர்மானித்தல்.
- நிதித்துறை சம்பந்தமான அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதன் மூலம் தீர்மானங்கள் மேற்கொள்வதில் பணிப்பாளர் சபைக்கு உதவுதல்.
- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பரிந்துரைகளின் தொகுப்பை பணிப்பாளர் சபையினர் தீமானங்களை மேற்கொள்வதற்கென காலத்திற்குக் காலம் சமர்ப்பித்தல்.
- உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் இடர் முகாமைத்துவம் சம்பந்தமான வழிமுறைகளை மீளாய்வு செய்தல்.
- உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளின் விளைபயனைக் கண்காணித்தல்.
- நியதிச்சபைகள் மற்றும் உள்ளகச் சட்டங்கள், பிரமாணங்கள் என்பன ஊழியர்களினால் கடைப்பிடிக்கப்படுவது பற்றியும், ஊழியர்களின் நடவடிக்கை சம்பந்தமாகவும் மீளாய்வு செய்தல்.
- உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் தீர்வுகளை கணக்குகள், நிதிச் செயற்பாடு என்பனவற்றின் அடிப்படையில் மீளாய்வு செய்தலும், அவற்றை பணிப்பாளர் சபைக்கு காலத்திற்குக் காலம் அறிவித்தலும்.
- ஊழியர்களின் ஒழுக்காற்றல், வளங்களின் விரையம், இலஞ்ச ஊழல் என்பன சம்பந்தமான விடயங்களில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் அறிக்கைகளை மீளாய்வு செய்தலும் பரிந்துரைகளை பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பித்தலும்.
- உள்ளக மற்றும் கணக்காய்வுத் திணைக்கள அறிக்கைகள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் பின்நோக்கைப் பெற்றுக்கொள்ளுதல்
- அரச நிறுவனங்கள் குழுவின் (COPE) பரிந்துரைகளை நடைமுறைக்கிடுவதன் மீளாய்வும் பின் நோக்கும்.

**குழுவின் அமைப்பு**

கீழே குறிப்பிடப்பட்ட ஐந்து அங்கத்தவர்களை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு கொண்டுள்ளது.

**குழுவின் அங்கத்தவர்கள்**

01. திரு. டீ.சீ.சிரிவத்தன — தலைவர்
    பணிப்பாளர் - நிதி திட்டமிடல் அமைச்சு
    பணிப்பாளர் சபை உறுப்பினர்
    தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை

| | | |
|---|---|---|
| 02. | திருமதி நூர் றிஸ்னா அனீஸ்<br>பணிப்பாளர் - நிதி திட்டமிடல் அமைச்சு<br>(2010.11.04 - 2011.04.06 வரை) | தலைவர் |
| 03. | திரு. லலித் யூ. கமகே - சட்டத்தரணி<br>பணிப்பாளர் சபை உறுப்பினர்<br>தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை | குழு அங்கத்தவர் |
| 04. | திரு. ஜே.கே.பத்மசிரி<br>பணிப்பாளர் (நிதி மற்றும் நிர்வாகம்)<br>தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை | குழு அங்கத்தவர் |
| 05. | திரு. எச்.டீ.ஆரியரத்ன<br>கணக்காய்வு அத்தியட்சகர்<br>கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம்<br>மாத்தறை | அவதானி |
| 06. | திரு. எஸ்.சீ.வனிகதுங்க<br>உள்ளகக் கணக்காய்வாளர்<br>தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை | குழுவின் அமைப்பாளர் |

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவில் நிறைவேற்று அதிகாரமற்ற இரண்டு பணிப்பாளர்கள் இடம்பெற்றுள்ளனர். அதாவது, திருமதி நூர் றிஸ்னா அனீஸ் 2010.11.04 ஆம் திகதி முதல் 2011.04.06 ஆம் திகதி வரை நிதி அமைச்சைப் பிரதிநிதித்துவப்படுத்தி குழுவில் அங்கத்துவம் வகித்திருந்தார். பின்னர், 2011.04.08 ஆம் திகதி முதல் திரு.டீ.சி.சிரிவத்தன அவர்கள் நிதி அமைச்சைப் பிரதிநிதித்துவப்படுத்தி குழுவில் அங்கத்துவத்தைப் பெற்றார்.

**கூட்டங்கள்**

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு 2011 ஆம் ஆண்டில் ஐந்து தடவைகள் கூடியது (ஜனவரி, ஏப்ரல், ஜூலை, ஒக்டோபர், டிசம்பர்) பணிப்பாளர் (கொள்கை திட்டமிடல்) மற்றும் பணிப்பாளர் (திட்ட அமுலாக்கம்) ஆகியோரும் சம்பந்தப்பட்ட ஏனைய அதிகாரிகளும் காலத்திற்குக் காலம் அழைப்பின் பேரில் இந்தக் கூட்டங்களில் சமூகமளித்திருந்தனர். குழுவின் மேற்குறிப்பிட்ட செயற்பாட்டின் அடிப்படையில் தீர்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

**நிதித்துறை அறிக்கைகள்**

அதிகார சபையின் கணக்கியல் மற்றும் நிதித்துறை நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யும் பொறுப்பின் ஒரு பகுதியாக, வருடாந்த கணக்கியல் மற்றும் நிதித்துறை அறிக்கைகளை இலங்கை கணக்கியல் தரத்திற்கு இணங்கிக்கொள்வது பற்றியும், அந்த அறிக்கையை தயாரிப்பது சம்பந்தமாகவும், முகாமைத்துவத்தினருடன் கலந்துரையாடி குழு மீளாய்வு செய்துள்ளது. இதற்கமைய பொருத்தமான தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டன.

### இடர்களும் கட்டுப்பாடுகளும்

ஆய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் அதிகார சபையின் கணக்கியல் வழிமுறைகளையும், உள்ளகக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளையும், குழு மீளாய்வு செய்து, தேவை ஏற்பட்ட இடங்களில் அவற்றை ஒழுங்கமைக்க நடவடிக்கைகளை மேற்கொண்டது.

### உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு திணைக்களத்தின் சுதந்திரம் மற்றும் கணக்காய்வு வழிமுறைகளின் முன்னேற்றம் என்பனவற்றின் வருடாந்த மதிப்பீட்டை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு பொறுப்பேற்றிருந்தது. இந்த வகையில், கணக்காய்வு அறிக்கைகளின் எல்லை மற்றும் அவற்றின் மீதான முகாமைத்துவத்தின் நடவடிக்கைகள் உட்பட உள்ளகக் கணக்காய்வு அணுகுமுறைகள், வழிமுறைகள், கணக்காய்வு அறிக்கைகள் என்பனவும் குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டன. அமைப்பாளர் என்ற வகையில், உள்ளகக் கணக்காய்வாளர் சகல உள்ளகக் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களிலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை தேவையின் அடிப்படையில் அழைத்திருந்தார். திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட உள்ளகக் கணக்காய்வுகள், விசாரணைகள் என்பனவற்றின் முக்கிய தீர்மானங்களின் தொகுப்பை காலத்திற்குக் காலம் இந்தக் குழுவிற்கு அவர் சமர்ப்பித்துள்ளார்.

### சட்டதிட்டங்களுக்கு அமையாமை

நியதி மற்றும் உள்ளகச் சட்டங்கள், பிரமாணங்கள் என்பன முகாமைத்துவத்தினரால் கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்பதை அவதானிக்கவென உருவாக்கப்பட்ட வழிமுறைகள் போதியதாக உள்ளனவா என்பதை குழு மீளாய்வு செய்துள்ளது. நிதி மற்றும் நிர்வாக வழிமுறைகள், நடவடிக்கைகள், சம்பவங்கள் என்பனவற்றின் வெளிப்படைத்தன்மை சம்பந்தமான அறிக்கையை உள்ளகக் கணக்காய்வாளர் ஒழுங்கான அடிப்படையில் கணக்காய்வுக் குழுவுக்குச் சமர்ப்பித்துள்ளார்.

### தவறுகள் மற்றும் ஊழல் தொடர்பான முறைப்பாடுகள்

ஊழியர்களினால் தார்மீக உணர்வுகள் மீறப்படல், மோசடி நிலைமையை உருவாக்குதல் என்பன பற்றி அதிக எண்ணிக்கையானோர் குழுவின் கவனத்திற்குக் கொண்டுவந்ததையடுத்து, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு இவை பற்றி மீளாய்வு செய்துள்ளது. கணக்காய்வுப் பிரிவினரின் தவறுகளையும், மோசடிகளையும் கண்டுபிடித்துத் தடுப்பதற்கென முகாமைத்துவத்தினரால் அறிமுகம் செய்யப்பட்ட பலதரப்பட்ட வழிமுறைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு பூரண சுதந்திரத்தை குழு நிச்சயித்துள்ளது. இத்தகைய விடயங்கள் சம்பந்தமான சுதந்திர விசாரணைகளை பாதுகாப்பதற்கென உருவாக்கப்பட்ட வழிமுறைகள் பொருத்தமானவை என்பதையும் குழு நிச்சயித்துள்ளது.

**டீ.சீ.சிரிவத்தன அவர்கள்**
தலைவர்-கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு
பணிப்பாளர் - அரச வர்த்தகத் திணைக்களம்
நிதி, திட்டமிடல் அமைச்சு

# 2011 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களின் பெறுபேறுகள் அறிக்கை

## 1. அறிமுகம்

இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை, தென் பகுதியின் பொருளாதார, சமூக, கலாசார அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு 1996ம் ஆண்டு 18ம் இலக்க இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தினால் அமைக்கப்பட்டதாகும். 1996ம் ஆண்டு முதல் இது வரையிலான 15 வருட காலத்தில் அதிகார சபை காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை ஆகிய நான்கு மாவட்டங்களிலும் இரத்தினபுரி மாவட்டத்தின் கொலன்ன மற்றும் எம்பிலிபிட்டிய ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகள் உள்ளடங்கும் வகையில் சகல பிரதேச எல்லைகளிலும் பிரதேச அபிவிருத்திக்காக பாரிய அபிவிருத்திப் பணிகளை நிறைவேற்றி வருகிறது. இவ்வாறான பின்ணணியில் 2011ம் ஆண்டுக்கான இந்த அறிக்கையைச் சமர்ப்பிப்பதன் நோக்கம், அதிகார சபையின் மூலம் 2011ம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட செயல்திட்டங்களின் பல்வேறு படிமுறைகளின் மூலம் அதிகார சபை மீது நேசம் வைத்துள்ள பல தரப்புக்களையும் சேர்ந்தவர்களும் அறிந்து கொள்வதற்காக சமர்ப்பிப்பதாகும். இதன் மூலம் அதிகார சபைக்கு நிதியொதுக்கும் திறைசேரியின் நிதி ஒதுக்கீடு, அதிகார சபையின் நோக்கங்களை அறிந்து கொள்ளவும், தென்பகுதி மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றவும் எந்தளவு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது தொடர்பில் விளக்கம் அளிக்கப்படும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்கள் அறிக்கைகளில் ஐந்து அத்தியாயங்களை உள்ளடக்கியதுடன், இதன் முதலாவது அத்தியாயத்தில் அறிமுகப்படுத்தலும், இரண்டாம் அத்தியாயத்தில் இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையின் சட்டரீதியான நிலை, பூகோள அதிகார எல்லை, சபையின் நோக்கம், அதிகாரம், பணி, நியதி, தகவல், தொலைநோக்கு, சேவை மற்றும் அதிகார சபையின் பெறுமானம் வரை குறிப்பிடப்பட்டுள்ளது. இதேபோன்று, மூன்றாவது அத்தியாயத்தின் மூலம் இலங்கை இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையின் இதுவரையிலான கடந்தகாலப் பயணப்பாதை குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் முறையாக தென் பகுதியின் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்த தெற்குப் பிரதேசத்தில் அதிகார சபை மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களின் தாக்கம் மூன்று கட்டங்களின் கீழ் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. நான்காம் அத்தியாயத்தில் இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை மூலம் 2011ம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலான பல படிமுறைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இறுதியாக, ஐந்தாவது அத்தியாயத்தில், 2011ம் ஆண்டின் மொத்தச் செயற்றிட்டங்கள் பற்றிய சாராம்சம் ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் வசதிகருதி இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையின் ஆரம்பம், இதன் கட்டமைப்பு உட்பட பணிகள் தொடர்பிலான விளக்கம் இரண்டாம் அத்தியாயத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

## 2. இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை பற்றிய அறிமுகம்

இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையை ஸ்தாபிப்பதற்கான சட்டரீதியான நிலை, அதிகார சபையின் எல்லைப்பகுதி, சபையின் நோக்கம், அதிகாரம், பணி தொடர்பில் கவனம் செலுத்தும் போது கீழ் காணும் வகையில் விளக்க முடியும்.

## 2.1 இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையின் சட்டபூர்வ நிலை

இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை 1996ம் ஆண்டு 18ம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டு, அரச நிதி மூலம் செயற்படும் ஒரு அரச நிறுவனமாகும்.

## 2.2 பூகோள அதிகார எல்லைப் பகுதி

இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையின் அதிகார எல்லைப் பகுதி அதிகார சபை சட்டத்தின் 3(1) பிரிவுக்கு அமைய, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, மொனராகலை ஆகிய நிர்வாக மாவட்டங்களையும், இரத்தினபுர மாவட்டத்தின் கொலன்ன, எம்பிலிபிடிய பிரதேச செயலாளர் பிாவுகளையும் உள்ளடக்கியக்கியதாகும். இதற்கு அமைய இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை 60 பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கிய பிரதேசத்தைக் கொண்டுள்ளது. இந்த அதிகார எல்லைகளை குறிப்பிடும் வரைபடம் அதிகார சபையின் இலச்சினையுடன் கீழே தரப்பட்டுள்ளது.




## 2.3 அதிகார சபையின் நோக்கம், அதிகாரம், பணிகள்

இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையின் நோக்கம், அதிகாரம், பணி சட்டத்தின் 12ம், 13ம் சரத்துக்களில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

### 2.3.1 அதிகார சபையின் நோக்கம் (சட்டத்தின் 12வது சரத்திற்கு அமைவாக)

(அ) உற்பத்தியை அதிகரித்தல், பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்தல், வருமானம் மற்றும் தொழில்வாய்பை விஸ்தரித்தரித்தல், அபிவிருத்தித் திட்டங்களை குறிப்பிட்ட பிரதேசங்களில் திட்டமிடல், நடைமுறைப்படுத்தல்.

(ஆ) குறிப்பிட்ட பிரதேசத்தின் மொத்த அபிவிருத்தித் திட்டத்தில் இனங்காணப்பட்ட திட்டங்களுக்கு முதலிடம் வழங்கி வரிவாக ஆராய்தல்.

(இ) குறித்த திட்டத்துக்கு அல்லது நிகழ்ச்சிக்கு வெளிநாட்டு நிதியை பயன்படுத்துவது தொடர்பில் உரிய அமைச்சரின் அமைச்சிடம் வேண்டுகோள் விடுத்தல்.

(ஈ) (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஆராய்தல் மற்றும் குறிப்பிட்ட பிரதேசத்தின் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்த அரசாங்க திணைக்களங்கள், ஏனைய அரசாங்க நிறுவனங்கள், அரச கூட்டுத் தாபனங்கள் மற்றும் பொது அல்லது தனியார் நிறுவனங்கள் மற்றும் பிரமுகர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளல் மற்றும்

(உ) (ஆ) பந்தியில் தெரிவிக்கப்பட்டுள்ள ஆய்வுசெய்தல், குறிப்பிட்ட பிரதேசத்தில் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்த வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு தனியார்துறை முகவர் நிறுவனங்களின் பங்கேற்பைப் பெற்றுக் கொள்ளல்

**2.3.2. அதிகார சபையின் அதிகாரங்களும், பணிகளும் (சட்டத்தின் 13வது சரத்திற்கு அமைவாக)**

(அ) அதிகார சபைக்கென உள்நாட்டு, வெளிநாட்டு முக்கியஸ்தர்களிடமிருந்து தொழில்நுட்ப மற்றும் நிதி உதவியைப் பெற்றுக் கொள்ளல்

(ஆ) குறிப்பிட்ட பிரதேசத்தின் விஷேட அபிவிருத்தித் திட்டம் தொடர்பில் ஆராய்தல் மற்றும் திட்டங்களை நடைமுறைப்படுத்த உள்நாட்டு வெளிநாட்டு பங்கேற்பைப் பெற்றுக் கொள்ளல்.

(இ) குறிப்பிட்ட பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வேலைத் திட்டங்களை திட்டமிடும் போது ஒத்துழைப்புடன் செயற்படுமாறு, இத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவது தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கத்தின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய பிரமுகர்களிடமும் வேண்டுகோள் விடுத்தல்.

(ஈ) அதிகார சபையினால் பூர்த்தி செய்யப்பட்ட திட்டங்களை பொறுப்பேற்று, பராமரித்து, ஒழுங்குபடுத்துமாறு ஜனாதிபதியின் அங்கீகாரத்துடன் அரசாங்கத்தின் அமைச்சுக்கள், திணைக்களங்கள், மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்தல்.

(எ) அதிகார சபையின் பணிகளை நிறைவேற்ற உரிய ஒவ்வொரு விடயம் பற்றி அதிகார சபையிலேயே திணைக்களங்களையும், முகவர் நிலையங்களையும் அமைத்தல்.

(ஏ) குறிப்பிட்ட பிரதேசத்தின் பொருளாதார, சமூக அபிவிருத்தியுடன் தொடர்புடைய ஆய்வுகளை நடத்துதல்.

(உ) குறிப்பிட்ட பகுதியில் குறித்த அபிவிருத்தித் திட்டம் தொடர்பில் சுற்றாடல் தாக்கங்கங்களை மதிப்பிட்டு அறிக்கை தயாரித்தல்.

(ஊ) அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தத் தேவையான பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளும் நோக்குடன் காலத்துக்குக் காலம் அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்படும் கேள்விப்பத்திர நடைமுறைக்கு அமைவாக கேள்விப் பத்திரங்களை வழங்குதல்.

(ஒ) குறிப்பிட்ட பகுதியில் அதிகார சபையினால் நிறைவேற்றப்பட்ட சேவைகளுக்காக கட்டணத்தை நிர்ணயித்தல் அல்லது கட்டணம் அறவிடுதல்.

(ஓ) குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்த அவசியமான அலுவலகத் தேவை உபகரணங்கள் அல்லது ஏனைய பொருட்களைக் கொள்வனவு செய்தல், பராமரித்தல், நிர்மாணித்தல், கையேற்றல், மீளமைத்தல் அல்லது தயாரித்தல்.

(ஔ) பொது அல்லது தனியார் நிறுவனத்தின் மூலம் அல்லது பொது அல்லது தனியார் நிறுவனத்தின் மூலமோ இணைந்தோ அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

(ஃ) நிதி என்ற விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்துடன் இலங்கையின் பிரதான மூலங்களிடம் இருந்து நிதியை கடனாகப் பெறல், நிதியைப் பெறல், பிணைப்புக்களை ஏற்றல்.

(க) நிலையான சொத்து எதனையும், எந்தவகையிலும் பொறுப்பேற்றல், வைத்திருத்தல், வரி அறவிடுதல் அல்லது வாடகைக்கு விடல், அடகு வைத்தல், விற்பனை செய்தல்

(கா) அரசியல் அமைப்பு மற்றும் ஏனைய எழுதப்பட்ட சட்ட ஒழுங்குகளுக்கு அமைவாக அதிகார சபையின் நோக்கங்களை நிறைவு செய்துகொள்ள அல்லது சட்டத்தின் கீழ் அதிகார சபையின் அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதற்கான முறைகள் அல்லது வழிவகுக்கும் அனைத்து செயற்பாடுகளும்.

## 2.4 கூட்டிணைக்கப்பட்ட தகவல்கள்

இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையின் கூட்டிணைக்கப்பட்ட தகவல்களாக அதிகார சபையின் தொலைநோக்கு, பணிகள், பெறுமானம் என்பவற்றை பின்வருமாறு விளக்க முடியும்.

### 2.4.1 தொலைநோக்கு

எமது தொலைநோக்கானது, இளைஞர், யுவதிகளுக்கு கவர்ச்சிகரமான மற்றும் சவால்களைக் கொண்ட வாய்ப்புக்களை ஏற்படுத்தி, துரிதமாக அபிவிருத்தி கண்டுவரும் ஆசிய பசுபிக் வயலத்துக்கான நுழைவுப் பாதையாக இப்பகுதியை திறந்தது சுற்றாடல் ரீதியாக தாங்கிக்கொள்ளும் வகையிலும், கலாசார ரீதியில் ஏற்பட்ட சூழலில், பொருளாதார ரீதியில் சுபீட்சமடைந்த தென் இலங்கையை உருவாக்குதல்.''

### 2.4.2 பணி

எமது பணியானது, சவால்மிக்க வாய்ப்புக்களைக் கொண்ட சூழலில், உயர்மட்ட வாழ்க்கை நிலையில், பிரதேசத்தின் வளங்கள் மற்றும் தேவைகளை அடையாளம் கண்டு, தனியார்துறை மற்றும் முகவர் நிலையங்களை தொடர்புபடுத்தி, திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி செய்தலும், இலக்கு நிர்ணயிக்கப்பட்ட மட்டத்தில் மொத்த தேசிய உற்பத்தியை அடைந்துகொள்ள ஒத்துழைப்பு வழங்குதலும், பிரதேசத்தின் மொத்த தேசிய உற்பத்தியின் துரிதமான வளர்ச்சிக்கு ஒத்துழைத்தலுமாகும்.

#### 2.4.3 பெறுமானம்

எமது பெறுமானங்களாவன,

- வாடிக்கையாளர்களுக்காக அர்பணிப்புடன் கூடிய சேவை
- ஒத்துழைப்பு மற்றும் நிபுணத்துவத்தை அடைவதற்கான வலுவூட்டல்.
- ஒழுங்கு நெறி
- ஏனையவர்களுக்கு மதிப்பளித்தல்.
- செவிமடுத்தல், எண்ணுதல், சவால்களைப் பொறுப்பேற்றல், சிறப்பாக பணியாற்றல்
- பணத்திற்கேற்ப பொறுப்புடன் கூடிய, தரமான உயர்ந்தபட்ச செயற்றிட்டத்துடன் கூடிய சேவையை உறுதிப்படுத்தல்.
- உந்துசக்தியுடன் கூடிய ஊழியர் குழாத்தை தென் பகுதி அபிவிருத்தி பணியில் ஈடுபடுத்தல்.

2011ம் ஆண்டின் இந்த செயற்றிட்ட அறிக்கையை ஆராய்பவர்களுக்கு அதிகார சபையின் ஆரம்பப் பயணப் பாதை மற்றும் முறையாக நடைமுறைப்படுத்தப்பட்ட முறை தொடர்பில் விளக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்கு வசதியாக இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையின் ஆரம்பம் முதல் 2011ம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்ட பணிகள் தொடர்பான விளக்கம், 3ம் அத்தியாயத்தில் முன்வைக்கப்படும்.

## 3. 1996 முதல் 2010 வரையிலான காலப்பகுதியின் அபிவிருத்தி நடவடிக்கைகள்

இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர், கடந்த 15 வருடங்களில், பல்வேறு பங்கேற்புக்களின் ஊடாக, தென் பகுதியில் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. தென் பகுதியின் நலனைக் கருத்தில் கொண்டு, இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை நடைமுறைப்படுத்திய முறையை பின்வரும் மூன்று காலப்பகுதிகளின் கீழ் கலந்துரையாட முடியும்.

3.1 1996 முதல் 1998 வரையிலான காலப்பகுதி
3.2 1998 முதல் 2006 வரையிலான காலப்பகுதி
3.3 2007 முதல் 2011 வரையிலான காலப்பகுதி

மேற்கூறப்பட்ட மூன்று காலப்பகுதிகளில் ஆரம்பக் கட்டமான 1996 முதல் 1998 வரையான காலப்பகுதி, தென் பிராந்தியத்தில் புதிய அபிவிருத்திக்கான எதிர்பார்ப்புக்களுடன் பெருமளவு திட்டங்களை வகுத்த காலப்பகுதியாகக் கருதப்படும். அக்காலப்பகுதிகளில் செயற்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:

### 3.1 1996 முதல் 1998 வரையிலான காலப்பகுதி

இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை ஆரம்பிக்கப்பட்ட ஆரம் காலத்தில் அதாவது 1996 முதல் 1998ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில், அப்போதைய அரசாங்கத்தின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைய பாரியளவிலான அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டதோடு, நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும் கணிப்புக்களின் மூலம் தென் பகுதியை இலங்கையின் வினைத்திறன் வாய்ந்த பொருளாதார மத்திய நிலையமாக மாற்றியமைப்பதற்கு தேவையான பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான திட்டங்கள் முன்வைக்கப்பட்டன.

இதற்கமைய தெற்கு அபிவிருத்தி எண்ணக்கருவின் மூலம் மற்றும் தென் பகுதியின் நுழைவுப் பகுதியாக இனங்காணப்பட்ட பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் பூர்வாங்க ஆய்வை நடத்தி, திட்டமிட்டு தென் பகுதியை பொருளாதார கேந்திர நிலையமாக மாற்றியமைப்பதற்குப் பொருத்தமான பௌதீக மற்றும் மனித வளங்களினாலான பகுதியாக இனங்காட்டப்படுகிறது. இந்தக் கற்கையின் மூலம் இனங்காணப்பட்ட திட்டங்களை உரிய நிறுவனத்தின் மூலம் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளமை இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை பெற்ற வெற்றியாகும். இந்தத் திட்டங்கள் பின்வருமாறு அமைந்திருக்கும்.

- ஹம்பந்தோட்டை சர்வதேச துறைமுக நிர்மானம்
- தெற்கு அதிவேகப் பாதை
- தென் பகுதிக்கிடையிலான மாதிரி போக்குவரத்து வலையமைப்பு தொடர்பு பற்றிய யோசனை
- காலித் துறைமுக அபிவிருத்தி
- தெற்கின் சர்வதேச விமான நிலையம்
- மாத்தறை முதல் கதிர்காமம் வரை ரயில் பாதையை அமைப்பதற்கான யோசனை

இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையின் ஆரம்பப் பயணத்தின் முதல் பணியாக 1999ம் ஆண்டு முதல் 2006ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியைக் குறிப்பிட முடியும். இக்காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட பணிகள் தொடர்பில் பின்வரும் வகையில் விளங்கிக் கொள்ள முடியும்

### 3.2 1999 முதல் 2006 வரையிலான காலப்பகுதி

இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகார சபையின் அடிப்படை பணிகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் 1999ம் ஆண்டு முதல் 8 அபிவிருத்தி பிரிவுகளின் கீழ் அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. கைத்தொழில், பொருந்தோட்டம், மீன்பிடி, பயிற்சி, விவசாயம், காணி, சந்தைப்படுத்தல் சேவை என்பவற்றைக் குறிப்பிட முடியும். இந்தத் துறைகளின் கீழ் பிரதேச அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட பல திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. இதற்கமைய, குறிப்பாக, தென் பகுதியில் உள்ள சிறிய மற்றும் பாரியளவிலான அபிவிருத்தித் திட்டங்கள் மீது கவனம் செலுத்தி, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை தென்பகுதிக்கு அழைக்க பாரியளவிலான சேவையை நிறைவு செய்ததோடு, கைத்தொழில்களை ஏற்படுத்த தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. இந்தக் கைத்தொழில்களில் சிலவற்றை பின்வருமாறு குறிப்பிட முடியும்.

#### 3.2.1 மாத்தறை திஹகொட அனல் மின்நிலையம்

தொழிற்சாலைகளை நடைமுறைப்படுத்த தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் திட்டமாக திஹகொட ஒலியகொடவத்தை பகுதியின் அனல் மின் நிலையத்தை குறிப்பிட முடியும். இதற்கு 50 ஏக்கர் விசாலமான நிலப்பரப்பு இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையின் மஸ்தியஸ்தத்துடன் ஏஸ் பவர் ஜெனரேஷன் தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. தற்போது இந்த அனல் மின் நிலையத்தின் மூலம் 480 முதல் 576 மெகாவோட் மின்சாரம் தேசிய மின்சாரக் கட்டமைப்பில் இணைக்கப்படுகிறது.

### 3.2.2 மாத்தறை மிதிகம லோட் ஸ்டார் தொழிற்சாலை

தொழிற்சாலைகளை நடைமுறைப்படுத்த தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் மற்றுமொரு திட்டமாக மிதிகம பகுதியில் டயர் ஏற்றுமதிக்கான லோட் ஸ்டார் தொழிற்சாலையைக் குறிப்பிட முடியும். இதனை அமைப்பதற்கான காணி, உட்கட்டமைப்பு வசதிகள் அனுமதிப்பத்திரம் என்பவற்றைப்பெற ஏனைய நிறுவனங்களுடன் தொடர்பை ஏற்படுத்தும் நடவடிக்கை இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையின் மஸ்தியஸ்தத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் நேரடியாக 5,700 தொழில்கள் உருவாக்கப்பட்டுள்ளதோடு, ரப்பர் பால் விநியோகிக்கும் 2000க்கும் அதிகமானவர்களின் பொருளாதார மட்டம் தொழிற்சாலை நிறுவப்பட்டதன் மூலம் அதிகரித்துள்ளது. இத்திட்டத்தின் முக்கியத்துவமானது, இந்தத் தொழிற்சாலை மூலம் உற்பத்தி செய்யப்படும் டயர்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம், வருடாந்தம் குறிப்பிடத்தக்க அந்நியச் செலாவனியை நாம் பெற்றுக்கொள்கின்றோம் என்பதாகும்.

### 3.2.3 கும்பல்கம இசுரு செரமிக் உற்பத்தி நிறுவனம்

இது களிமண்ணைப் பயன்படுத்தி அழகிய பீங்கான் வகைகளை உற்பத்தி செய்யும் ஒரு தொழிற்சாலையாகும். இதற்கான முதலீடு 3 மில்லியன் ரூபாவாகும். இது உள்நாட்டு, வெளிநாட்டுச் சந்தைகளை இலக்காகக் கொண்ட ஒரு பிரதானமான தொழிற்சாலையாகும். இதன் நாளந்த உற்பத்தி 500 அலகுகள் என்பதோடு மாதாந்த வருமானம் 100,000 – 200,000 ரூபாக்கு இடைப்பட்டதாகும். நேரடியாக 11 தொழில் வாய்ப்புக்களும், மறைமுகமாக 4 தொழில் வாய்ப்புக்களும் உருவாக்கப்பட்டுள்ளன. இங்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் பாரியளவிலான கேள்வி நிலவியதோடு, உற்பத்திக்கு தேவையான கொள்ளளவு இங்கு நிலவும் குறைபாடகும். இக்குறைப்பாட்டை ஈடு செய்வதற்கென முதலீட்டாளர்களுக்கு சபை எப்போதும் உதவி புரிந்து வருகின்றது.

### 3.2.4 எம்பிலிபிட்டிய தொழில்முயற்சி கேந்திர நிலையம்

கைத்தொழிலை நடைமுறைப்படுத்த தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் மற்றுமொரு திட்டமாக எம்பிலிபிட்டிய தொழில்முயற்சி கேந்திர நிலையத்தை குறிப்பிட முடியும். முதலீட்டை வலுப்படுத்தும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டதுடன் இதன் மூலம் கைவிடப்பட்ட 06 கட்டடங்களை மறுசீரமைத்து வெற்றிகரமான 05 திட்டங்களை நடைமுறைப்படுத்த தேவையான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. இங்கு போக்கரி உற்பத்தி, வீட்டுப் பொருட்கள், அலுவலக உபகரணங்கள் தயாரித்தல் திட்டம் தொடர்பில் அச்சு ஊடகப் பிரசாரத்தை வழங்குதல், அப்பியாசப் புத்தக உற்பத்தி, கணணி மூலம் பதிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். நேரடியாக 120 தொழில் வாய்ப்புக்களையும், மறைமுகமாக 200 தொழில் வாய்ப்புக்களையும் உருவாக்க முடிவதோடு, மொத்த தேசிய உற்பத்திக்கு 05 மில்லியன் ரூபாவை வருடாந்தம் பெற்றுக் கொள்ளும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

### 3.2.5 மாத்தறை கம்புறுபிட்டிய ரட்டலங்காவத்த ஒடோலங்கா டயர் உற்பத்தி தொழிற்சாலை

தொழிற்சாலைகளை நடைமுறைப்படுத்தத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் மற்றுமொரு திட்டமாக, மாத்தறை கம்புறுபிட்டிய ரட்டலங்காவத்த ஒடோ லங்கா டயர் உற்பத்தித் தொழிற்சாலையை குறிப்பிட முடியும். இங்கு 96 மில்லியன் ரூபா முதலீடு செய்யப்பட்டுள்ளதுடன்,

டயர் உற்பத்திக்கு தேவையான பட்டியை தயாரிதல் மற்றும் உரிய பசை உற்பத்தி (இது ஆரம்பத்தில் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது) மேற்கொள்ளப்படுகிறது. இதற்கு 05 ஏக்கர் நிலப்பரப்பு வழங்கப்பட்டுள்ளதோடு, 80 பேருக்கான தொழில்வாய்ப்பு கிடைத்துள்ளது. இதன் மூலம் 400 மில்லியன் ரூபா அந்நியச் செலாவணியை சேமிக்க முடியும். இங்கு மூலப்பொருளாகக் காணப்படும் ரப்பருக்கான தேசிய கேள்விக்கான விநியோகத்தின் போது சிறிய 2,000 ரப்பர் தோட்ட உரிமையாளர்களின் வருமானத்தை மேம்படுத்த முடியும்.

### 3.2.6 செயலிழந்து காணப்பட்ட தேயிலை தொழிற்சாலையை மீளக் கட்டியெழுப்பல்

பல வருடங்களுக்கு முன்னர் செயலிழந்து காணப்பட்ட தேயிலைத் தொழிற்சாலையை கட்டியெழுப்பி, தென் பகுதியின் பொருளாதாரத்தில் பாரிய பணியை மேற்கொள்ளக் கிடைத்தமை தெற்கு அபிவிருத்தி அதிகார சபைக்குக் கிடைத்த மற்றுமொரு வெற்றியாகும். இதில், மாத்தறை கலகாவ தேயிலை தொழிற்சாலை, காலி தவளம ஜஸ்மின்வலி தேயிலைத் தொழிற்சாலை, வலஸ்முல்ல ஹந்துகல தேயிலைத் தொழிற்சாலை மற்றும் கொலன்ன பனில்கந்த தேயிலைத் தொழிற்சாலை என்பன அடங்குவதுடன் இந்த அனைத்துத் திட்டங்கள் மூலமும் அந்நியச் செலாவணியை ஈட்டும் சந்தர்ப்பம் கிடைத்தமை நாம் பெற்ற மற்றுமொரு வெற்றியாகும்.

இதன் மூலம் சிறிய மற்றும் நடுத்தர அபிவிருத்தித் திட்டங்களுக்காக உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு மேலதிகமாக, இந்தக் காலப்பகுதியில் இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையினால் அனைத்து அதிகார எல்லைப் பகுதிகளில், சகல பிரதேச செயலாளர் பிரிவுகளும் உள்ளடங்கும் வகையில் தயாரிக்கப்பட்ட குறுகிய கால அபிவிருத்தி திட்டத்தின் மூலம், கிராமியப் பொருளாதாரத்தை அதிகரிக்க ஒத்துழைப்பு வழங்கப்படுகிறது. விடேமாக, இதன் கீழ் கிராமிய விவசாய பொருளாதாரத்தை போன்று தோட்டப் பொருளாதாரத்துக்கு பாரிய ஒத்துழைப்பை வழங்கி, நிலையான அபிவிருத்தி செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

மேலே குறிப்பிடப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களின் மூலம், விஷேடமாக தென் பகுதியில் உற்பத்தியை அதிகரிக்க பாரிய ஒத்துழைப்பு கிடைப்பதுடன், மற்றும் வறுமைக்கோட்டின் கீழ் அதிகமான கிராமங்களில் வாழும் பெரும்பாலான மக்களின் அடிப்படை வசதிகளை இனங்கண்டு, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக கஷ்டப் பகுதிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம் சகல பிரதேச செயலகப் பிரிவுகளும் உள்ளடங்கும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் நகரிலிருந்து தூரத்தில் இருந்த பல மக்களுக்கு புதிய பொருளாதார பங்கேற்புக்கு முகம்கொடுக்கும் வல்லமையும், தைரியமும் கிடைத்தது. மேற்குறிப்பிட்ட நோக்கத்தை நிறைவேற்ற, ஒன்றிணைந்த சமூக பொருளாதார அபிவிருத்தி வேலைத்திட்டம் என்ற பெயரில் புதிய எண்ணக்கருவின் கீழ் கிராமங்களில் சமூக பொருளாதார மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இதைத் தொடர்ந்து, இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையின் ஆரம்ப பயணத்தில், இரண்டாவது பணியை கடந்து, புதியதொரு சிந்தனையில் பங்கேற்றது. 2007ம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் விபரம் பின்வருமாறு:

### 3.3. 2007 முதல் 2010 வரையான காலப்பகுதி

2007ம் ஆண்டின் அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் கவனம் செலுத்தும் போது எமது பயணப் பாதை கஷ்டப் பகுதி அபிவிருத்தி என்ற எண்ணக்கருவுக்கு அப்பால் சென்று புதிய தொலைநோக்கின் கீழ் ஒன்றிணைக்க நேர்ந்தது. 2007ம் ஆண்டு முதல் மஹிந்த சிந்தனை தேசியக் கொள்கையில் இணைந்து ஜாதிகசவிய, கமநெகும அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் கிராமிய வாழ்வுக்கு உந்துதல் அளிக்கும் பொறுப்பு, இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்டது. இதற்கமைய ஜாதிகசவிய, கமநெகும அபிவிருத்தித் திட்டங்களின் 03 தலைப்புக்களுக்கு அமைய அதாவது, பொருளாதார மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி ஆன்மீக மற்றும் அபிவிருத்தி என்ற முக்கிய அடிப்படையில் இனங்காணப்பட்ட வேலைத்திட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட மக்களின் எண்ணக்கருவாக தயாரிக்கப்பட்ட கிராமியத் திட்டங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டன. மக்களின் பங்களிப்பை மையமாகக் கொண்ட எண்ணக்கருவைக் கருத்திற்கொண்டு, அவர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் முகமாக அவர்களின் கருத்துக்கள் மற்றும் யோசனைகளை உள்ளடக்கியதாக தயாரிக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் (VDP) கீழ் செயற்பட்டமை இதன் விசேடத்துவமாகும்.

இதற்கமைய, ஜனாதிக சவிய - கமநெகும அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் காலி, மாத்தறை, ஹம்பந்தோட்டை ஆகிய 03 மாவட்டங்களிலும், ஒரு பிரதேச செயலாளர் பிரிவில் ஒன்று என்ற வகையில் 47 கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன. காலி மாவட்டத்தில் 18 கிராமங்களும், மாத்தறை மாவட்டத்தில் 12 கிராமங்களும், ஹம்பந்தோட்டை மாவட்டத்தில் 17 கிராமங்களும் இதில் அடங்கும். 2007 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களையும் உள்ளடக்கிய வகையில் 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களில் 150 கிராமங்களைத் தெரிவு செய்து முன்னுரிமை அடிப்படையில் அக்கிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட வேலைத்திட்டங்கள் பல செயற்படுத்தப்பட்டன. அதற்கமைய 2008 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையான 03 வருட காலப்பகுதியில் ஜாதிகசவிய - கமநெகும அபிவிருத்தித் திட்டத்திற்கென சபையினால் செலவிடப்பட்ட மொத்த தொகை ரூபா 694 மில்லியன் ஆகும். அதன்மூலம் தெளிவாக சபையின் அடிப்படைக் கோட்பாடுகளை பாரியளவில் அடைந்து கொள்ள முடிந்துள்ளது.

இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக இதுவரை மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைகள் தொடர்பான தெளிவான விளக்கம் இந்த அறிக்கையின் மூலம் தெரிவிக்கப்படுவதுடன், 2011 ஆம் ஆண்டின் கடமைகள் தொடர்பான தெளிவான விளக்கங்கள் 04வது அத்தியாயத்தில் முன்வைக்கப்படும்.

#### 4. 2011 ஆம் ஆண்டின் செயற்றிட்டங்கள்

2011 ஆம் ஆண்டில் தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையின் எல்லைக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட 150 கிராமங்களில் தற்போதைய அரசாங்கத்தின் புதிய வேலைத்திட்டமான ‘திவிநெகும’ மற்றும் இதுவரை செயற்பட்ட ‘ஜாதிகசவிய - கமநெகும’ திட்டத்தை மேலும் முன்னோக்கி எடுத்துச்சென்று, அதற்கான வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. தற்போதைய அரசாங்கத்தின் புதிய தொலைநோக்கான வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் சமூக அபிவிருத்தியின் மூலம் 2016 ஆம் ஆண்டளவில் சுபீட்சமான கிராமம் ஒன்றை உருவாக்கும் மாபெரும் செயற்பாட்டை யதார்த்தமாக்கும் பொறுப்பு சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. அதற்காக 2011 ஆம் ஆண்டில் பிரதானமாக ஐந்து வகையான திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. அதாவது, திவிநெகும வீட்டுப் பொருளாதார பிரிவுகளின் அபிவிருத்தி, திவிநெகும வலுவூட்டலுக்கான அடிப்படை வசதிகள் அபிவிருத்தி திட்டங்கள், ஜாதிகசவிய - கமநெகும குறைந்த வருமானம் பெறும் வீடுகளுக்கான வேலைத்திட்டம், வருமான வழிகளை ஏற்படுத்தும் வேலைத்திட்டம் மற்றும் ஐந்து வருட நிறுவனத்திற்குரிய வேலைத்திட்டம் என்பனவாகும்.

அதற்கமைய, 2011 ஆம் ஆண்டில் மொத்த அபிவிருத்தி இலக்குகளையும் அடைந்துகொள்ள ‘திவிநெகும’ வேலைத்திட்டம், ஜாதிகசவிய - கமநெகும தேசிய வேலைத்திட்டம் மற்றும் தலைமை அலுவலகக் கட்டடத்தை அமைப்பதற்கான பணத்தைச் செலுத்துதல் உட்பட ஏனைய செலவுகளுக்கும் மத்திய திறைசேரியிலிருந்து ரூபா 300.5 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதற்கமைய, தயாரிக்கப்பட்ட திட்டத்தின் ஆரம்ப கட்டமாக, ஜாதிகசவிய - கமநெகுமவுக்குரிய திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. ஆனால், பின்னர், அமைச்சின் ஆலோசனைக்கு அமைய, அதில் திவிநெகும புதிய தேசிய வேலைத்திட்டத்தையும் உள்ளடக்கி, ஆரம்பத் திட்டத்தை புனர்நிர்மாணம் செய்து முன்வைக்கப்பட்டதுடன், அது, அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர், மத்திய திறைசேரியில் இருந்து 2011 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் நிதி கிடைக்கப்பெற ஆரம்பித்தது. இவ்வாறு சிறிதளவு தாமதித்து திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டமையும், நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெற்றமையும் காரணமாக, இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையினால் தயாரிக்கப்பட்ட ரூபா 300.5 மில்லியன் பெறுமதியான அபிவிருத்தி வேலைத்திட்டத்தை செயற்படுத்துவது சபைக்கு மாபெரும் சவாலாக அமைந்தது. அதாவது, உரிய பிரதேசங்களில் குறிப்பிடப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களை உடனடியாக ஆரம்பத்து இந்த வருடத்திலேயே பூர்த்தி செய்வதாகும்.

இவ்வாறானதொரு நிலைமையின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள ரூபா 300.5 மில்லியனில் இருந்து ரூபா 152.26 மில்லியன் செலவிடப்பட்டு வருட இறுதியளவில் 50.67% நிதி பெறுபவர்களையும், பௌதீக ரீதியில் 1,048 வேலைத்திட்டங்களில் 529 வேலைத் திட்டங்களை முழுமையாகப் பூர்த்தி செய்து 51% பௌதீக பெறுபேறுகளையும் பெற்றுக்கொள்ள முடிந்தமை சபை அடைந்துள்ள மாபெரும் வெற்றியாகும். இது தொடர்பான விபரங்களை பின்வரும் வரைபடம் எடுத்துக்காட்டுகின்றது.

**இலங்கை தென்பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை - 2011 ஆம் ஆண்டின் வேலைத்திட்டங்களுக்கு அமைய அபிவிருத்தி செலவுகள்**




*ஆதாரம்: இலங்கை தென்பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையின் தகவல் தளத்திலிருந்து*

இந்த அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் மூலம் 2011 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த தேசிய உற்பத்திக்கு ரூபா 280 மில்லியன் அளவில் சபையினால் பங்களிப்பு வழங்கப்பட்டது. அதாவது, திவிநெகும வீட்டுப் பொருளாதார பிரிவு வேலைத்திட்டத்தின் செயற்திட்டங்களுக்கு ரூபா 154 மில்லியனும், ஜாதிகசவிய - கமநெகும வேலைத்திட்டத்தின் செயற்பாடுகளுக்கு ரூபா 126 மில்லியன் என்ற வகையிலுமாகும்.

இவ்வாறு 2011 ஆம் ஆண்டில் மேற்கூறப்பட்ட ஐந்து வகையான வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டதுடன், அந்த ஒவ்வொரு திட்டங்களுக்குமான விபரங்களும் பின்வரும் வகையில் அமைந்துள்ளது:

### 4.1 ‘திவிநெகும’ வீட்டுப் பொருளாதாரப் பிரிவு அபிவிருத்தி வேலைத்திட்டம்

கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்தல் தற்போதைய அரசாங்கத்தின் ‘மஹிந்த சிந்தனை’ திட்டத்தின் ஒரு முக்கிய கோட்பாடாகும். கிராமிய மக்களின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்து, நலன்புரி எண்ணங்களில் இருந்து விடைபெற வேண்டுமென்பது அதன் ஆழமான கருத்தாகும். அதற்கமைய ‘திவிநெகும’ 10 இலட்சம் வீட்டுப் பொருளாதாரப் பிரிவுகள் என்ற வேலைத்திட்டத்தின் கீழ் 15,000 வீட்டுப் பிரிவுகளின் பொருளாதார நிலைமையை முன்னேற்றுவதை நோக்கமாகக் கொண்டு இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை, தென் பிராந்தியத்தில் 2011 ஆம் ஆண்டில் பொருளாதார அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் பலவற்றை செயற்படுத்தியது. அதாவது, இதன் கீழான பிரதான மூன்று தலைப்புக்களாக வீட்டுக் கைத்தொழில் அபிவிருத்தி, விவசாய அபிவிருத்தி, மீனவ மற்றும் கால்நடை வள அபிவிருத்தி என்ற அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. இவ்வனைத்து வேலைத்திட்டங்களின் மூலமும், தென் பிராந்தியத்தில் உணவு உற்பத்தியில் மேலதிகமாக உற்பத்தி காணப்பட்டதனால், அதன் மூலம் மக்களின் போஷாக்கு நிலை உயர்வடைந்தது மட்டுமன்றி அவற்றை விற்பனை

செய்வதன் மூலம் மேலதிக வருமானத்தைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பும் அந்தக் குடும்பங்களுக்குக் கிடைத்தது.

மேலே குறிப்பிடப்பட்ட அபிவிருத்தி வேலைகள் 06 பிரிவுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. அதாவது, கைத்தொழில் அபிவிருத்தி, பெருந்தோட்ட அபிவிருத்தி, விவசாய மற்றும் கால்நடை வள அபிவிருத்தி, மனிதவள மற்றும் பயிற்சி அபிவிருத்தி, மீன்பிடி மற்றும் கால்நடை வள அபிவிருத்தி மற்றும் காணி செயற்பாட்டு அபிவிருத்தி வேலைத் திட்டங்களாகும். அந்த ஒவ்வொரு பிரிவுக்குமான அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் விபரங்கள் பின்வருமாறு:

### 4.1.1 கைத்தொழில் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள்

கைத்தொழில் பிரிவின் கீழ் 2011 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட 150 கிராமங்களில் பல்வேறு தொழில் முயற்சித் திறமைகளைக் கொண்ட குடும்பங்களைத் தெரிவு செய்து, அவர்களின் தொழில் முயற்சி மற்றும் கைத்தொழிலை மேலும் விருத்தியடையச் செய்யவும், அதன் மூலம் குடும்பத்தின் வாழ்வாதார நிலையை உயர்த்திக் கொள்ளவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இது தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

- **தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்ப கொடுக்கல் வாங்கல் திட்டம்**

இதன் கீழ் தெரிவு செய்யப்பட்ட 150 கிராமங்களில் இனங்காணப்பட்ட துறைகளில் தொழில் அபிவிருத்தி பற்றிய ஆரம்ப விளக்கமளிப்பு மேற்கொள்ளப்பட்டு, தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்பக் கொடுக்கல் வாங்கல் வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இவ்வேலைத்திட்டத்தில் கலந்து கொண்டவர்களின் தேவைப்பாடு மற்றும் திறமையை மையமாகக் கொண்டு 422 தொழில் முயற்சியாளர்களுக்கு ரூபா 2.9 மில்லியன் செலவில் அவர்களது தொழில்களுக்கு தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டன.

மேலும் ‘திவிநெகும’ விசேட வேலைத்திட்டத்தின் கீழ் மாத்றை மாவட்டத்தின் பலுல்பிட்டிய கிராமத்தில் மூங்கில் குழாய் கைத்தொழிலாளர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்கவும், அவர்களின் பொதுச் சேவை மத்திய நிலையத்திற்கு மின்சாரம் வழங்கவுமென ரூபா 50,000 செலவிடப்பட்டது. இந்தக் கட்டத்திற்கு இலங்கை தொழில்நுட்ப அபிவிருத்தி நிலையத்திடமிருந்து ரூபா 200,000 பெறுமதியான இயந்திர உபகரணங்களும் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

மேலே குறிப்பிடப்பட்ட வேலைத்திட்டங்களின் மூலம் தமது வாழ்வாதார அபிவிருத்தியை பெற்றுள்ள ஒவ்வொரு தொழில் முயற்சியாளரினதும், மாதாந்த வருமானம் ரூபா 35,000 ஆக இருப்பதுடன், மாதாந்த இலாபம் ரூபா 7,000 ஆக அமைந்துள்ளது.




*ஆதுவ மதுருதூவ கிராமத்தின் பயனாளிகள்*

- **கிராமப் பெண்களின் உணவு உற்பத்தி, தொழில் முயற்சி அபிவிருத்தி வேலைத்திட்டம்**

இந்த வேலைத்திட்டம் சார்க் நிதியத்தின் அனுசரணையுடன் செயற்படும் 'பிரக்டிகல் அக்ஷன்' நிறுவனத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படுவதாகும். 2011 ஆம் ஆண்டில் இந்த வேலைத்திட்டத்திற்கு தென் பிராந்தியத்தில் 350 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டனர். இதில் 120 பேருக்கு உணவு உற்பத்தித் துறையில் உள்நாட்டு தொழில்நுட்பப் பயிற்சிகளும், 48 பேருக்கு இந்தியாவில் வெளிநாட்டு தொழில்நுட்பப் பயிற்சிகளும் வழங்கப்பட்டன.




***உள்நாட்டு சிற்றுண்டிகள் உற்பத்தி தொழில்நுட்ப பயிற்சி வேலைத்திட்டம் - கதிர்காமம்***

மேலும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விற்பனைக் கண்காட்சிகளிலும், சந்தைகளிலும் 35 தொழில் முயற்சியாளர்கள் கலந்துகொள்ளச் செய்யப்பட்டார்கள். அவர்களில் ஐந்து பேருக்கு தொடர்ச்சியாக வெளிநாட்டுக் கோரிக்கைகள் கிடைத்த வண்ணமுள்ளன. மொத்த வேலைத் திட்டத்தில் ஒரு பயனாளியின் மாதாந்த வருமானம் ரூபா 50,000 ஆக இருப்பதுடன், ஒருவரது மாதாந்த இலாபம் ரூபா 10,000 ஆகும். மேலும், இந்த வேலைத்திட்டத்தின் கீழ் தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையின் 10 அதிகாரிகளும் இந்தியாவில் பெண்கள் தொழில் முயற்சி அபிவிருத்தி தொடர்பாக சுற்றுலாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். வேலைத்திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூபா 10 மில்லியன் ஆகும். அதற்கான முழுச் செலவுகளையும் சார்க் அபிவிருத்தி நிதியத்தின் பிரக்டிகல் அக்ஷன் நிறுவனம் பொறுப்பேற்றுக்கொண்டது.

- **கிராமியக் கைத்தொழில்களுக்கு வங்கி நிதி வசதிகள் பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டம்**

இலங்கை மத்திய வங்கியுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் இத்திட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கி ஒதுக்கீடுகளின் மூலம் கைத்தொழிலாளர்களுக்கு விளக்கமளிக்கும் 28 ஒரு நாள் வேலைத்திட்ங்கள் நடத்தப்பட்டதுடன், அதற்காக ரூபா 140,000 செலவிடப்பட்டுள்ளது. இவ்வேலைத்திட்டத்தில் கலந்து கொண்ட 66 தொழில் முயற்சியார்களின் பல்வேறு விதமான தொழிற்துறைகளுக்காக ரூபா 6.84 மில்லியன் கடனாக வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறான ஒவ்வொரு வியாபாரியினதும், சாதாரண மாதாந்த வருமானம் ரூபா 50,000 ஆக இருப்பதுடன், மாதாந்த இலாபம் ரூபா 10,000 ஆக இருக்கிறது.

- **தென் பிரதேசத்தில் தும்பு உற்பத்தி பிரிவுகள் அபிவிருத்தி வேலைத்திட்டம்**

ஒக்ஸ்பாம் (Oxfam) மற்றும் ருஹுணு பொருளாதார அபிவிருத்தி செயலகத்தின் நிதியுதவியுடன் தென் பிராந்தியத்தில் 30 தும்பு உற்பத்திப் பிரிவுகளை அபிவிருத்தி செய்ய தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இப்பிரிவுகளுக்கு லுணுவில மற்றும் துண்கண்ணாவ பிரதேசங்களில் தொழில்நுட்பப் பயிற்சிகளும், வெளிக்களப் பயிற்சிச் சுற்றுலாக்களும், முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சிகளும் வழங்கப்பட்டன. இதற்கான செலவு ரூபா 180,000 ஆகும். இப்பயிற்சிகள் காரணமாக, தும்பு உற்பத்திப் பிரிவுகளின் உற்பத்திப் பெறுமானத்தை அதிகரித்துக் கொள்ளவும் உற்பத்திச் செலவுகளை குறைத்துக்கொள்ளவும் முடிந்துள்ளது. மேலும், இதன் காரணமாக, ஒரு பிரிவின் மாதாந்த இலாபம் ரூபா 5,000 ஆல் அதிகரித்தது. தற்போது இந்த வேலைத்திட்டங்களின் அபிவிருத்திக்கான நிதி வசதிகளை பெற்றுக்கொள்வதற்காக வங்கிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

### 4.1.2 பெருந்தோட்டத் துறையினால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள்

2011 ஆம் ஆண்டில் பெருந்தோட்டத்துறையினால் பின்வரும் வேலைத்திட்டங்களும், செயற்பாடுகளும் நேரடியாகவும், சார்ந்த நிறுவனங்களுடனும் இணைந்து செயற்படுத்தப்பட்டன. அவற்றின் சாராம்சமான விபரங்கள பின்வருமாறு:

- **தேயிலைச்செடி பாத்தி அபிவிருத்தித் திட்டம்**

இவ்வேலைத்திட்டத்தின் கீழ் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. ‘திவிநெகும’ வேலைத்திட்டத்தின் கீழ் கிராமிய தேயிலைப் பொருளாதாரத்திற்கு மாபெரும் பங்களிப்பை வழங்கி வீட்டுத் தோட்ட அபிவிருத்திக்கான தேயிலைச் செடிகளை கிராமங்களில் இருந்தே பெற்றுக்கொள்ளவும், தேயிலைதோட்ட உரிமையாளர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டு தேயிலைச் செடி பாத்தி அபிவிருத்தி வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இந்தத் திட்டத்தின் மூலம், அதிக விளைச்சலைப் பெற்றுத்தரக்கூடிய தேயிலை குளோன்களைக் கொண்ட தேயிலைச் செடிகளை உற்பத்தி செய்ய தேவையான தொழில்நுட்ப அறிவு மற்றும் ஆலோசனைகள் என்பன தேயிலைச் செடி பாத்தி உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டதுடன், மேலும் செய்கை நடவடிக்கைகளுக்குரிய தேயிலைச் செடி கிளைகள் மற்றும் கன்றுகளை உற்பத்தி செய்வதற்கு தேவையான பொலிதீன் பைகள் (ஒரு பயனாளிக்கு மூவாயிரம் பைகள் வீதம்) வழங்கப்பட்டது.

இவ்வேலைத்திட்டத்தின் கீழ் 101 பயனாளிகளின் வருமானத்தில் அதிகரிப்பு ஏற்பட்டதுடன், சிறு தேயிலைத் தோட்டங்கள் அபிவிருத்தி அதிகார சபையினால் தொழில்நுட்ப அறிவு வளர்ச்சிக்கும் உயர்தரத்திலான உற்பத்திப் பொருட்களை பெற்றுக்கொள்வதற்கான உதவி வழங்கப்பட்டது. அத்துடன், இதன்மூலம் அதிக விளைச்சலைக் கொண்ட உயர் தரத்திலான 303,000 தேயிலைக்

குளோன்கள் தயாரிக்கப்படவும் எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், இக்கன்றுகளை கிராமங்களில் சிறிய தேயிலைத்தோட்ட உரிமையாளர்களுக்கு வழங்குவதன் மூலம், மூன்று வருடங்களின் பின்னர் இவற்றின் மூலம் தேயிலை உற்பத்தி ஆரம்பிக்கப்படவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இதன்மூலம் சுமார் ரூபா 01 மில்லியன் வரை சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் வருமானத்தை அதிகரிக்கவும், அத்தொகையை ஐந்து வருடங்களில் சுமார் ரூபா 16 மில்லியன் வரை அதிகரிக்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது.



*அத்துரெலிய தலஹகம தேயிலை நாற்றுக்களின் பாத்தி*

- **புதிய தேயிலைத் தோட்ட வேலைத்திட்டம்**

திவிநெகும வேலைத்திட்டத்தின் கீழ் கிராமிய தேயிலைப் பொருளாதாரத்திற்கு பெரும் பங்களிப்பை வழங்கி குறைந்த வருமானம் பெறும் சிறிய தேயிலைத்தோட்ட உரிமையாளர்களை (தேயிலைச் செய்கைக்கு ஏற்ற 20 பேர்ச் அல்லது அதற்குக் குறைவான காணியைக் கொண்ட) தேயிலைச் செய்கையில் ஈடுபடுத்துவதற்கு இவ்வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. இதனடிப்படையில், அதிக விளைச்சலைக் கொண்ட 230,015 உயர்தர தேயிலைச் செடிகள் 415 பயனாளிகளிடையே விநியோகம் செய்யப்பட்டன. இதன் போது, சிறிய தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபையினால் விவசாயிகளுக்கான தொழில்நுட்ப ஆலோசனை வழங்குதல், செய்கை மேற்கொள்வதற்கு ஏற்ற தேயிலைச் செடிகளைப் பெற்றுக்கொள்வதற்கு பாத்திகளை அமைத்தல் மற்றும் தேவையான செடிகளைப் பெற்றுக்கொள்ள ஒத்துழைப்பும் வழங்கப்பட்டது. அத்துடன், இவ்வேலைத்திட்டத்தின் மூலம் குறுகிய காலத்தில் அதாவது, மூன்று வருடங்களில் சுமார் ரூபா 1.5 மில்லியன் அளவிலான வருடாந்த வருமானத்தைப் பெறக்கூடியதாக இருக்கும் என்பதுடன், அது, முறையே அதிகரித்து ஐந்து வருடங்களில் சுமார் ரூபா 25 மில்லியன் வரை வளர்ச்சி பெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

- **தேயிலைத்தோட்ட புனர் நிர்மாணம்**

'திவிநெகும' வேலைத்திட்டத்தின் கீழ் கிராமியத் தேயிலை பொருளாதாரத்திற்கு பெரும் பங்காற்றும் நோக்குடன் தேயிலைத் தோட்ட புனர்நிர்மாண வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. இதன் நோக்கமானது, சிறிய தேயிலைத் தோட்டங்களை அபிவிருத்தி செய்து அவர்களது வருமான மட்டத்தை அதிகரிப்பதாகும். இதற்காக காணிகளிலுள்ள களைகளை அகற்றுதல், நிலத்தைப் பாதுகாத்தல், நிழல் மரங்களை நடுதல், துணை மரங்களை நடுதல் மற்றும் தேவையான தொழில்நுட்ப அறிவை வழங்குதல் என்பனவற்றின் மூலம் நீண்டகால பிரதிபலன்களை பெற்றுத்தரும் மற்றும் நீண்டகாலத்தில் பயனாளின் வருமானத்தை அதிகரிக்க வைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது, துணை மரங்களை நடுவதற்குத் தேவையான கன்றுகளை வழங்குவதும், காணிகளை துப்புரவு செய்தல், நிலத்தைப் பாதுகாத்தல்

மற்றும் துணை மரங்களை நடுவதற்கு நிதி உதவிகளும் வழங்கப்பட்டதுடன், இதன்போது 337 பயனாளிகள் பயனடைந்து கொண்டனர். அத்துடன், சிறிய தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபை விவசாயிகளுக்குத் தேவையான தொழில்நுட்ப அறிவை வழங்குதல், செய்கை மேற்கொள்ளத் தேவையான செடிகளை பாத்தியிடல் மற்றும் அவற்றைப் பெற்றுக்கொள்தல் என்பனவற்றுக்கும் உதவி வழங்கினர். இதன்மூலம் வருடாந்த தேயிலைக் கொழுந்து உற்பத்தியின் அதிகரிப்பு சுமார் 300,000 கிலோவாக இருக்கும் எனவும், ரூபா 01 மில்லியன் அளவிலான வருமான அதிகரிப்பையும் ஐந்து வருடங்களில் அந்த நிலைமை ரூபா நான்கு மில்லியன் வரை இருக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

- **கறுவா தட்டும் பயிற்சி மற்றும் உபகரணங்களை வழங்குதல்**

'திவிநெகும' வேலைத்திட்டத்தின் கீழ் கிராமியப் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்யும் வகையில் கறுவாச் செய்கை மேற்கொள்பவர்களின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் இந்த வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. இதன்போது, உயர்தரத்தில் தயாரிக்கப்பட்ட கறுவா உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளுக்கு அனுப்பி வைப்பதன் மூலம் அதிக வருமானம் பெறும் வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதற்கும் கறுவா தட்டுதல் சம்பந்தமாக செய்கை மேற்கொள்வோருக்கு புதிய தொழில்நுட்ப அறிவை வழங்குவது, அதற்குத் தேவையான உபகரணங்களை வழங்குவது என்பனவும் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன், இவ்வேலைத் திட்டத்தின் மூலம் 83 பயனாளிகளின் வருமானத்தை அதிகரிக்கக் கூடியதாக இருந்ததுடன், ஏற்றுமதி விவாய திணைக்களகத்தின் மூலம் இந்தத் தொழில்நுட்பப் பயிற்சிக்கான உதவிகளும் வழங்கப்பட்டன.

- **வீட்டுத் தென்னந்தோட்டங்களுக்கு இரசாயனப் பசளை வழங்குதல்**

தென் மாகாணத்தில் தென்னந்தோட்ட உரிமையாளர்கள் முகம்கொடுத்த தென்னை ஓலை சுருங்குதல் மற்றும் தென்னை ஓலைக்குருத்து அவிதல் போன்ற நோய்களுக்கு குறுகிய காலத் தீர்வாக இரசாயன பசளை இடுவதற்கு விவசாயிகளை ஊக்குவிக்கும் நோக்குடன் இந்த வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. இந்த நோய் காரணமாக, மூன்று இலட்சத்துக்கும் அதிகமான தென்னை மரங்களை அகற்ற வேண்டி நேரிட்டதுடன், தென் மாகாணத்தில் தெங்குச் செய்கையை அதிகரிப்பதற்காக குறுங்கால நடவடிக்கையாக விவசாயிகளுக்கு இரசாயனப் பசளை வழங்குவதும் அந்த இரசாயனப் பசளையைப் பயன்படுத்த விவசாயிகளை ஊக்குவிப்பதும் இதன்போது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளாகும். மேலும் தென்னை மரங்களை பராமரித்தல், பசளையிடுதல், நோய்களை இனங்காணுதல் மற்றும் அவற்றிற்குத் தீர்வு காண்பது பற்றி விவசாயிகளுக்கு தெங்கு அபிவிருத்தி சபை மூலம் தொழில்நுட்ப அறிவு வழங்கப்பட்டது. மேலும், இந்த வேலைத்திட்டத்தின் கீழ் 5,563 பயனாளிகள் நன்மையடைந்துள்ளதுடன், இதன்மூலம் வருடாந்த தேங்காய் உற்பத்தி 10% ஆல் அதிகரிக்கவும், அதன்மூலம் ரூபா 12 மில்லியன்

வருடாந்த வருமானத்தைப் பெறவும் ஒரு வருடத்திற்குள் தேங்காய் உற்பத்தியை 6 இலட்சத்தினால் அதிகரிக்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

- **கறுவாத் தோட்டங்கள் புனர்நிர்மாணம்**

'திவிநெகும' வேலைத்திட்டத்தின் கீழ் கிராமியப் பொருளாதாரத்திற்கு பெரும் பங்காற்றும் நோக்குடன் கறுவா தோட்ட புனர்நிர்மாண வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. இதனடிப்படையில் 64 பயனாளிகளின் சிறிய கறுவாத் தோட்டங்களை அபிவிருத்தி செய்து

அவர்களது வருமான மட்டத்தை அதிகரிக்கும் நோக்குடன் காணிகளில் களைகளை அகற்றுதல், மண் வளப் பாதுகாப்பு, நிழல் தரும் மரங்களை நடுதல், துணை மரங்களை நடுதல் மற்றும் தேவையான தொழில்நுட்ப அறிவை வழங்குதல் உட்பட நிதி வசதிகளும் வழங்கப்பட்டது. இதன்போது ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினால் விவசாயிகளுக்கு தேவையான தொழில்நுட்ப ஆலோசனை வழங்குதல், செய்கைக்குத் தேவையான மரங்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் பாத்திகளை அமைத்தல் போன்றவற்றுக்கு தேவையான உதவிகள் வழங்கப்பட்டன. இதன்மூலம் கறுவா உற்பத்தியில் அதிகரிப்பு எதிர்பார்க்கப்படுவதுடன், நீண்டகாலத்தில் பயனாளிகளின் வருடாந்த வருமானம் ரூபா 0.5 மில்லியன் முதல் 02 மில்லியன் வரை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த உற்பத்திகளை வெளிநாட்டுச் சந்தைகளுக்கு அனுப்புவதன் மூலம் நாட்டிற்கு அந்நியச் செலாவணியையும் பெற்றுக்கொள்ள முடியும்.



*ஹக்மன கறுவா தட்டுபவர்கள்*

- **புதிய கறுவாச் செய்கை**

'திவிநெகும' வேலைத்திட்டத்தின் கீழ் கிராமியப் பொருளாதாரத்திற்கு பெரும் பங்காற்றும் நோக்கில் குறைந்த வருமானம் பெறும் சிறிய தோட்ட உரிமையாளர்களை (கறுவாச் செய்கைக்கு ஏற்ற 20 பேர்ச் அல்லது அதற்கு குறைந்த) கறுவா செய்கையில் ஈடுபடுத்துவதற்கு இவ்வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. இதன்போது 16,175 உயர் தரத்திலான கறுவாச் செடிகள் 22 பயனாளிகளிடையே பகிர்ந்தளிக்கப்பட்டன. இதன்போது ஏற்றுமதி விவசாய திணைக்களம் விவசாயிகளுக்குத் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குதல், செய்கைக்குத் தேவையான செடிகளைப் பெற்றுக் கொள்வதற்கான பாத்திகளை இடுதல், மற்றும் செடிகளைப் பெற்றுக்கொள்வதில் உதவியளித்துள்ளனர். இதன்மூலம் சுமார் மூன்று வருடங்களில் பயனாளிகளுக்கு வருடாந்தம் ரூபா 0.2 மில்லியன் அளவில் வருமானம் பெறக்கூடியதாக இருப்பதுடன், சுமார் ஐந்து வருடங்களில் அது ரூபா 0.6 மில்லியன் வரை வளர்ச்சிடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

- **கித்துள் சார்ந்த உற்பத்திகள் அபிவிருத்தி வேலைத்திட்டம்**

இதன்கீழ் கித்துள் அதிகமாக காணப்படும் கிராமங்களிலுள்ள பயனாளிகளுக்கு அவர்களது பாரம்பரிய கைத்தொழில்களை அபிவிருத்தி செய்துகொள்ள தொழில்நுட்ப அறிவு வழங்கப்பட்டதுடன், உற்பத்திப் பெறுமானங்களை அதிகரிப்பதற்கும் உற்பத்திகளின் தரத்தை அதிகரிப்பதற்கும் தேவையான உபகரணங்களை வழங்குதல், தொழில்நுட்ப பயிற்சி மற்றும் பூக்களைப் பதனிடுவதற்குத் தேவையான உபகரணங்களை வழங்குதலும் மேற்கொள்ளப்பட்டது. இதனடிப்படையில், 101 பயனாளிகள் நன்மைடைந்துள்ளதுடன், தொழில்நுட்ப அபிவிருத்திச் சபை

அவர்களுக்கு தேவையான தொழில்நுட்பப் பயிற்சியை வழங்கியது. இதன்மூலம் உற்பத்திப் பெறுமானங்கள் மற்றும் தரங்கள் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

- **மிளகுச் செய்கை வேலைத்திட்டம்**

தெங்குத் தோட்டங்களின் பயனை அதிகரிக்கும் வகையிலும் மேலதிக வருமானம் பெறும் நோக்கிலும் தெங்குத் தோட்டங்களில் ஏனைய செய்கைகளை மேற்கொள்ளும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்போது, தெரிவு செய்யப்பட்ட தெங்குத் தோட்டங்களில் ஏனைய செய்கைகளான மிளகுச் செய்கை மேற்கொள்ளப்பட்டு, மேலதிக வருமானம் பெறுவதற்கு விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கப்பட்டதுடன், தேர்ந்தெடுக்கப்பட்ட 109 பயனாளிகளுக்கு தேவையான தொழில்நுட்ப அறிவ மற்றும் மிளகுச் செடிகளும் வழங்கப்பட்டன. இதன்போது ஏற்றுமதி விவசாய திணைக்களத்தினால் விவசாயிகளுக்கு தேவையான தொழில்நுட்ப ஆலோசனை, கைந்நூல்கள் மற்றும் செய்கைக்குத் தேவையான கன்றுகளைப் பெற்றுக்கொள்வதில் உதவி வழங்கப்பட்டது. இதன்மூலம் சுமாா மூன்று வருடங்களில் வருடாந்தம் ரூபா 0.3 மில்லியன் அளவில் வருமானம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இந்நிலை சுமார் ஐந்து வருடங்களில் வருடாந்தம் ரூபா 0.5 மில்லியன் வரையில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

- **வெற்றிலைச் செய்கைத் வேலைத்திட்டம்**

இதனடிப்படையில் மொனராகலை மாவட்டத்தின் சியம்பலாண்டுவ பிரதேசத்தில் வெற்றிலைச் செய்கை அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்போது, விவசாயிகளுக்கு மேலதிக வருமானத்தைப் பெற்றுக்கொள்ளும் ஒரு முறையாக 100 பயனாளிகளிடையே வெற்றிலைச் செடிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. மேலும், ஏற்றுமதி விவசாய திணைக்களத்தினால் விவசாயிகளுக்கு தேவையான தொழில்நுட்ப அறிவை வழங்குதல் மற்றும் செய்கைக்கு ஏற்ற கன்றுகளை பெற்றுக்கொள்ளுதல் போன்ற செயற்பாடுகளில் உதவி வழங்கப்பட்டது. இதன்மூலம் இரண்டு வருடகால அளவில் வருடாந்தம் ரூபா 0.06 மில்லியன் அளவில் வருமானத்தைப் பெறக்கூடியதாக இருப்பதுடன், இதன் மூலம் பிரதேச மக்களின் அன்றாட வெற்றிலைத் தேவையும் பூர்த்தி செய்யப்படுகின்றது.

- **செவ்விளநீர் செய்கை வேலைத்திட்டம்**

மொனராகலை மாவட்டத்தில் குறிப்பிட்ட கிராமங்களின் பயன்பாட்டுக்கென தேவையான செவ்விளநீரைப் பெற்றுக்கொள்ளவும், அதன்மூலம் விவசாயிகள் மேலதிக வருமானத்தைப் பெற்றுக்கொள்ளவும் இவ்வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இதன்மூலம் 120 பயனாளிகளுக்கு செவ்விளநீர் கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. அத்துடன், கன்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கு தெங்கு அபிவிருத்தி அதிகார சபையினால் உதவியளிக்கப்பட்டது.

### 4.1.3 விவசாய மற்றும் கால்நடை வள பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள்

விவசாயப் பிரிவின் மூலம் 2011 ஆம் ஆண்டில் கால்நடை வளம் உட்பட பின்வரும் வேலைத்திட்டங்கள் நேரடியாகவும் சார்ந்த நிறுவனங்களுடனும் இணைந்து செயற்படுத்தப்பட்டது. இது தொடர்பான விபரங்கள் பின்வருமாறு:

- **விவசாய தொழில்நுட்ப பண்ணைகளை ஏற்படுத்துதல்**

'திவிநெகும' வேலைத்திட்டத்தின் மற்றுமொரு விசேட கோட்பாடான குடும்பங்களின் வருமான மட்டத்தை அதிகரித்தல் என்ற நோக்கில் வர்த்தக விவசாயத் தொழில்நுட்ப பண்ணைகளை அமைப்பதில் விசேட அவதானம் செலுத்தப்பட்டது. அதன்போது விசேடமாக மரக்கறி, பழவகைகள் உற்பத்தி மற்றும் ஏனைய செய்கைகளின் மீது அவதானம் மேற்கொள்ளப்பட்டதுடன், 462 பயனாளிகளுக்குத் தேவையான மரக்கறி மற்றும் பழவகை செடிகள் வழங்கப்பட்டன. இதன்மூலம் பயனாளிகளின் வருமானம் ரூபா 49.8 மில்லியனால் அதிகரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன், குடும்பங்களின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் தேனீ பராமரிப்பு வேலைத்திட்டம் மற்றும் காளான் செய்கை வேலைத்திட்டம் என்பனவும் மேற்கொள்ளப்பட்டது. இதன்மூலம் 314 பயனாளிகளிடையே உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

- **விதை மற்றும் செடிகள் வழங்கும் பிரிவுகள்**

இவ்வேலைத்திட்டத்தின் நோக்கமானது, திவிநெகும வேலைத்திட்டத்தின் கீழ் செயற்படும் கிராமங்களிலுள்ள பயனாளிகளுக்குத் தேவையான விதை மற்றும் கன்றுகளை உற்பத்தி செய்வதாகும். இதனடிப்படையில் விதை மற்றும் கன்றுகளை விநியோகிக்கும் 100 பிரிவுகளை ஏற்படுத்தவும் 462 பயனாளிகளுக்குத் தேவையான உபகரணங்களை பெற்றுக்கொடுக்கவும், பயனாளிளை அடையாளம் கண்டு விதைகளை உறுதிப்படுத்தும் சேவை மற்றும் மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தின் மூலம் தேவையான பயிற்சிகளும் வழங்கப்பட்டன. இதன்மூலம் பயனாளிகளின் வருடாந்த வருமானம் ரூபா 3.6 மில்லியன் அளவில் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

- **பாதுகாப்பான வீடு / பசுமையான இடங்களை ஏற்படுத்துதல்**

இதன்மூலம் கிராமங்களுக்கு தேவையான ஒட்டு செய்த பழச்செடிகள் மற்றும் பூச்செடிகளை உற்பத்தி செய்ய எதிர்பார்க்கப்படுவதுடன், 48 பாதுகாப்பான வீடு / பசுமையான இடங்களை ஏற்படுத்தும் நோக்கில் ஒட்டு செய்த பழச்செடிகளைக் கொண்ட 48 பாத்திகளுக்கு தேவையான உபகரணங்களும் வழங்கப்பட்டன. மேலும், பயனாளிகளை அடையாளம் கண்டு விதைகளை உறுதிப்படுத்தல் சேவை மற்றும் மாவட்ட விவசாய பயிற்சி நிலையங்கள் ஊடாக தேவையான பயிற்சிகளும் வழங்கப்பட்டன. இதன்மூலம் பயனாளிகளின் வருடாந்த வருமானத்தில் ரூபா 6 மில்லியன் அதிகரிப்பு எதிர்பார்க்கப்படுகின்றது.

### 4.1.4 மனிதவள மற்றும் பயிற்சிப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள்

மனிதவள அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் பிரிவின் மூலம் 2011 ஆம் ஆண்டிற்குள் பின்வரும் வேலைத்திட்டங்கள் நேரடியாகவும் சார்ந்த நிறுவனங்களுடனும் இணைந்து மேற்கொள்ளப்பட்டது. அவற்றின் சாராம்சம் பின்வருமாறு:

- **சுகாதாரத்துறையில் தொழில்பயிற்சி பெற்ற ஊழியர்களை உருவாக்குதல்**

காலி கூட்டுறவு வைத்தியசாலையுடன் இணைந்து கடந்த வருடங்களில் பயிற்சி வழங்கப்பட்ட 20 தாதி மற்றும் தாதி உதவியாளளுக்கு தனியார் நிறுவனங்களில் சுகாதாரப் பிரிவில் வேலைவாய்ப்புகளை பெற்றுக்கொள்ள உதவி அளிக்கப்பட்டது. இதன்மூலம் தனியார் நிறுவனங்களில் தொழிலுக்குத் தேவையான பயிற்சி பெற்ற ஊழியர்களை வழங்குவதும் இப்பயிற்சி பெற்ற இளைஞர் யுவதிகளை மாதாந்த வேதனங்களைப் பெற்றுக்கொடுக்கும் தொழில்களில் ஈடுபடுத்தவும் வாய்ப்பு வழங்கப்பட்டது.

- **வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு பயிற்சி வழங்குவதற்கென பயிற்சி தேவையானோரையும் பயிற்சி வழங்கும் நிறுவனங்களையும் வேலைவாய்ப்பு நிறுவனங்களையும் ஒன்றிணைத்தல்**

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அனுமதி பெற்ற நிறுவனங்களின் ஊடாக வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு செல்ல பயிற்சி பெற்ற ஊழியர்களுக்கு வாய்ப்பை வழங்கும் நோக்குடன் இந்த வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. இதற்கமைய விசேடமாக அரச நிறுவனங்களில் பயிற்சி பெற்றவர்களை வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழங்கும் நிறுவனங்களுடன் இணைக்க இந்த வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. இதன் மூலம் தெற்கில் பயிற்சி பெற்ற பணியாளர்களுக்கு வெளிநாடுகளில் வேலையைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதுடன் நாட்டிற்கு அந்நியச் செயலாவனியை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பும் வழங்கப்பட்டது. இதனடிப்படையில், விசேடமாக தென் மாகாணத்தில் அமைந்துள்ள தொழில் பயிற்சி நிலையம், தேசிய இளைஞர் சேவை மன்றம், தேசிய பயிலுநர் மற்றும் தொழிற்பயிற்சி அதிகார சபை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளின் பிரதேச கிளைகளுக்கு விளக்கமளித்து அவற்றில் பயிற்சி பெற்ற 300 பணியாளர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழங்கும் நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அவர்கள் தொழிலில் ஈடுபடும் வரையிலான சேவைகள் வழங்கப்பட்டன.

- **சுற்றுலாத்துறையின் பயிற்சி பாடநெறிகளுக்கு தொழில் பயிலுநர்களை ஈடுபடுத்தல்**

அண்மையில் அரசாங்கத்தினால் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ள சுற்றுலாத்துறையின் பல்வேறு வகையான தொழில்களுக்கு தேவையான பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக விசேடமாக கொக்கல மற்றும் தங்காலை சார்ந்த பிரதேசங்களின் இளைஞர் யுவதிகளுக்கு இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையினால் நடத்தப்படும் பயிற்சி முகாம்களில் கலந்து கொள்ள ஊக்குவிப்பதற்கு இவ்வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. அதன்மூலம் பயிற்சி வழங்கும் நிறுவனங்களுக்கு பயிற்சிபெற விரும்புவோரை பெற்றுக்கொள்ளவும், தென்னிலங்கையில் சுற்றுலாத்துறைத் தொழில்களுக்குத் தேவையான இளைஞர் யுவதிகளை எதிர்காலத்தில் இலகுவாக பெற்றுக்கொள்ளவும் இதன்மூலம் வாய்ப்புக் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கமைய சமையல் கலைஞர்கள், வரவேற்பாளர்கள், உணவு பரிமாறும் ஊழியர்கள், அறைகளுக்கு தேவையான ஊழியர்கள் போன்ற குறுங்கால மற்றும் நீண்டகால பயிற்சிப் பாடநெறிகளுக்கு ஹம்பாந்தோட்டை மற்றும் மாத்தறை மாவட்டங்களில் இருந்து 35 தொழில் பயிலுநர்கள் பெற்றுக்கொள்ளப்பட்டனர்.

- **அத்துரலிய - தலஹகம தொழில் பயிற்சி நிலையத்தை பராமரித்தல்**

இது இலங்கை தொழில்பயிற்சி அதிகார சபையுடன் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் இருந்து ஆரம்பிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் ஒரு வேலைத்திட்டமாகும். இந்த பயிற்சி நிலையத்தில் ஒரு வருடத்திற்கு 150 மாணவர்கள் வரை பயிற்றுவிக்கப்பட்டு மேலதிகப் பயிற்சிகளுக்காக சேவை நிலையங்களில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இப்பயிற்சி நிலையக் கட்டடம் எமது அதிகார சபையின் திட்டங்கள் மற்றும் யோசனைகளுக்கு அமைய மற்றும் சபையின் ரூபா 7 இலட்சம் நிதியுதவியுடன் இலங்கை தொழில் பயிற்சி அதிகாரர சபையின் நிதியுதவியுடன் 2008/2009 ஆம் ஆண்டுகளில் உருவாக்கப்பட்டது. பின்னர், ஆரம்பம் முதல் இதுவரை இப்பயிற்சி நிலையத்தில் பாடநெறிகளைப் பயில்வதற்காக மாணவர்களை ஈடுபடுத்துவதும் எமது சபையின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த வருடமும் பல்வேறு வகையான மூன்று கற்கை நெறிகளின் கீழ் 150 தொழில் பயிலுநர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. தொழிலில் ஈடுபடத் தேவையான வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன. இந்நிலையமானது, பின்தங்கிய பிரதேசத்தில் அமைந்திருப்பதன் காரணமாக, இதன்மூலம் கிராமியப் பிரதேசங்களில் வாழும் இளைஞர் யுவதிகளுக்கு பயிற்சி வாய்ப்புக்கள் வழங்கப்படக் கூடும் என்பதுடன், இந்நிலையத்தின் முக்கியத்துவமும் பெறுமதியும் அதிகரித்துள்ளது.

- **திவிநெகும வேலைத்திட்டத்தின் வளர்ச்சி பற்றிய மொத்த விபரங்கள் அடங்கிய தகவல் தளம் ஒன்றை அமைத்தல்**

சபை மூலம் 2011 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட திவிநெகும வேலைத்திட்டத்தின் வளர்ச்சி உட்பட மொத்த விபரங்களையும் கொண்ட தகவல் தளம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் எந்தவொரு வேளையிலும் இந்த வேலைத்திட்டங்களின் வளர்ச்சி மற்றும் பெறுபேறுகள் பற்றி அறிந்துகொள்ள வசதிகள் வழங்கப்பட்டுள்ளது. இந்த தகவல் தளத்தில் திவிநெகும வேலைத்திட்டத்தின் தென் பிராந்தியத்திற்கான சகல பயனாளிகளினதும் விபரங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த தகவல் தளமானது திவிநெகும வேலைத்திட்டத்தின் ஆரம்பம் முதல் இதுவரை இற்றைப்படுத்தப்பட்டு வரும் ஒரு வேலைத்திட்டமாகும்.

### 4.1.5 மீன்பிடி மற்றும் கால்நடை வள பிரிவின் மூலம் செயற்படுத்தப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள்

மீன்பிடிப் பிரிவின் மூலம் 2011 ஆம் ஆண்டில் கால்நடை வள திட்டங்கள் உட்பட பின்வரும் வேலைத்திட்டங்கள் நேரடியாகவும், சார்ந்த நிறுவனங்களுடனும் இணைந்து செயற்படுத்தப்பட்டது. அந்த விபரங்களின் சாராசம் பின்வருமாறு:

2011 ஆம் ஆண்டின் அங்கீகாரம் பெற்ற முதலீட்டுத் திட்டத்திற்கு அமைய நன்னீர் மீன்பிடியை ஊக்குவிப்பதன் நோக்கில் குளங்களில் உணவுக்காக மீன் உற்பத்திளை மேற்கொள்ளுதல், குளங்களில் மீன் உற்பத்தியின் அளவை அதிகரித்தல் ஆகிய நோக்கங்களின் அடிப்படையில் மீன் குஞ்சுகளை ஆறுகளில் விடுவது போன்ற அடிப்படை மீன்பிடி வேலைத்திட்டங்கள் காலி, மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டது. மேலும் திவிநெகும அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் அடிப்படை நோக்கங்களில் ஒன்றான வீட்டுப் பயிர்ச்செய்கை திட்டமிடல் பற்றியும் அவதானம் செலுத்தப்பட்டது.

- **குளங்களில் மீன் வளர்ச்சியை அதிகரித்தல்**

2011 ஆம் ஆண்டு திவிநெகும அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் காலி மற்றும் மாத்தறை ஆகிய இரு மாவட்டங்களில் பல்வேறு திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. காலி மாவட்டத்தில் உணவுக்காக குளங்களில் மீள் வளர்ச்சியை அதிகரிக்கும் நோக்கில் 06 பயனாளிகளின் மீன் வளர்ப்பு நிலையங்களுக்கு தேவையான பாதுகாப்பு வலைகளை வழங்குவதற்காக ரூபா 40,996.32 தொகை செலவிடப்பட்டது. அத்துடன், மாத்தறை மாவட்டத்தில் அவ்வாறான திட்டங்களுக்காக 04 பயனாளிகளின் மீன் வளர்ப்பு நிலையங்களுக்கு பாதுகாப்பு வலைகளை வழங்குவதற்காக ரூபா 20,126.16 தொகை செலவிடப்பட்டுள்ளது. அதன்மூலம் ஒரு பயனாளியின் மாதாந்த மேலதிக வருமானம் குறைந்தபட்சம் 500 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டது.

இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையினால் ஆரம்பிக்கப்பட்ட புதிய திட்டமான மிதக்கும் தொட்டிகளில் வளர்ப்பு மீன் திட்டம் அக்மீமன, யட்டகம வளர்ப்பு மீன் உற்பத்தி நிலையத்தை கருதக்கூடியதாக இருப்பதுடன், அங்கு 06 பெருக்கு தேவையான மிதக்கும் மீன் தொட்டிகளை அமைத்துக் கொடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இவ்வேலைத்திட்டத்தின் எஞ்சியுள்ள பகுதிகளை எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கான மொத்த செலவு ரூபா 54,000 ஆகும். இதன்மூலம் மாதம் ஒன்றுக்கு ஒரு பயனாளியின் வருமானம் குறைந்தபட்சம் ரூபா 4,000 ஆல் அதிகரிக்கப்படும்.

இவ்வனைத்து வேலைத்திட்டங்களையும் செயற்படுத்தும் போது விசேடமாக மீன்பிடித்துறையின் சார்ந்த நிறுவனங்களின் உதவிகள் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- **குளங்களில் மீன் குஞ்சுகளை வளர்ப்புக்காக விடுதல்**

விசேடமாக ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட கட்டன்வெவ, கண்ணொறுவவெவ, கொக்கன்-ஆறவெவ மற்றும் பொல்கஹவெவ ஆகிய நான்கு குளங்களில் மீன் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் 59,000 மீன் குஞ்சுகள் இடப்பட்டதுடன், இதன்மூலம் பயன்பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை 60 ஆகும். இதற்காக இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை ரூபா 10,000 ஐயும் தென் மாகாண மீன்பிடி அமைச்சு ரூபா 118,0000 ஐயும் செலவிட்டுள்ளதுடன், தேசிய நீர்வாழ் அபிவிருத்தி அதிகார சபையின் உதவியும் இதற்குப் பெறப்பட்டுள்ளது. ஒரு போகத்தில் மீன் விற்பனை மூலம் பயன்பெறும் ஒரு குடும்பத்தின் வருமானம் குறைந்தபட்சம் ரூபா 7,000 ஆல் இதன்மூலம் அதிகரிக்கப்படுகின்றது.

- **வீட்டுத்தோட்ட திட்டமிடல்**

திவிநெகும அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் அடிப்படை அம்சங்களில் ஒன்றான வீட்டுத்தோட்ட அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டு எமது சபை கிராம மட்டங்களில் இவ்வேலைத் திட்டங்களை செயற்படுத்தும் 117 வலய முகாமையாளர்கள், திட்ட இணைப்பாளர்கள் மற்றும் மொத்த வெளிக்கள வேலை அதிகாரிகளை ஈடுபடுத்தி மாதிரி வீட்டுத் தோட்டம் ஒன்றை திட்டமிடல், வீட்டுத் தோட்ட பராமரிப்பு, நோய்கள் மற்றும் அவற்றுக்கான கட்டுப்பாட்டு முறைகள், மண் பாதுகாப்பு போன்ற அனைத்து விபரங்களும் உள்ளடக்கப்பட்ட வகையில் கருத்தரங்கு ஒன்று நடத்தப்பட்டதுடன், அதற்கு இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை ரூபா 16,900 வை செலவிட்டுள்ளது. மழைக்காடுகளை பாதுகாக்கும் சர்வதேச அமைப்பு என்ற அரசசார்பற்ற நிறுவனமும் இதற்கு உதவிகளை வழங்கியுள்ளதுடன், அவர்களிடமிருந்து ரூபா 46,400 இதற்காக செலவிடப்பட்டது.

 

*ஹம்பாந்தோட்டை திஸ்ஸமஹாராமயில் திவிநெகும மூலம் பயன்பெற்ற வீட்டுத் தோட்டங்கள்*

- **கோழி வளர்ப்பு வேலைத்திட்டம்**

இதன் அடிப்படையில் காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை மற்றும் மொனறாகலை ஆகிய நான்கு மாவட்டங்களில் தற்போது மேற்கொள்ளப்படும் கோழி வளாப்பு மற்றும் அதுபற்றிய அறிவும் அனுபவமும் கொண்ட 18 தொழில் முயற்சியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு, ஒரு தொழில் முயற்சியாளருக்கு தரமுயர்த்தப்பட்ட 150 ஒரு நாள் கோழிக் குஞ்சுகள் வீதம் வழங்கப்பட்டது. மேலும், அவற்றை ஒரு மாதம் வரை வளர்த்து மீண்டும் அவர்களிடமிருந்து கொள்வனவு செய்து கோழிப்பண்ணை வேலைத்திட்டத்தின் 270 பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டது. இதற்காக ரூபா 405,0000 செலவிடப்பட்டது. இதன்மூலம் பயன்பெற்ற குடும்பங்களின் வருமானம் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளதுடன் அவர்களின் போஷாக்கு மட்டத்திலும் அதிகரிப்பு எதிர்பார்க்கப்படுகின்றது.



*தெவிநுவர கோழிப்பண்ணை வேலைத்திட்டம்*

- **கால்நடை வள உற்பத்தி**

இவ்வேலைத்திட்டத்தின் கீழ் ஆடு மற்றும் மாடுகளை சினைப்படுத்தும் இரண்டு வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதன் மூலம் இதுவரை உள்ள மிருகங்களின் தரத்தை உயர்த்துவதும் அதன்மூலம் கிடைக்கும் குட்டிகளை எதிர்காலத்தில் திவிநெகும கிராமங்களின் பயனாளிகளிடைளே பகிர்ந்தளிப்பதும் நோக்கமாகக் கொள்ளப்பட்டது. இதனடிப்படையில், ஆடுகளைச் சினைப்படுத்தல் வேலைத்திட்டத்திற்காக 10 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டதுடன், அவற்றுக்குத் தேவையான உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், மாடுகளை சினைப்படுத்தல் வேலைத்திட்டத்திற்காக 24 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டதோடு, அவர்களுக்குத் தேவையான உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன. மேற்கூறப்பட்ட இரண்டு கால்நடை பண்ணைகளிலும் அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்யாத ஆனால் எதிர்காலத்தில் அதில் ஈடுபடுத்தக்கூடிய பயனாளிகளையும் ஈடுபடுத்தி அவர்களது பண்ணைகள் வர்த்தக ரீதியான பண்ணைகளாக அபிவிருத்தி செய்யப்பட்டது.

இவ்வனைத்து பயனாளிகளுக்கும் கெக்கணந்துறை கால்நடை வள பயிற்சி நிலையத்தில் பயிற்சி வழங்கப்பட்டதுடன், தொழில்நுட்ப கைந்நூல்கள், பிரசுரங்கள் என்பன வழங்கப்பட்டதுடன், கொட்டில்களை அமைப்பதற்கு தேவையான பொருட்களும் நீர் மற்றும் உணவு வழங்குவதற்கான உபகரணங்களும் வழங்கப்பட்டன. இதன்மூலம் அப்பயனாளிகளின் வருடாந்த வருமானம் ரூபா 1.76 மில்லியனால் அதிகரிக்கப்பட எதிர்பார்க்கப்படுகின்றது.

- **வீட்டு கால்நடை வள பராமரிப்பு வேலைத்திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் குடும்பத்தின் போஷாக்கை அதிகரிக்கும் நோக்கம் பிரதானமாகக் கொள்ளப்பட்டது. இதன் அடிப்படையில் ஒரு குடும்பத்திற்கு உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட ஒரு மாத வயதுடைய 10 கோழிக்குஞ்சுகளும் 25 சதுர அடி அளவிலான கூடு ஒன்றைத் தயாரிப்பதற்கு தேவையான மூன்று தகடுகளும் 45 சதுர அடி அளவிலான கோழி வலைகளும் 462 பயனாளிகளிடையே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கான பயனாளிகளைத் தெரிவு செய்யும் போதும், பயிற்சி வழங்கும் போதும் கால்நடை வள உற்பத்திகள் மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் கால்நடை வைத்திய அதிகாரிகளின் மற்றும் கால்நடை அபிவிருத்தி அதிகாரிகளின் உதவி பெற்றுக்கொள்ளப்பட்டது.

### 4.1.6 காணிப் பிரிவின் மூலம் செயற்படுத்தப்பட்ட காணிகளின் பயன்களை அதிகரிக்கும் வேலைத்திட்டம்

காணிப் பிரிவின் மூலம் 2011 ஆம் ஆண்டில் பின்வரும் வேலைத்திட்டங்கள் நேரடியாக செயற்படுத்தப்பட்டன. இவற்றின் சாராம்சமான விபரம் பின்வருமாறு:

2010 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட காணிகளின் பலனை அதிகரிப்பது சம்பந்தமான வேலைத்திட்டம் 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அளவில் பூத்தி செய்ய முடிந்துள்ளது. இவ்வேலைத்திட்டத்தின் மூலம் பயனாளிகளின் காணிகள் மற்றும் வீட்டுத் தோட்டங்களை வருடம் முழுவதும் வருமானம் பெற்றுத்தரும் செய்கை நிலங்களாக மாற்றுவது நோக்கமாகக் கொள்ளப்பட்டுள்ளது. ஜாதிகசவிய கமநெகும வேலைத்திட்டத்தின் கீழ் சபையினால் அபிவிருத்தி செய்யப்படும் 150 கிராமங்களிலுள்ள 600 குடும்பங்களின் காணிகளை இவ்வாறு அபிவிருத்தி செய்வதற்கு பயனாளிகள் வெற்றிகரமான ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

 

***காணி பயன் அதிகரித்தல் வேலைத்திட்டம் - காலி***

இவ்வேலைத்திட்டத்தின் மூலம் தனது வீட்டுத் தோட்டத்தை செய்கை நிலமாக மாற்றுவதும், அவர்களுக்கு தேவையான ஊக்குவிப்பை வழங்குவதும் ஒரு மாவட்டத்தில் மிகச்சிறந்த விவசாயிகளைத் தெரிவு செய்து அவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்குவதும் 2011 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. இவ்வேலைத்திட்டத்தை செயற்படுத்திய விவசாய குடும்பங்களின் வருமானம் 10% ஆல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

### 4.2 திவிநெகும வலுவூட்டலுக்கான அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம்

மேலும் இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையினால் இவ்வருடத்திற்குள் திவிநெகும வேலைத்திட்டத்தைச் சார்ந்ததாக கிராமியப் பொருளாதாரத்தை வலுவூட்டும் நோக்குடன் ஒரு வேலைத்திட்டமாக வீட்டுப் பொருளாதாரப் பிரிவுகளின் அபிவிருத்தி என்ற வேலைத்திட்டத்திற்கு வலுவூட்டும் நோக்குடன் அடிப்படை வசதிகள் அபிவிருத்தி வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன், 2010 ஆம் ஆண்டின் ஜாதிகசவிய கமநெகும வேலைத்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தி செய்ய முடியாத பல்வேறு வேலைத்திட்டங்களும 2011 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. திவிநெகும அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் கிராமிய பொருளாதாரத்திற்கு வலுவூட்டுவது இவ்வேலைத் திட்டத்தின் அடிப்படை நோக்கமாக அமைந்திருந்தது.

இதனடிப்படையில் கிராமிய விவசாய தொழில்நுட்ப வீதி அபிவிருத்தி கிராமிய நீர்ப்பாசனத் திட்டங்களைப் புனரமைத்தல், பொது வசதிகள் கட்டடங்களை புனரமைத்தல், பொதுச்சந்தைகள் மற்றும் மைதானங்களை அபிவிருத்தி செய்தல், நீர் விநியோகத் திட்டங்கள் மற்றும் கிராமிய குடிநீர் வேலைத்திட்டம் ஆகியனவும் செயற்படுத்தப்பட்டன.

மேலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் நிரந்தர வீடு இல்லாத குறைந்த வருமானம் பெறும் 400 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு 2011 ஆம் ஆண்டில் 373 முழுமையான வீடுகள் அமைத்துக்கொடுக்கப்பட்டது. அதன்மூலம் வீடு இல்லாத 400 குடும்பங்களுக்கு அவர்களது எதிர்காலத்தை வளம் மிக்கதாக மாற்றிக்கொள்ளத் தேவையான சக்தியையும் தைரியத்தையும் வழங்க முடிந்துள்ளது.

தெரிவு செய்யப்பட்ட அடிப்படை வசதிகள் அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் ஒருசில புகைப்படங்கள் கீழே காணப்படுகின்றன.



*மொனராகல பள்ளேகம தென்னியாய விவசாய வீதி*



*தெலுல்ல குளத்தின் புனர் நிர்மாணம்*



*சியம்பலாண்டுவ பஹத்தஅராவ கால்வாய் அமைத்தல்*

மேற்கூறப்பட்ட வேலைத்திட்டங்களுக்கு அமைவாக அந்தந்த மாவட்ட மட்டங்களில் பின்வரும் நிதி மற்றும் பௌதீக வளர்ச்சிகளை இவ்வருடத்திற்குள் அடைந்துள்ளகொள்ள முடிந்துள்ளது.

**மாவட்ட மட்ட அடிப்படை வசதிகள் அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் பெறுபேறுகள்-2011**

| மாவட்டம் | வேலைத்திட்டம் | பௌதீக வளர்ச்சி | பயனாளிகளின் எண்ணிக்கை | 2011-12-31 ஆம் திகதி வரையான செலவு ரூ.மி | மக்கள் பங்களிப்பு ரூ.மி |
|---|---|---|---|---|---|
| **காலி** | கிராமிய வீதி புனர் நிர்மாணம் | 6.09 கி.மீ வரையான பாதைக்கு கொங்றீட் இடுதல் (43 பாதைகள்) | 43957 | 24.213 | 11.634 |
| | கால்வாய்கள் புனர் நிர்மாணம் | 08 கால்வாய்கள் | 1066 | 1.245 | 0.6 |
| | பொது வசதிகள் சனசமூக நிலையங்கள் | 02 | 1765 | 2'394 | 0.9 |
| **மாத்தறை** | கிராமிய வீதி புனர் நிர்மாணம் | 4.7 கி.மீ (25 பாதைகள்) | 37762 | 25.861 | 12.194 |
| | கால்வாய்கள், மதகுகள், அணைக்கட்டுக்கள் | 1.2 கி.மீ (15 திட்டங்கள்) | 6772 | 1.382 | 2.653 |
| | பஸ் நிலையம், வாகன தரிப்பிடம், மைதானம் அபிவிருத்தி | 02 | 3701 | 10.415 | 2.462 |
| **மொனராகலை** | கிராமிய வீதி புனர் நிர்மாணம் | 22 கி.மீ வரை அபிவிருத்தி செய்தல் (17 பாதைகள்) | 17116 | 13.784 | 7.081 |
| | கால்வாய்கள், மதகுகள், பாலங்கள் | 03 கால்வாய்கள், 01 சப்பாத்துப் பாலம் 01 மதகு | 1405 | 2.91 | 0.61 |
| | சுற்றுலா விடுதிகள் | 01 கட்டடம் | 750 | - | 0.08 |
| | சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் | 17 திட்டங்கள் | 2232 | 3'844 | 2'631 |
| **ஹம்பாந்தோட்டை** | கிராமிய வீதி புனர் நிர்மாணம் | 2.01 கி. மீ தூரம் கொங்கறீட் இடுதல் (21 பாதைகள்) | 13630 | 13.582 | 5.618 |
| | கால்வாய், பெட்டி போக்குகள் மற்றும் மதகுகள் | 21 கால்வாய்கள் (தூரம் 6.1) பெட்டி 05 போக்கு மற்றும் மதகுகள் | 7130 | 14.632 | 6.233 |
| | சந்தை அபிவிருத்தி | 01 | 1500 | 0.739 | 0.204 |
| | நீர்ப்பாவசனத் திட்டம் | 03 | 140 | 1.115 | 0.281 |
| | குளம் புனர் நிர்மாணம் | 04 | 527 | 1.522 | 0.165 |
| | குடிநீர் விநியோகம் | 01 | 45 | 0.5 | 0.1 |
| **மொத்தம்** | | | | **118.138** | **53.446** |

*(ஆதாரம்: இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையின் தகவல் தளத்திலிருந்து)*

கிராமிய விவசாய வீதி அபிவிருத்தியின் கீழ் தெரிவு செய்யப்பட்ட கிராம மக்களின் பொருளாதாரத்தை வலுவூட்டும் முகமாக நேரடி பங்களிப்பை வழங்கும் விவசாயக் காணிகள், கிராமிய தொழிற்சாலைகள் போன்றவற்றுக்கு பயணம் செய்வதை இலகுபடுத்துவதுடன், கிராமிய சிறுவர் சிறுமியர், இளைஞர் யுவதிகள் மற்றும் முதியோர் வளர்ச்சியடையும் உலகத்திற்கு வேகமாக பயணிப்பதை இலகுபடுத்தும் நோக்கங்களுடன் முக்கியத்துவம் வாய்ந்த பாதைகள், சப்பாத்துப் பாலம், உடைந்த வடிகாண்கள் மற்றும் சிறிய பாலங்கள், மதகுகள் ஆகியன அபிவிருத்தி செய்யப்பட்டன.

இதன்மூலம் தேசியப் பொருளாதாரத்திற்கு தெற்கின் பின்தங்கிய கிராமங்களில் இருந்து சேகரிக்கப்படும் தயாரிப்புக்களின் பெறுமானத்தையும், தரத்தையும் முறையே அதிகரிக்கச் செய்யும் அம்மக்களின் கல்வி மற்றும் வாழ்க்கை நிலையை அதிகரிக்க முடிந்துள்ளது. கிராமிய நீர்ப்பாசனத் திட்டங்களை புனர்நிர்மாணம் செய்வதன் மூலம் நீர் வடிந்து செல்லும் கால்வாய்கள், சிறிய குளங்களை அமைத்தல் மற்றும் புனர்நிர்மாணம் விசேடமாக ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் சிறிய குளங்கள் தொடர்பாக புதிய கால்வாய்களை அமைத்தல் மற்றும் நீர் விநியோகத்திட்டங்கள் என்பனவும் செயற்படுத்தப்பட்டன. இதன் மூலம் 1310 ஏக்கர் வயற் காணிகளுக்கு எதிர்வரும் போகங்களில் சிறந்த விளைச்சலைப் பெறும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. அத்துடன், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் செயற்படுத்தப்பட்ட புதிய கால்வாய் தொகுதியின் அபிவிருத்தி மூலம் சுமார் 120 ஏக்கர் மேட்டுநிலக்காணிகள் செய்கைக்காக பயன்படுத்த முடிந்துள்ளது.

### 4.3 ஜாதிகசவிய கமநெகும குறைந்த வருமானம் பெறும் வீடமைப்பு வேலைத்திட்டம் (விசேட வேலைத் திட்டம்)

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வீடமைப்பு வேலைத்திட்டம் மூலம் தெரிவு செய்யப்பட்ட குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு புதிதாக 398 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. குறிப்பிடப்பட்ட குடும்பங்களின் அனைத்து அங்கத்தவர்களையும் சேர்த்துக்கொண்டு கட்டம் கட்டமாக வீடுகளை அமைக்கும் இவ்வேலைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டதுடன், வருட இறுதியாகும் போது ரூபா 44,106,000.00 அளவிலான நிதிப் பெறுபேறுகளைப் பெற்று 373 வீடுகளின் கூரை அமைப்பது வரை பூர்த்தி செய்யப்பட்டு மொத்த எண்ணிக்கையில் 373 வீடுகளின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. திட்டத்தின் ஏனைய வீடுகளின் கட்டட நிர்மாணப் பணிகள் 2012 மார்ச் மாதம் அளவில் நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளன.

நிலையான ஒரு வீடு இல்லாமை, அதன் காரணமாக மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகள் இல்லாமை, வருமானத்தின் அதிக தொகையை வருடாந்தம் தற்காலிக வீடுகளின் பழுதுபாப்பிற்காகவும் ஏனைய விடயங்களுக்காகவும் பயன்படுத்துவதன் காரணமாகவும் பொருளாதார மற்றும் உள ரீதியாக களைப்படைந்திருந்த இந்த மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுத்ததன் மூலம் அவர்கள் பெற்ற வெற்றிகள் பல. அவை நிரந்தரமான ஒரு வீட்டின் உரிமையாளரான உள ரீதியான மற்றும் உடல் ரீதியான புத்துணர்ச்சி, அவர்களது பொருளாதார மற்றும் சமூகநிலை உயர்வடைதல், பிள்ளைகளின் கல்விக்குத் தேவையான பின்னணி உருவாகுதல் ஆகியனவாகும். அத்துடன், நிரந்தர வீடு கிடைத்ததன் பலனாக தமது வீடுகளுக்கு மின்சாரத்தை பெற்றுக்கொள்ள முடிவதுடன் புதிய வீட்டுக் கைத்தொழில்களை ஆரம்பிக்கவும் அதன் மூலம் அதிக வருமானம் பெறுவதும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும், எவரதும் அவதானிப்புக்கு உள்ளாகாமல் வாழ்வதற்கு பொருத்தமற்ற அடிப்படை வசதிகள் இல்லாமல் வாழ்ந்து வந்த அங்கவீனர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு இவ்வீடமைப்பு வேலைத்திட்டத்தின் மூலம் முக்கியத்துவம் அளித்துள்ளதன் காரணமாக நீண்டகாலமாகத் தீர்க்கப்படாதிருந்த அங்கவீனர்களின் வீட்டுப் பிரச்சினைக்கும் இதன்மூலம் தீர்வு காணும் வாய்ப்பு கிடைத்துள்ளது.





*மகாஅலுத்கம்ஆர வம்யூர லுணகம்வெஹர எஸ்.எஸ்.ஜயலத் அவர்களின் வீடு*

## 4.4 2011 ஆம் ஆண்டில் வருமானம் பெறும் திட்டங்கள்

இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் முக்கிய கோட்பாடான உற்பத்தித் திறனை அதிகரித்தல், வருமான வழிகள் மற்றும் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல், தேயிலைத் தொழிற்சாலைகள் மற்றும் ஏனைய தொழிற்சாலைகள் உட்பட தொழில் முயற்சியாளர்களை அடிப்படையாகக் கொண்ட வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அதாவது, ஜெஸ்மின்வெலி, கலகாவவத்த, பனில்கந்த, ஹந்துகல தேயிலைத் தொழிற்சாலைகள், ஒலியகொடவத்த அனல் மின் நிலையம், கம்புறுப்பிட்டிய ரட்டலங்காவத்த டயர் மீள் நிரப்புத் தொழிற்சாலை, கும்பல்கம இசுறு செரமிக் வேலைத்திட்டம், பிட்டபெத்தர தங்கொலுவவத்த கருங்கல் வேலைத்திட்டம், அம்பிலிப்பிட்டிய மற்றும் புத்தள தொழில் முயற்சியாளர் வேலைத் திட்டம் மற்றும் கம்புறுப்பிட்டிய ரட்டலங்காவத்த ரகன்புரூட் வேலைத்திட்டம் என்பனவாகும். இவ்வேலைத் திட்டங்களின் மூலம் இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை 2011 ஆம் ஆண்டில் பெற்றுக்கொண்ட மொத்த வருமானம் ரூபா 2,851,292 ஆகும். இவ்வனைத்து திட்டங்களின் மூலமும் தென் பிராந்தியத்தில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட தொழில்வாய்ப்புக்களின் எண்ணிக்கை சுமார் 1,000 ஆகும். மேலும், இவ்வேலைத்திட்டங்கள் மூலம் தென் பிராந்தியத்தில் சுமார் 12,000 பேருக்கு நேரடியற்ற விதத்தில் தொழில் வாய்ப்புக்கள் கிடைத்துள்ளன. இதன்மூலம் அவர்களது வாழ்வாதார மட்டம் உயர்வடைந்துள்ளது. இந்த அனைத்து வேலைத் திட்டங்களுக்குமென தொழிற்சாலைகளை அமைப்பதற்குத் தேவையான அடிப்படை உற்பத்தி பொருளான காணி மற்றும் கட்டடங்களை வழங்குதல் சபையின் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

## 5. மொத்த பெறுபேறுகள்

இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையினால் 2011 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் மொத்த பெறுபேறுகள் பற்றி விளக்கும் போது தற்போதைய அரசாங்கத்தின் முதன்மை அபிவிருத்தி வேலைத் திட்டமான திவிநெகும வீட்டுப் பொருளாதார பிரிவுகளை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டத்திற்கும் ஜாதிகசவிய கமநெகும வேலைத் திட்டத்திற்கும் இவ்வருடத்தில் முக்கியத்துவம் அளித்து அனைத்து வேலைத் திட்டங்களையும் வெற்றிகரமாக செயற்படுத்தியமையை குறிப்பிட்டுக் காட்ட முடியும். கடந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஜாதிகசவிய கமநெகும வேலைத்திட்டத்தின் பணிகளை தொடர்ந்து முன்னெடுப்பதற்காகவும் திவிநெகும புதிய வேலைத் திட்டங்களை செயற்படுத்துவதற்காகவும் தலைமை அலுவலகக் கட்டடத்தை அமைப்பதற்காக செலுத்தப்பட்ட தொகைக்காக மத்திய திறைசேரியிடம் இருந்து 2011 ஆம் ஆண்டில் ரூபா 300.5 மில்லியன் நிதி ஒதுக்கீடு சபைக்கு வழங்கப்பட்டது. அந்த நிதி இலக்கினை திட்டமிடப்பட்ட செயற்பாடுகளில் செலவிட்டு ரூபா 152.26 மில்லியனை 2011 ஆம் ஆண்டில் செலவிட முடிந்துள்ளது. (விபரங்கள் இணைப்பு 01 இல் காணப்படுகிறது.) அதற்கமைய 50.67% நிதிப் பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது.

மேலும், நான்கு மாவட்டங்களிலும் மொத்தமாக 1048 வேலைத் திட்டங்களில் 529 வேலைத்திட்டங்களை பூரணமாகன பூர்த்தி செய்ய முடிந்துள்ளது. அதற்கமைய திட்டங்களை செயற்படுத்துவது தொடர்பாக 51% பௌதீக பெறுபேறுகளையும் பெற முடிந்துள்ளது. (மாவட்ட அடிப்படையில் இதற்கான பெறுபேறுகள் இணைப்பு 2, 3, 4 மற்றும் 5 மூலம் காணப்படுகிறது. மேலும், மாவட்ட அடிப்படையில் நிதிப் பெறுபேறுகள் வரைபடம் மூலம் காண்பித்தல் இணைப்பு 06 இல் உள்ளது.

மேற்கூறப்பட்டவாறு இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை மத்திய திறைசேரியிடம் இருந்து ஒதுக்கீடுகளைப் பெற்று 2011 ஆம் ஆண்டிலும் திவிநெகும வீட்டுப் பொருளாதார பிரிவுகளை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டம் மற்றும் ஜாதிகசவிய கமநெகும வேலைத் திட்டத்தின் மூலம் சபையின் அடிப்படை நோக்கங்களை அடைந்து கொள்ளல், 02 இலட்சத்திற்கும் அதிகமான குடும்பங்களுக்கு தேவையான பொருளதார சக்தியை வழங்கி தென் பிராந்தியத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும் அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கும் வாழ்வாதார அபிவிருத்திக்கும் ஒழுக்க அபிவிருத்திக்கும் முதலீட்டு ஏற்பாடுகளுக்கும் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்பாடு செய்துள்ளது.

மேலும், அந்த அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் மூலம் ‘இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு’ என்ற எண்ணக்கருவில் தென் பிராந்தியத்தில் குறிப்பிடத்தக்கதொரு பொருளாதார மற்றும் சமூக புத்துணர்ச்சியை ஏற்படுத்த முடிந்துள்ளது. இந்த அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் தென்படக்கூடிய மற்றும் எண்ணிக்கை ரீதியான கணக்குகளின் மூலம் எமது நாட்டின் மொத்த தேசிய உற்பத்திக்கு சுமார் ரூபா 280 மில்லியன் பங்களிப்பை வழங்கவும் 2011 ஆம் ஆண்டில் முடிந்துள்ளது. அதாவது, திவிநெகும வீட்டுப் பொருளாதார பிரிவுகள் வேலைத்திட்டம் உட்பட மொத்த வேலைத்திட்டங்களின் மூலம் ரூபா 154 மில்லியனையும், ஜாதிகசவிய கமநெகும வேலைத்திட்டத்திற்காக ரூபா 126 மில்லியன் என்ற வகையிலுமாகும்.

மேற்கூறப்பட்டவாறு, பெறுபேறுகளை பெற்றுக்கொள்ளும் போது பல்வேறு வகையிலான உள்ளக மற்றும் வெளியக எதிர்ப்புக்களையும், சவால்களையும் சந்திக்க நேரிட்டதுடன், சபையின் ஒழுக்க முறைகள் ஏற்பாட்டுக் குழு முதல் கீழ்மட்டம் வரையிலான அங்கத்தவர்கள் வரை மொத்த ஊழியர்களும் குழு உணர்வுடன் செயற்பட்டதன் பலனாக இந்த எதிர்ப்புக்களையும் சவால்களையும் வெற்றிகரமாக முகம் கொடுத்து மேற்கூறப்பட்ட பெறுபேறுகளைப் பெற முடிந்துள்ளது.

## இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை
## அபிவிருத்தி வேலைத்திட்டம்
## (2011-12-31 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதி சாராம்சம்)

| வேலைத்திட்டம் | | காலி | | மாத்தறை | | ஹம்பாந்தோட்டை | | மொனறாகல | | தலைமை அலுவலகம் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | நிதி ஒதுக்கீடு ரூபா | செலவுகள் ரூபா | நிதி ஒதுக்கீடு ரூபா | செலவுகள் ரூபா | நிதி ஒதுக்கீடு ரூபா | செலவுகள் ரூபா | நிதி ஒதுக்கீடு ரூபா | செலவுகள் ரூபா | நிதி ஒதுக்கீடு ரூபா | செலவுகள் ரூபா | நிதி ஒதுக்கீடு ரூபா | செலவுகள் ரூபா |
| 1. ‘திவிநெகும’ வேலைத் திட்டம் | | | | | | | | | | | | | |
| 1.1 புதிய | | | | | | | | | | | | | |
| 1.1.1 | வீட்டுப் பொருளாதாரப் பிரிவுகள் அபிவிருத்தி வேலைத் திட்டம் | 21,500,000.00 | 4,521,793.44 | 22,500,000.00 | 4,705,052.63 | 18,500,000.00 | 5,545,746.97 | 12,500,000.00 | 705,636.00 | | | 75,000,000.00 | 15,478,229.04 |
| 1.1.2 | வீட்டுப் பொருளாதாரப் பிரிவுகள் அபிவிருத்தி வேலைத் திட்டத்திற்கு வலுவூட்டும் வாழ்வாதார அபிவிருத்தி வேலைத் திட்டம் | 21,227,000.00 | 1,490,049.75 | 10,316,000.00 | 298,936.86 | 31,850,561.82 | 1,590,396.41 | 16,382,386.00 | 722,371.93 | | | 79,775,947.82 | 4,101,754.95 |
| 1.1.3 | வீட்டுப் பொருளாதார பிரிவுகள் அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கு வலுவூட்டும் அடிப்படை வசதிகள் அபிவிருத்தி வேலைத் திட்டம் | 16,678,031.13 | 9,726,654.62 | 28,398,189.92 | 16,145,948.96 | 10,870,314.65 | 24,499,411.67 | 4,248,000.00 | 7,453,823.63 | | | 60,194,535.70 | 57,825,838.88 |
| **உப மொத்தம்** | | **59,405,031.13** | **15,738,497.81** | **61,214,189.92** | **21,149,938.45** | **61,220,876.47** | **31,635,555.05** | **33,130,386.00** | **8,881,831.56** | **-** | **-** | **214,970,483.52** | **77,405,822.87** |

| வேலைத்திட்டம் | காலி | | மாத்தறை | | ஹம்பாந்தோட்டை | | மொனறாகல | | தலைமை அலுவலகம் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நிதி ஒதுக்கீடு ரூபா | செலவுகள் ரூபா | நிதி ஒதுக்கீடு ரூபா | செலவுகள் ரூபா | நிதி ஒதுக்கீடு ரூபா | செலவுகள் ரூபா | நிதி ஒதுக்கீடு ரூபா | செலவுகள் ரூபா | நிதி ஒதுக்கீடு ரூபா | செலவுகள் ரூபா | நிதி ஒதுக்கீடு ரூபா | செலவுகள் ரூபா |
| 2. 'ஜாதிகசவிய கமநெகும' வேலைத் திட்டம் | | | | | | | | | | | | |
| 2.1 வைப்புகள் | | | | | | | | | | | | |
| 2.1.1 பொருளாதார மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் | 97,573.35 | 14,090.87 | 701,231.58 | 650,040.78 | 1,727,587.96 | 1,723,856.25 | 49,371.03 | 49,371.01 | | | 2,575,763.92 | 2,437,358.91 |
| 2.1.2 அடிப்படை வசதிகள் அபிவிருத்தி வேலைத்திட்டம் | 3,954,053.61 | 3,601,634.79 | 2,650,329.23 | 2,383,296.31 | 2,030,586.07 | 2,186,872.95 | 1,424,099.37 | 2,192,690.73 | | | 10,059,068.28 | 10,364,494.78 |
| **உப மொத்தம்** | **4,051,626.96** | **3,615,725.66** | **3,351,560.81** | **3,033,337.09** | **3,758,174.03** | **3,910,729.20** | **1,473,470.40** | **2,242,061.74** | **-** | **-** | **12,634,832.20** | **12,801,853.69** |
| 2.2 செலுத்த வேண்டியவை | | | | | | | | | | | | |
| 2.2.1 பொருளாதார மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் | - | - | - | - | 174,000.00 | 156,000.00 | - | - | | | 174,000.00 | 156,000.00 |
| 2.2.2 அடிப்படை வசதிகள் அபிவிருத்தி வேலைத்திட்டம் | 3,208,121.17 | 2,653,941.23 | - | 6,000.00 | 294,000.00 | 264,000.00 | 183,251.91 | 529,596.03 | | | 3,685,373.08 | 3,453,537.26 |
| **உப மொத்தம்** | **3,208,121.17** | **2,653,941.23** | **-** | **6,000.00** | **468,000.00** | **420,000.00** | **183,251.91** | **529,596.03** | **-** | **-** | **3,859,373.08** | **3,609,537.26** |
| 2.3 பிரிக்கப்பட வேண்டியவை | | - | | - | | - | | - | | | | - |
| 2.3.1 பொருளாதார மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் | 57,500.00 | 40,932.50 | 8,037,218.02 | 7,679,156.62 | 1,114,315.77 | 1,014,178.85 | 1,011,724.91 | 199,123.42 | | | 10,220,758.70 | 8,933,391.39 |
| 2.3.2 அடிப்படை வசதிகள் அபிவிருத்தி வேலைத்திட்டம் | 12,913,551.24 | 11,418,913.96 | 14,943,548.55 | 13,469,732.67 | 5,202,599.89 | 4,661,983.71 | 13,544,837.69 | 7,630,306.57 | | | 46,604,537.37 | 37,180,936.91 |
| **மொத்தம்** | **12,971,051.24** | **11,459,846.46** | **22,980,766.57** | **21,148,889.29** | **6,316,915.66** | **5,676,162.56** | **14,556,562.60** | **7,829,429.99** | **-** | **-** | **56,825,296.07** | **46,114,328.30** |
| **மொத்தம்** | **79,635,830.50** | **33,468,011.16** | **87,546,517.30** | **45,338,164.83** | **71,763,966.16** | **41,642,446.81** | **49,343,670.91** | **19,482,919.32** | **-** | **-** | **288,289,984.87** | **139,931,542.12** |

| வேலைத்திட்டம் | | காலி | | மாத்தறை | | ஹம்பாந்தோட்டை | | மொனறாகல | | தலைமை அலுவலகம் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | நிதி ஒதுக்கீடு ரூபா | செலவுகள் ரூபா | நிதி ஒதுக்கீடு ரூபா | செலவுகள் ரூபா | நிதி ஒதுக்கீடு ரூபா | செலவுகள் ரூபா | நிதி ஒதுக்கீடு ரூபா | செலவுகள் ரூபா | நிதி ஒதுக்கீடு ரூபா | செலவுகள் ரூபா | நிதி ஒதுக்கீடு ரூபா | செலவுகள் ரூபா |
| 3. ஏனையவை | | | | | | | | | | | | | |
| 3.1 | தலைமை அலுவலக கட்டம் அமைத்தல் (வைப்புகள் மற்றும் பிரிக்கப்பட வேண்டியவை) | | | | | | | | | 6,633,078.44 | 7,438,051.82 | 6,633,078.44 | 7,438,051.82 |
| 3.2 | மூலதன சொத்துக்களை கைப்பற்றுதல் | | | | | | | | | 1,000,000.00 | 905,164.32 | 1,000,000.00 | 905,164.32 |
| 3.3 | உள்ளக ஊழியர் பயிற்சி | | | | | | | | | 500,000.00 | 299,425.00 | 500,000.00 | 299,425.00 |
| 3.4 | நிர்வாகச் செலவுகள் (1.5%) | | | | | | | | | 4,076,936.69 | 2,178,301.69 | 4,076,936.69 | 2,178,301.69 |
| **மொத்தம்** | | | | | | | | | | **12,210,015.13** | **10,820,942.83** | **12,210,015.13** | **10,820,942.83** |
| **மொத்தம்** | | **79,635,830.50** | **33,468,011.16** | **87,546,517.30** | **45,338,164.83** | **71,763,966.16** | **41,642,446.81** | **49,343,670.91** | **19,482,919.32** | **12,210,015.13** | **10,820,942.83** | **300,500,000.00** | **150,752,484.95** |
| **2010 பிடித்து வைக்கப்பட்ட வரி விலக்களிப்பு** | | | | | | | | | | | **1,511,606.05** | | **1,511,606.05** |
| **2011.12.31 ஆம் திகதி வரையிலான செலவுகள்** | | | | | | | | | | | | | **152,264,091.00** |

இணைப்பு 2

## இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை
## அபிவிருத்தித் திட்டம் - 2011
## (2011-12-31 ஆம் திகதியுடன் முடிவடைந்த பெறுபேறுகளின் சாராம்சம்)

**காலி மாவட்டம்**

| வேலைத்திட்டம் | பயனாளிகளின் எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு ரூபா | நிதிப் பெறுபேறுகள் ரூபா | திட்டங்களின் எண்ணிக்கை | பௌதீக பெறுகள் (%) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 0-10 i | 11-25 ii | 26-50 iii | 51-75 iv | 76-100 v | முடிவடைந்த வேலைகள் vi |
| வீட்டுப் பொருளாதார அபிவிருத்தி வேலைத் திட்டம் | 4300 | 21,500,000.00 | 4,521,793.44 | 43 | 0 | 2 | 10 | 24 | 7 | 0 |
| தொழில் முயற்சியாளர் வேலைத் திட்டம் (குழு அமைத்தல்/நிதி வசதிகளை வழங்குதல்) | 6463 | 645,000.00 | 825,129.33 | 129 | 122 | 0 | 1 | 0 | 0 | 6 |
| தொழில்நுட்ப அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் | 2151 | 215,000.00 | - | 43 | 43 | 0 | 0 | 0 | 0 | 0 |
| விவசாய நுழைவாயில்களை அமைத்தல் | 43957 | 45,675,628.57 | 23,766,588.38 | 45 | 14 | 0 | 0 | 0 | 4 | 101 |
| தொழிற்பயிற்சிப் பாடநெறிகள் (ஹோட்டல் / அச்சுக் கைத்தொழில்) | 3 | 23,000.00 | - | 3 | 3 | 0 | 0 | 0 | 0 | 0 |
| சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் (கால்வாய் / பாலம் / நீர் விநியோகம்) | 1066 | 3,612,999.44 | 1,244,972.75 | 8 | 3 | 0 | 0 | 1 | 1 | 8 |
| பொது வசதிகள் (சனசமூக நிலையம் மற்றும் / மைதானம்) | 1765 | 3,613,702.49 | 2,393,674.34 | 3 | 0 | 0 | 0 | 0 | 1 | 4 |
| ஏனைய | 340 | 642,000.00 | 16,000.00 | 5 | 4 | 0 | 0 | 0 | 0 | 2 |
| திவிநெகுமவுக்கு வலுவூட்டும் வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் | 529 | 3,708,500.00 | 699,852.92 | 17 | 10 | 0 | 0 | 0 | 7 | 2 |
| **மொத்தம்** | **60574** | **79,635,830.50** | **33,468,011.16** | **296** | **199** | **2** | **11** | **25** | **20** | **123** |

இணைப்பு - 03

## இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை

## அபிவிருத்தித் திட்டம் - 2011

### 2011-12-31 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதிப் பெறுபேறுகளின் சாராம்சம்

**மாத்தறை மாவட்டம்**

| வேலைத்திட்டம் | பயனாளிகளின் எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு ரூபா | நிதிப் பெறுபேறுகள் ரூபா | திட்டங்களின் எண்ணிக்கை | பௌதீக பெறுகள் (%) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 0-10 i | 11-25 ii | 26-50 iii | 51-75 iv | 76-100 v | முடிவடைந்த வேலைகள் vi |
| வீட்டு பொருளாதாரப் பிரிவு அபிவிருத்தி வேலைத் திட்டம் | 4500 | 22,500,000.00 | 4,798,761.13 | 45 | 0 | 0 | 0 | 0 | 45 | 0 |
| கிராமிய தொழில் முயற்சியாளர்களுக்கு நிதி வசதிகளை வழங்குதல் / தொழில் முயற்சி அபிவிருத்தி வேலைத் திட்டம் | 6750 | 675,000.00 | 147,042.00 | 135 | 92 | 0 | 0 | 0 | 4 | 36 |
| தொழில்நுட்ப அபிவிருத்தி வேலைத்திட்டம் | 2251 | 230,000.00 | - | 46 | 45 | 0 | 0 | 0 | 0 | 1 |
| விவசாய நுழைவாயில் பாதைகளை அமைத்தல் | 37762 | 40,595,499.41 | 27,638,533.66 | 43 | 13 | 1 | 0 | 0 | 0 | 113 |
| சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் (கால்வாய் / நீர் விநியோகம் / குளங்கள்) | 6772 | 7,671,157.22 | 1,381,689.44 | 22 | 9 | 2 | 0 | 0 | 2 | 15 |
| பொது வசதிகள் (சனசமூக நிலையம் / மைதானம்) | 3701 | 11,851,532.77 | 10,415,897.41 | 5 | 0 | 0 | 0 | 0 | 0 | 13 |
| திவிநெகுமவுக்கு வலுவூட்டும் வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டம் | 239 | 3,260,500.00 | 902,483.33 | 9 | 2 | 8 | 0 | 0 | 1 | 0 |
| ஏனைய | 446 | 800,000.00 | 53,757.86 | 3 | 2 | 0 | 0 | 0 | 1 | 0 |
| **மொத்தம்** | **62421** | **87,583,689.40** | **45,338,164.83** | **308** | **163** | **11** | **0** | **0** | **53** | **178** |

## இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை

## அபிவிருத்தித் திட்டம் - 2011

## 2011-12-31 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதிப் பெறுபேறுகளின் சாராம்சம்

**ஹம்பாந்தோட்டை மாவட்டம்**

| வேலைத்திட்டம் | பயனாளிகளின் எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு ரூபா | நிதிப் பெறுபேறுகள் ரூபா | திட்டங்களின் எண்ணிக்கை | பௌதீக பெறுகள் (%) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 0-10 i | 11-25 ii | 26-50 iii | 51-75 iv | 76-100 v | முடிவடைந்த வேலைகள் vi |
| வீட்டுப் பொருளாதாரப் பிரிவு அபிவிருத்தி வேலைத்திட்டம் | 3700 | 18,500,000.00 | 5,545,746.97 | 37 | 0 | 37 | 0 | 0 | 0 | 0 |
| கிராமிய தொழில் முயற்சியாளர்களுக்கு நிதி வசதிகளை வழங்குதல் / தொழில் முயற்சி அபிவிருத்தி வேலைத் திட்டம் | 5363 | 550,000.00 | 49,174.48 | 110 | 72 | 3 | 1 | 0 | 34 | 0 |
| தொழில்நுட்ப அபிவிருத்தி வேலைத்திட்டம் | 1851 | 190,000.00 | 68,110.03 | 38 | 33 | 2 | 0 | 0 | 3 | 0 |
| சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் (கால்வாய் / நீர் விநியோகம் / குளங்கள்) | 7130 | 25,370,197.89 | 15,089,967.00 | 36 | 22 | 2 | 8 | 2 | 2 | 25 |
| விவசாய நுழைவாயில் பாதைகளை அமைத்தல் | 13630 | 16,289,381.50 | 15,558,176.15 | 22 | 8 | 0 | 8 | 1 | 6 | 46 |
| மீன்பிடி வேலைத்திட்டம் | 45 | 680,000.00 | - | 3 | 2 | 1 | 0 | 0 | 0 | 0 |
| நீர் விநியோக வேலைத்திட்டங்கள் | 875 | 3,647,047.50 | 2,429,532.33 | 6 | 5 | 0 | 1 | 0 | 0 | 6 |
| மின்சார விநியோக வேலைத்திட்டங்கள் | 475 | 385,480.46 | 60,136.30 | 2 | 0 | 0 | 1 | 0 | 0 | 2 |
| பொது வசதிகள் (சனசமூக நிலையம் / மைதானம்) | 3925 | 906,247.11 | 824,304.59 | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 8 |
| பெயர்ப்பலகை பொருத்துதல் | 11676 | 592,613.70 | 544,612.70 | 0 | 5 | 1 | 0 | 0 | 0 | 72 |
| திவிநெகுமவுக்கு வலுவூட்டும் வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டம் | 582 | 4,657,000.00 | 1,510,401.90 | 15 | 11 | 0 | 4 | 0 | 0 | 5 |
| **மொத்தம்** | **49252** | **71,767,968.16** | **41,680,162.45** | **270** | **158** | **46** | **24** | **3** | **45** | **164** |

இணைப்பு – 05

**இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை**

**அபிவிருத்தித் திட்டம் - 2011**

**2011-12-31 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதிப் பெறுபேறுகளின் சாராம்சம்**

**மொனராகல மாவட்டம்**

| வேலைத்திட்டம் | பயனாளிகளின் எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு ரூபா | நிதிப் பெறுபேறுகள் ரூபா | திட்டங்களின் எண்ணிக்கை | வேலைத்திட்டம் | பௌதீக பெறுகள் (%) 0-10 i | 11-25 ii | 26-50 iii | 51-75 iv | 76-100 v | முடிவடைந்த வேலைகள் vi |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வீட்டுப் பொருளாதாரப் பிரிவு அபிவிருத்தி வேலைத்திட்டம் | 25 | 2500 | 12,500,000.00 | 705,636.00 | 25 | 12 | 9 | 0 | 1 | 2 | 2 |
| கிராமிய தொழில் முயற்சியாளர்களுக்கு நிதி வசதிகளை வழங்குதல் | 50 | 2500 | 250,000.00 | 40,967.00 | 50 | 37 | 0 | 1 | 0 | 5 | 7 |
| தொழில் முயற்சியாளர்களின் சிறிய குழுக்களை அமைத்தல் | 25 | 1250 | 125,000.00 | 18,467.00 | 25 | 20 | 0 | 0 | 0 | 2 | 3 |
| தொழில்நுட்ப அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் | 25 | 1250 | 125,000.00 | 17,949.00 | 25 | 21 | 0 | 1 | 0 | 1 | 2 |
| விவசாயக் காணிகளுக்கு நுழைவாயில் பாதைகளை அமைத்தல் | 17 | 17116 | 19,431,329.08 | 14,077,490.54 | 17 | 4 | 2 | 0 | 0 | 16 | 37 |
| சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் (குளங்கள் / கால்வாய்கள் / பாலம் / மதகு) | 20 | 2352 | 11,500,008.38 | 3,938,673.68 | 20 | 9 | 3 | 0 | 1 | 6 | 10 |
| பொது வசதிகள் (விளையாட்டு மைதானம்) | 0 | 400 | 35,920.00 | - | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 |
| திவிநெகுமவுக்கு வலுவூட்டும் வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டம் | 10 | 903 | 2,876,414.45 | 683,736.10 | 10 | 3 | 5 | 0 | 5 | 2 | 2 |
| ஏனைய | 2 | 295 | 2,500,000.00 | - | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | 0 |
| **மொத்தம்** | **174** | **28566** | **49,343,671.91** | **19,482,919.32** | **174** | **106** | **21** | **2** | **7** | **34** | **64** |

**இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை**
**ஜாதிகசவிய கமநெகும அபிவிருத்தி வேலைத் திட்டம்**
**2011-12-31 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதிப் பெறுபேறுகள்**
**மாவட்ட அடிப்படையில்**



## 1. நிதிக் கூற்றுக்கள்

---------------------------

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---------------------------------------------------

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களைத் தவிர்த்து 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகாரசபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

--------------------------------------------------------

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

-------------------------------------------------

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) முழுப்பெறுமதியும் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தும் பாவனையிலிருந்து அகற்றப்படாத மோட்டார் வாகனம், இயந்திரம், உபகரணங்கள் என்பவற்றின் பெறுமதி இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 18 இன் பிரகாரம் மீள்மதிப்புச் செய்யப்பட்டு கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 42 இன் பிரகாரம் பணிக்கொடைக்காக ஏற்பாடு செய்யப்பட்ட நிதி முதலீடு செய்யப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் நலன்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பணிக்கொடை கொடுப்பனவுகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட பணம் ரூபா 34,808,657 ஆக இருந்த போதிலும் ஊழியர்களின் பணிக்கொடை கொடுப்பனவுகளுக்காக உருவாகும் எதிர்காலப் பொறுப்புக்களைத் தீர்த்துவைப்பதற்குரிய நிதியத்தினை உருவாக்குவதற்காக ரூபா 162,204 பெறுமதியான கணக்கு மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

பத்தரமுல்லை பெலவத்தை ருஹுனு சந்தை செயற்திட்டத்திற்கான காணிக்கு மண் நிரப்புவதற்காக காணி மீட்டல் மற்றும் அபிவிருத்தி செய்தல் கூட்டத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 1,731,183 தொகையும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கான நிலுவையாகவுள்ள வரி மற்றும் பெறுமதி சேர் வரிக்காகச் செலுத்தவேண்டிய ரூபா 368,000 தொகையும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

---

(அ) 2011 ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தித் திட்டத்தின் பிரகாரம் காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, மொனறாகலை ஆகிய மாவட்டங்களில் ''திவிநெகும'' நிகழ்ச்சித்திட்டத்தில் உள்நாட்டு பொருளாதாரப் பிரிவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை வலுப்படுத்தும் வாழ்வாதார மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக ஏற்பாடு செய்யப்பட்ட தொகை ரூபா 214,970,484 ஆக இருந்தது. மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் உள்ளபடியான செலவு ரூபா 52,921,998 ஆக இருந்த போதிலும் செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் செலவு ரூபா 77,405,823 ஆக இருந்ததனால் வேறுபாடு ரூபா 24,483,825 ஆக இருந்தது.

(ஆ) ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் விசேட வீடமைப்புச் செயற்திட்டத்திற்கான இறுதி நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் உள்ளபடியான செலவு ரூபா 58,638,447 ஆக இருந்த போதிலும் செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் செலவு ரூபா 44,106,000 ஆகு இருந்ததனால் வேறுபாடு ரூபா 14,532,447 ஆக இருந்தது.

(இ) காணிப் பிரிவிலிருந்தும் கணக்குகள் பிரிவிலிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் காணி குத்தகை வருமானம் மற்றும் காணிகளின் பெறுமதி ரூபா 19,123,777 ஆக இருந்ததுடன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி ரூபா 18,783,254 ஆக இருந்ததனால் வேறுபாடு ரூபா 340,523 ஆக இருந்தது.

## 1.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பல ஆண்டுகளாக முன்கொண்டுவரப்பட்டிருந்த ரூபா 2,776,827 தொகையான முற்பணங்கள் மீளாய்வாண்டின் இறுதிவரையும் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) துறை ரீதியான முற்பணங்களாக 1999 ஆம் ஆண்டிலிருந்து 2001 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியில் வழங்கப்பட்டிருந்த ரூபா 2,493,173 தொகை மீளாய்வாண்டின் போதும் தீர்த்துவைக்கப்படாது முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

(இ) காணிச் சுவீகரிப்பு நடவடிக்கைகளுக்காக பல ஆண்டுகளாக பிரதேச செயலகத்திற்கு வைப்புக்களாக 05 காணிகளுக்குச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 3,225,000 தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு தீர்த்துவைக்கப்படுவதற்கோ அல்லது அக்காணிகளை எதிர்பார்த்த நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பல ஆண்டுகளாக செலுத்தவேண்டிய பணமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுகின்ற ரூபா 58,199 தொகையான கடன்கொடுத்தோர் மீதி மீளாய்வாண்டின் போதும் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) அதிகாரசபையினால் பல ஆண்டுகளுக்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த ரூபா 1,424,409 தொகையான 08 கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதியினை மீண்டும் அறவீடுசெய்வதற்கு 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பல்வேறு செயற்திட்டங்களுக்காக பல்வேறு நிறுவனங்கள் மற்றும் 13 தனிப்பட்டவர்களுக்குச் செலுத்தப்பட்ட ரூபா 1,326,151 தொகை 2012 பெப்ரவரி 18 ஆந் திகதி வரையும் மீண்டும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

ரூபா 2,146,652 கிரயமான தொடர்பாடல் உபகரணங்களுக்காக மெய்மையாய்வுச் சபை அறிக்கை சமர்ப்பிக்கப்படாததனால் அவ்விடயத்தினை மீளாய்வாண்டின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

### 1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முதலியவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் (நி.பி) | |
| | நி.பி 371 | முற்பணங்கள் உரிய செயற்பாடு பூர்த்திசெய்யப்பட்ட உடன் தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் 1999 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டின் இறுதி வரை செலுத்தப்பட்ட ரூபா 6,585,888 தொகையான முற்பணங்கள் 2011 திசெம்பர் 31 வரை தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1990 ஒக்டோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபம் | 06 மாதங்களுக்கு ஒரு தடவை எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | தெற்கு அபிவிருத்தி அதிகாரசபையின் 2011 மே 27 ஆந் திகதிய 8/24 ஆம் இலக்க பணிப்பாளர் சபைத் தீர்மானத்திற்குரிய 11/04/25 ஆம் இலக்க பணிப்பாளர் சபைப் பத்திரம் | ரூபா 24,053,809 பெறுமதியான 51 மீதிகள் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பெற்றுக்கொள்ளப்படாது காணப்பட்டதனால் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராகிய அமைச்சு செயலாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டு புத்தகங்களிலிருந்து நீக்குவதற்குத் தீர்மானம் |

எடுக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை அது இடம்பெற்றிருக்கவில்லை. பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் இப்பணம் அறவிடப்பட்டதாகவோ உரிய ஆவணங்களைக் கண்டுபிடித்து கணக்குகளில் தேவையான செம்மையாக்கல்கள் செய்யப்பட்டதாகவோ தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிக் கூற்றுக்கள்

---------------------------

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

--------------------------------------------------

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களைத் தவிர்த்து 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகாரசபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

------------------------------------------------

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) முழுப்பெறுமதியும் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தும் பாவனையிலிருந்து அகற்றப்படாத மோட்டார் வாகனம், இயந்திரம், உபகரணங்கள் என்பவற்றின் பெறுமதி இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 18 இன் பிரகாரம் மீள்மதிப்புச் செய்யப்பட்டு கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 42 இன் பிரகாரம் பணிக்கொடைக்காக ஏற்பாடு செய்யப்பட்ட நிதி முதலீடு செய்யப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் நலன்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பணிக்கொடை கொடுப்பனவுகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட பணம் ரூபா 34,808,657 ஆக இருந்த போதிலும் ஊழியர்களின் பணிக்கொடை கொடுப்பனவுகளுக்காக உருவாகும் எதிர்காலப் பொறுப்புக்களைத் தீர்த்துவைப்பதற்குரிய நிதியத்தினை உருவாக்குவதற்காக ரூபா 162,204 பெறுமதியான கணக்கு மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பத்தரமுல்லை பெலவத்தை ருஹுனு சந்தை செயற்திட்டத்திற்கான காணிக்கு மண் நிரப்புவதற்காக காணி மீட்டல் மற்றும் அபிவிருத்தி செய்தல் கூட்டத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 1,731,183 தொகையும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கான நிலுவையாகவுள்ள வரி மற்றும் பெறுமதி சேர் வரிக்காகச் செலுத்தவேண்டிய ரூபா 368,000 தொகையும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

(அ) 2011 ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தித் திட்டத்தின் பிரகாரம் காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, மொனறாகலை ஆகிய மாவட்டங்களில் ''திவிநெகும'' நிகழ்ச்சித்திட்டத்தில் உள்நாட்டு பொருளாதாரப் பிரிவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை வலுப்படுத்தும் வாழ்வாதார மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக ஏற்பாடு செய்யப்பட்ட தொகை ரூபா 214,970,484 ஆக இருந்தது. மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் உள்ளபடியான செலவு ரூபா 52,921,998 ஆக இருந்த போதிலும் செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் செலவு ரூபா 77,405,823 ஆக இருந்ததனால் வேறுபாடு ரூபா 24,483,825 ஆக இருந்தது.

(ஆ) ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் விசேட வீடமைப்புச் செயற்திட்டத்திற்கான இறுதி நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் உள்ளபடியான செலவு ரூபா 58,638,447 ஆக இருந்த போதிலும் செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் செலவு ரூபா 44,106,000 ஆகு இருந்ததனால் வேறுபாடு ரூபா 14,532,447 ஆக இருந்தது.

(இ) காணிப் பிரிவிலிருந்தும் கணக்குகள் பிரிவிலிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் காணி குத்தகை வருமானம் மற்றும் காணிகளின் பெறுமதி ரூபா 19,123,777 ஆக இருந்ததுடன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி ரூபா 18,783,254 ஆக இருந்ததனால் வேறுபாடு ரூபா 340,523 ஆக இருந்தது.

### 2.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பல ஆண்டுகளாக முன்கொண்டுவரப்பட்டிருந்த ரூபா 2,776,827 தொகையான முற்பணங்கள் மீளாய்வாண்டின் இறுதிவரையும் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) துறை ரீதியான முற்பணங்களாக 1999 ஆம் ஆண்டிலிருந்து 2001 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியில் வழங்கப்பட்டிருந்த ரூபா 2,493,173 தொகை மீளாய்வாண்டின் போதும் தீர்த்துவைக்கப்படாது முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

(இ) காணிச் சுவீகரிப்பு நடவடிக்கைகளுக்காக பல ஆண்டுகளாக பிரதேச செயலகத்திற்கு வைப்புக்களாக 05 காணிகளுக்குச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 3,225,000 தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு தீர்த்துவைக்கப்படுவதற்கோ அல்லது அக்காணிகளை எதிர்பார்த்த நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பல ஆண்டுகளாக செலுத்தவேண்டிய பணமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுகின்ற ரூபா 58,199 தொகையான கடன்கொடுத்தோர் மீதி மீளாய்வாண்டின் போதும் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) அதிகாரசபையினால் பல ஆண்டுகளுக்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த ரூபா 1,424,409 தொகையான 08 கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதியினை மீண்டும் அறவீடுசெய்வதற்கு 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பல்வேறு செயற்திட்டங்களுக்காக பல்வேறு நிறுவனங்கள் மற்றும் 13 தனிப்பட்டவர்களுக்குச் செலுத்தப்பட்ட ரூபா 1,326,151 தொகை 2012 பெப்ரவரி 18 ஆந் திகதி வரையும் மீண்டும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

ரூபா 2,146,652 கிரயமான தொடர்பாடல் உபகரணங்களுக்காக மெய்மையாய்வுச் சபை அறிக்கை சமர்ப்பிக்கப்படாததனால் அவ்விடயத்தினை மீளாய்வாண்டின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

### 2.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முதலியவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் (நி.பி) | |
| | நி.பி 371 | முற்பணங்கள் உரிய செயற்பாடு பூர்த்திசெய்யப்பட்ட உடன் தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் 1999 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டின் இறுதி வரை செலுத்தப்பட்ட ரூபா 6,585,888 தொகையான முற்பணங்கள் 2011 திசெம்பர் 31 வரை தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1990 ஒக்டோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபம் | 06 மாதங்களுக்கு ஒரு தடவை எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட் டிருக்கவில்லை. |
| (இ) | தெற்கு அபிவிருத்தி அதிகாரசபையின் 2011 மே 27 ஆந் திகதிய 8/24 ஆம் இலக்க பணிப்பாளர் சபைத் தீர்மானத்திற்குரிய 11/04/25 ஆம் இலக்க பணிப்பாளர் சபைப் பத்திரம் | ரூபா 24,053,809 பெறுமதியான 51 மீதிகள் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பெற்றுக்கொள்ளப்படாது காணப்பட்டதனால் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராகிய அமைச்சு செயலாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டு புத்தகங்களிலிருந்து நீக்குவதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை அது இடம்பெற்றிருக்கவில்லை. பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் இப்பணம் அறவிடப்பட்டதாகவோ உரிய ஆவணங்களைக் கண்டுபிடித்து கணக்குகளில் தேவையான செம்மையாக்கல்கள் செய்யப்பட்டதாகவோ தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

-----------------------------

### நிதிசார் விளைவுகள்

---------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது அதிகாரசபையின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 26,406,382 பற்றாக்குறையாக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் இதற்கு நேரொத்த பற்றாக்குறை ரூபா 8,672,824 ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டுச் செலவுகள் ரூபா 20,878,761 ஆல் அதிகரித்திருந்தமை மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை அதிகரிப்பதற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------

### 4.1 செயலாற்றல்

---------------------

மீளாய்வாண்டின் போது திவிநெகும நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஜாதிக சவிய கமநெகும நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, மொனறாகலை ஆகிய 04 மாவட்டங்களுக்காக 1448 செயற்திட்டங்கள் தொடர்பாக ரூபா 348,331,160 தொகை ஏற்பாடு செய்யப்பட்டு, அதில் 902 செயற்திட்டங்களைப் பூர்த்திசெய்வதற்காக ரூபா 184,075,257 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. 546 செயற்திட்டங்களுக்குரிய நிதி ஏற்பாடாகிய ரூபா 164,255,903 தொகை செலவு செய்யப்படாது சேமிக்கப்பட்டிருந்தது. சேமிப்புச் சதவீதம் 47.1% ஆக இருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்திற்காக அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் 2011 யூலை 19 ஆந் திகதி பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய கொள்வனவுத் திட்டம் 2011 செப்தெம்பர் 27 ஆந் திகதி அமைச்சரின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ii) அதிகாரசபையின் அதிகாரச்சட்டத்திலுள்ள அடிப்படைச் செயற்பாடுகளுக்குப் புறம்பாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் திவிநெகும மற்றும் ஜாதிக சவிய கமநெகும நிகழ்ச்சித்திட்டங்களை அடிப்படைச் செயற்பாடுகளாகக் கருதி ரூபா 300,500,000 தொகையான செலவு இலக்குடன் அபிவிருத்தித் திட்டம் ஒன்று 2011 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிகழ்ச்சித்திட்டங்களின் புதிய வேலைகள், திரண்ட மற்றும் தொடர்ச்சியான வேலைகள் தொடர்பாக ரூபா 119,102,000 தொகை மீளாய்வாண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதன் சதவீதம் 39.6% ஆக மிகவும் குறைந்த பெறுமதியினைக் கொண்டிருந்தது.

(iii) "திவிநெகும" நிகழ்ச்சித்திட்டத்திற்காக காலி, மாத்தளை, ஹம்பாந்தோட்டை, மொனறாகலை ஆகிய 04 மாவட்டங்களில் உள்நாட்டு பொருளாதார பிரிவு வாழ்வாதாரம், உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி என்பவற்றிற்காக ரூபா 214,970,484 தொகையினைச் செலவு செய்வதற்கு இலக்கிடப்பட்டிருந்தும் செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் உள்ளபடியான செலவு ரூபா 77,405,822 ஆக இருந்ததுடன் செலவுகளின் சதவீதம் 36% ஆக இருந்தது.

(iv) தலைவர்/ பணிப்பாளர் நாயகத்தின் 2011 யூலை 06 ஆந் திகதிய எஸ்டீஏ/2011/2 ஆம் இலக்க சுற்றுநிருபக் கடிதத்தின் 4 ஆம் பந்தியின் அறிவுறுத்தலின்படி, பிரகாரம் திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வீடுகளுக்க அருகாமையில் சுற்றுலா விடுதிகளை உருவாக்குவதற்காகவும் அதற்கான விழிப்புணர்வினை வழங்குவதற்காகவும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து நிதி ஏற்பாட்டினைப் பெற்றுக்கொண்டு துறைரீதியான முகாமைத்துவ உட்கட்டமைப்பு வசதிகளினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனக் காட்டப்பட்டிருந்தும் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் உதவி கிடைக்காததன் காரணமாக மீளாய்வாண்டில் அவ்வாறான நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(v) பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் (அபிவிருத்தி) 2011 நவம்பர் 24 ஆந் திகதிய MED/RE/R2/SDA/GEN/2011 ஆம் இலக்க கடிதத்தில் அதிகாரசபையின் காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, மொனறாகலை ஆகிய மாவட்டங்களில் 2011 ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தி திட்டங்களில் 33 அடிப்படை உட்கட்டமைப்பு மற்றும் நீர்ப்பாசன செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கான தொடக்க உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்ட முக்கியத்துவம் குறைந்த செயற்திட்டங்களிலிருந்து ரூபா 11,696,742 தொகையினை மாற்றுவதற்கு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இந்த அங்கீகாரம் வழங்கப்பட்ட செயற்திட்டங்களிலிருந்து ரூபா 3,954,027 பெறுமதியான 11 செயற்திட்டங்கள் மாத்திரம் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

--------------------------------------------------------

### 4.2.1 பத்தரமுல்லை, பெலவத்தை ருஹுனு சந்தை செயற்திட்டம்

--------------------------------------------------------------------------------------------------------

அதிகாரசபை தென் பகுதியிலுள்ள உற்பத்தியாளர்களின் விவசாய மற்றும் கால்நடை உற்பத்திகள், மட்பாண்டங்கள், கருங்கல் பொருள் உற்பத்தி என்பவற்றிற்கு நியாயமான விலையினை வழங்கும் குறிக்கோளுடன் ருஹுனு உற்பத்திப் பொருள் விற்பனை நிலையத்தினை தலைநகரில் ஆரம்பிப்பதற்கு பத்தரமுல்லை, பெலவத்தை சுனில் மாவத்தையிலுள்ள காணி 2005 யூலை 27 ஆந் திகதி நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பொறுப்பேற்கப்பட்டிருந்தது. 2006 நவம்பர் 02 ஆந் திகதி காணி மீட்டல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்துடன் காணி அபிவிருத்திக்காக ரூபா 2,254,230 தொகைக்கு உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டு மீளாய்வாண்டின் இறுதியளவில் அதற்காக ரூபா 4,164,920 செலவு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதிப் பணிப்பாளரின் (காணிகள்) 2005 யூலை 27 ஆந் திகதிய 10/8/2291 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் 3/2005 ஆம் இலக்க வரைபடத்தில் தொகுதி 01 இற்குரிய ஒரு ஏக்கர் காணிக்காக எழுத்து மூல உறுதி வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும் நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் குத்தகை உடன்படிக்கையினை மேற்கொள்வதற்காக ரூபா 204,400 செலுத்தப்பட்டிருந்தும் இரண்டு தரப்பினர்களுக்குமிடையே உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காணி மீட்டல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் மூலம் 9 மீற்றர் அகலமான இரும்பு பாலம் ஒன்றினை நிர்மாணிப்பதற்காக 2007 பெப்ரவரி 21 ஆந் திகதி ரூபா 2,443,828 பெறுமதியான மதிப்பீடு (பெறுமதி சேர் வரியுடன்) சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் பாலத்தினை எடுத்துவருதல் மற்றும் பாதுகாத்தல் தொடர்பாக ரூபா 160,000 செலுத்தப்பட்டிருந்தும் இரண்டு தரப்பினர்களுக்குமிடையே உடன்படிக்கை செய்துகொண்ட உடன்பாடு ஏற்படுத்தப்படாததுடன் பாலம் நிர்மாணித்தலும் இடம்பெறவில்லை.

(இ) இச்செயற்திட்டத்தின் பௌதீக மற்றும் நிதிசார் செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டு வரை மேற்கொண்ட செலவுகளில் அதிகாரசபையின் 07 லொறிகளைப் பழுதுபார்த்தல் மற்றும் ஹம்பாந்தோட்டை விவசாயிகளின் பிணக்குகளைத் தீர்த்துவைத்தல் என்பவற்றிற்காகச் செலவு செய்யப்பட்ட ரூபா 464,485 தொகையானது மொத்தச் செலவுகளைக் கணிக்கும் போது தவிர்க்கப்பட்டிருந்தது.

(ஈ) தெற்கு அபிவிருத்தி அதிகாரசபை தொடர்பாக 2007 பெப்ரவரி 27 ஆந் திகதி சனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தின் போது உத்தேச சந்தை அமைந்துள்ள 01 ஏக்கர் காணியினை நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஒப்படைப்பதற்கும் அது சமய விவகார அமைச்சுக்கு ஒப்படைத்து அதிகாரசபை செலவுசெய்த தொகையினை சமய விவகார அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தும் 2012 பெப்ரவரி 24 ஆந் திகதி வரையும் அந்த அமைச்சு எதுவித பிரதிபலிப்பினையும் காட்டியிருக்கவில்லை.

(உ) 2012 மார்ச் 02 ஆந் திகதிய மேற்கொள்ளப்பட்ட வெளிக்களப் பரிசோதனையில் வரை அதிகாரசபையினால் அபிவிருத்தி செய்யப்பட்ட காணி வெளித்தரப்பினர் ஒருவரினால் பயன்படுத்தப்பட்டு வந்ததுடன் அதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபை அல்லது இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகாரசபையின் எழுத்துமூல அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது வெளிப்படுத்தப்பட்டது.

(ஊ) தென் பகுதியிலுள்ள உற்பத்தியாளர்களின் உற்பத்திப் பொருளுக்கு நியாயமான விலையினை வழங்கும் குறிக்கோளில் ஆரம்பிக்கப்பட்ட ருஹுனு சந்தை செயற்திட்டம் 2012 பெப்ரவரி 24 ஆந் திகதி வரையும் அமுல்படுத்தப்படாததனால் உரிமையினை உரிய முறையில் ஒப்படைக்கப்படாது காணி அபிவிருத்திக்காகச் செலவு செய்த ரூபா 4,164,920 தொகையான முதலீடு விளைவற்றதாகக் காணப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது.

### 4.2.2 நில்வள கங்கை செயற்திட்டத்தின் இரும்பு படகு

---

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நில்வள கங்கையின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற வெளிநாட்டுக் கம்பனிக்குச் சொந்தமான (பிரான்சிலுள்ள பெக் கம்பனி) கைவிடப்பட்ட இரும்பு படகு அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 12(இ), 13(ஈ), (ஏ, (ஒ), (கா) ஆம் பிரிவுகளிலுள்ள அதிகாரத்தின் பிரகாரம் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2007 சனவரி 31 ஆந் திகதிய உடன்படிக்கையின் மூலம் இந்த இரும்பு படகினைத் திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு ஒரு நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் படகினை எடுத்துச்செல்வதற்கு முடியாததன் அடிப்படையில் ஏற்பட்ட நட்டத்திற்காக ரூபா 158 மில்லியன் இழப்பீடு கோரி 2011 யூன் 09 ஆந் திகதிய HC/civil/2001/2011/MR ஆம் இலக்க வழக்கு அதிகாரசபைக்கு எதிராகத் தொடுக்கப்பட்டிருந்தது.

(இ) அதிகாரசபையின் அதிகாரச்சட்டத்தினைப் பயன்படுத்தி அதிகாரசபையின் நடவடிக்கைகளுடன் எதுவித தொடர்புமற்ற இரும்பு படகினை தனியார் தரப்பினருக்கு அதிகாரசபையின் பொறுப்பிற்கு உட்பட்டு எழுத்துமூல உடன்படிக்கையின் மூலம் ஒப்படைப்பதற்கு முன்னாள் பணிப்பாளரின் (கொள்கை மற்றும் திட்டமிடல்) தற்றுணிபின் பேரில் இடம்பெற்ற முறையற்ற நடைமுறையின் காரணமாக அதிகாரசபை இழப்பீடு செலுத்தும் நிலைமைக்கு உருவாகியிருந்தது.

**4.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மை**

---

**4.3.1** அதிகாரசபையின் ஒவ்வொரு பிரிவினதும் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| பிரிவு | குறைபாடு தொடர்பான அவதானிப்பு |
|---|---|
| காணிப்பிரிவு | ரூபா 100,000 செலவு இலக்கினைக் கொண்ட தேனீ வளர்ப்பு செயற்திட்டத்திற்காக பொருத்தமான காணியினைச் சுவீகரிப்பதற்கு முடியாமையும் நலன்பெறுனர்களுக்கு விழிப்புணர்வு இன்மையும் காரணமாக அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| கடற்றொழில் பிரிவு | (i) கடற்றொழில் உற்பத்தி மற்றும் உப உற்பத்தியினை மேற்படுத்தும் செயற்திட்டம் அமுல்படுத்தப்படாதிருந்ததுடன் கொடபொல பிரதேச செயலகப் பிரிவின் மீன் குஞ்சுகளை பெரிய மீன்களாக மாற்றும் செயற்திட்டம், பக்மீகஹ குளத்தில் மீன் குஞ்சுகளை இடல் ரூபா 20,000 தொகையான செயற்திட்டம், மீனவர்களின் வருமானத்தினை அதிகரிக்கும் ரூபா 330,000 தொகையான செயற்திட்டம் முதலிய செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நன்னீர் மீன் தொட்டிகளை நிர்மாணித்தல், மீன் குஞ்சுகளை பெரிய மீன்கள் வரை வளர்க்கும் ரூபா 380,000 பெறுமதியான இரண்டு தொட்டிகளை நிர்மாணித்தல் என்பவற்றிற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் அவை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. தென்மாகாண கடற்றொழில் அமைச்சின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட பெரிய மீன்களை எடுத்துச் செல்வதற்காக ரூபா 10,000 தொகை அதிகாரசபையின் மூலம் செலவு செய்யப்பட்டிருந்தது. |

(iii) மீளாய்வாண்டிற்கான கொள்வனவுத் திட்டத்தின் பிரகாரம் கடற்றொழில் மற்றும் சுகாதாரப் பிரிவிற்கு ரூபா 1,425,000 செலவு இலக்கிடப்பட்டிருந்ததுடன் அச்செயற்திட்ட செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் எதுவித செலவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

விவசாயப் பிரிவு

(i) மீளாய்வாண்டிற்கான அபிவிருத்தித் திட்டத்தின் பிரகாரம் 485 புதிய வேலைகள் மற்றும் தொடர்ச்சியான வேலைகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 69,650,000 தொகையான செலவுகள் இலக்கிடப்பட்டிருந்ததுடன் செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 293 புதிய வேலைகள் மற்றும் தொடர்ச்சியான வேலைகளுக்கான உள்ளபடியான செலவு ரூபா 19,981,329 ஆக இருந்ததனால் நிதிசார் மற்றும் பௌதீக இலக்குகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ii) விதைகள் மற்றும் நாற்றுக்கள் வழங்கும் நிலையத்தினை தோற்றுவிக்கும் செயற்திட்டத்தின் கீழ் காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, மொனறாகலை ஆகிய மாவட்டங்களில் சிறிய அளவிலான 150 உள்ளூர் வழங்குனர்களை உருவாக்குவதற்கு ரூபா 1,500,000 தொகையான செலவு இலக்கிடப்பட்டிருந்ததுடன் மேற்கூறிய நான்கு மாவட்டங்களின் 100 நலன்பெறுனர்களுக்கு ரூபா 911,146 மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்தது.

(iii) 50 கோழி வளர்ப்பு நிலையம்/ வணிக கோழி பண்ணை நிலையத்தினை தோற்றுவிப்பதற்கு ரூபா 1,250,000 தொகையான செலவுகள் இலக்கில் 31 நலன்பெறுனர்களைப் பயிற்றுவித்தல், கூடுகள் அமைத்தல், துணைக்கருவிகள் வழங்குதல், ஒரு நாள் கோழிக்குஞ்சுகள் வழங்குதல், போன்ற செயற்பாடுகளுக்காக 33 நிலையங்களுக்கு ரூபா 697,792 தொகை மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்தது.

(iv) 25 ஆடு வளர்ப்புச் செயற்திட்டம்/ ஆட்டுப் பண்ணை நிலையங்களைத் தோற்றுவிப்பதற்கு ரூபா 1,250,000 தொகையான செலவு இலக்கில் 10 நலன்பெறுனர்களைப் பயிற்றுவித்தல், கொட்டில்கள் அமைத்தல் ஆகிய செயற்பாடுகளுக்காக 10 நிலையங்கள் தொடர்பாக ரூபா 120,705 மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்தது.

(v) 20 பசு வளர்ப்புச் செயற்திட்டம்/ வணிக ரீதியான பசு பண்ணை நிலையங்களைத் தோற்றுவிப்பதற்கு ரூபா 2,000,000 செலவு இலக்கில் 24 நலன்பெறுனர்களை பயிற்றுவித்தல், கொட்டில்களை அமைப்பதற்காக பொருட்களை வழங்குதல் ஆகிய செயற்பாடுகளுக்காக 20 நிலையங்களுக்கு ரூபா 633,644 மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்தது.

**மனித வள அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் பிரிவு**

மனித வள அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் பிரிவின் மூலம் திவிநெகும நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக விபரமான தரவு முறைமை ஒன்று தயாரிக்கப்பட்டு கூட்டிணைந்த இறுவெட்டு ஒன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 2012 யூலை 05 ஆந் திகதி வரையும் அது (இறுவெட்டு) தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.

**கைத்தொழில் பிரிவு**

(அ) குழாய் கைத்தொழில்

----------------------------------

மீளாய்வாண்டிற்கான கொள்வனவுத் திட்டத்தின் பிரகாரம் கைத்தொழில் பிரிவின் குழாய் உற்பத்திச் செயற்திட்டத்திற்காக மாத்தறை மாவட்டத்தின் பலொல்பிடிய மற்றும் படுவிட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் குழாய் கைத்தொழிலாளர்களுக்குத் தேவையான வசதிகள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு ரூபா 500,000 தொகையினை செலவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் செலவு ரூபா 50,758 ஆக இருந்தது.

(ஆ) பிபுலெகொட மட்பாண்ட கைத்தொழிலாளர்களின் சீவனோபாயத்தினை அதிகரித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் செயற்திட்டம்

---

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் பிபுலெகொட கிராமத்தின் மட்பாண்டத்தொழில் ஈடுபட்டுள்ள கைத்தொழிலாளர்களுக்கு அதிகாரசபையின் மற்றும் தனிப்பட்ட பங்களிப்பு முறையே ரூபா 335,000 மற்றும் ரூபா 321,000 தொகைகளை செலவு செய்வதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தும் செயற்திட்ட நடவடிக்கை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 4.3.2 இணைந்த கம்பனி ஒன்றில் அதிகாரசபை முதலீடு செய்தல்

---

இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 13(உ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையினைச் செயற்படுத்துவதற்கான ஏதும் நடவடிக்கைகள் தொடர்பாக அதிகாரசபைக்குள்ளேயே திணைக்களம் அல்லது முகவராண்மையினைத் தோற்றுவிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க வேறு ஒரு பெயரில் பொதுக்கம்பனியாகக் காணப்பட்ட 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் 2009 நவம்பர் 17 ஆந் திகதியிலிருந்து வரையறுத்த தெற்கு அபிவிருத்தி நிதிக் கம்பனியாக வியாபாரப் பெயரினை மாற்றம் செய்து பொதுக்கம்பனி ஒன்று பதிவு செய்யப்பட்டிருந்தது.

அதிகாரசபையானது ருஹுனு 2001 வென்சர் கெப்பிட்டல் கம்பனியில் ரூபா 60 மில்லியன் தொகையான பங்கு மூலதனத்தில் ஒன்று ரூபா 10 ஆன பத்து இலட்சம் பங்குகள் ரூபா 10,000,000 இற்கு வழங்கப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக பல்வேறு கடன் திட்டத்திற்காக ரூபா 35,000,000 வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே 1999, 2000, 2001 ஆகிய ஆண்டுகளில் பொதுக் கம்பனியின் பதவியணியினர் சம்பளம் மற்றும் ஏனைய செலவுகளாக ரூபா 6,858,958 செலவு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) (i) பொதுக்கம்பனி நட்டமடைந்ததன் காரணமாக 1997 ஆம் ஆண்டிலிருந்து 2011 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியில் முதலீடு செய்த பணத்திற்காக பங்கிலாபம் அல்லது வட்டி பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) ஏற்கெனவே காணப்பட்ட வென்சர் கெப்பிட்டல் கம்பனியினால் அதிகாரசபை நிர்ணயித்த செயற்பாடுகளுக்கு முரணாக கடன் வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(iii) அதிகாரசபையானது ரூஹுனு 2001 வென்சர் கெப்பிட்டல் கம்பனியுடன் கைச்சாத்திட்ட உடன்படிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் கடன் திட்டத்திற்காக வழங்கிய பணத்தினை மீளச்செலுத்துதல் வேண்டும். அதற்கிணங்க ரூபா 35,000,000 தொகையில் ரூபா 12,000,000 தொகை மீள் சுழற்சி நிதியாக மாற்றப்பட்டிருந்ததுடன் அந்தப் பணமும் மீள அறவிடப்பட்டிருந்த ரூபா 1,927,480 தொகை குறைக்கப்பட்டதன் பின்னர் ரூபா 21,072,520 தொகை மீளாய்வாண்டின் இறுதியளவில் அறவிடவேண்டியிருந்தது.

(iv) அதிகாரசபையினால் கடன் திட்டத்திற்காக ருஹுனு 2001 வென்சர் கெபிடல் கம்பனிக்கு கடன் வழங்கும் போது கையெழுத்திட்ட எதுவித உடன்படிக்கையும் முதலீட்டிற்கு கிடைக்கவேண்டிய வட்டிப் பணம் தொடர்பாக குறிப்பிட்டிருக்கவில்லை.

### 4.4 பதவியணியினர் நிர்வாகம்

இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகாரசபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணிகளின் விபரம் கீழே தரப்படுகின்றது. அதற்கிணங்க 21 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன.

| பதவியின் வகை | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| நிறைவேற்றுனர் | 17 | 12 |
| இரண்டாம் நிலை | 190 | 176 |
| ஆரம்ப நிலை | 80 | 78 |
| | 287 | 266 |

### 4.5 வாகனப் பயன்பாடு

மீளாய்வாண்டின் போது 02 பெற்றோல் வாகனங்கள், 10 டீசல் வாகனங்கள், 19 கெப் வாகனங்கள், 04 பவுசர்கள், 07 லொரிகள், 02 வான்கள் என்பன அதிகாரசபையின் போக்குவரத்து அணியினைச் சார்ந்தவைகளாகும். வாகனப் பயன்பாடு தொடர்பான தரவுகளின் பகுப்பாய்வு ஒன்று முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழே தரப்படுகின்றது.

| விபரம் | 2011 | 2012 |
|---|---|---|
| எரிபொருள் செலவு ரூபா | 5,665,334 | 5,864,104 |
| பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு செலவு ரூபா | 7,640,625 | 3,925,256 |
| சாரதிகளின் சம்பளம், பட்டா மேலதிக நேரவேலை ரூபா | 13,720,449 | 4,653,934 |
| மொத்த கிரயம் ரூபா | 27,026,408 | 14,443,294 |
| ஓடிய மொத்த தூரம் கிலோமீற்றர் | 565,615 | 518,560 |
| பயன்படுத்தப்பட்டுள்ள எரிபொருளின் அளவு லீட்டர் பயன்படுத்தப்பட்ட எரிபொருளின் அளவினுள் வெளி நிறுவனங்களினால் மிகையாக செலவு செய்த எரிபொருளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. | 70,489 | 65,720 |
| ஒரு லீற்றர் எரிபொருளுக்கு ஓடிய சராசரி தூரம் கிலோ மீற்றர் | 8.02 | 7.89 |
| ஒரு கிலோ மீற்றருக்கு எரிபொருளுக்கான சராசரி செலவு ரூபா | 10.01 | 11.30 |
| ஒரு கிலோ மீற்றருக்கு பழுதுபார்த்தலும் பராமரித்தலுக்குமான சாசரிச் செலவு ரூபா | 13.50 | 7.56 |
| ஒரு கிலோ மீற்றருக்கு சாரதிகளின் ஊதியத்திற்கான சராசரிச் செலவு ரூபா | 24.25 | 8.97 |
| ஒரு கிலோ மீற்றருக்கான ஓட்டு மொத்த சராசரிச் செலவு ரூபா | 47.78 | 27.85 |

## 4.6 ஏனைய தனிப்பட்டவர்களுக்கும் அரசாங்க நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டுள்ள அதிகாரசபையின் வளங்கள்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 8.3.9 ஆம் பிரிவிற்கு முரணாக அதிகாரசபையின் வாகனங்கள் பின்வரும் நபர்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளன.

| வாகன இலக்கம் | வாகன வகை | வாகனம் பயன்படுத்தும் நபரின் பதவி |
|---|---|---|
| 300-0546 | மோட்டார் வாகனம் | ஆலோசனையாளர் |
| 57-5713 | டபிள் கப் வாகனம் | பிரதி பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பொதுமக்கள் தொடர்பு உத்தியோகத்தர் |

## 5. கணக்களி தன்மையும் நல்ல ஆளுகையும்

---

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபை தனது நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகா 2008 இலிருந்து 2012 வரையான காலத்திற்காக காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, மொனறாகலை ஆகிய மாவட்டங்களிலும் கொலன்ன, எம்பிலிபிடிய ஆகிய பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்திலுள்ள எட்டு பிரிவுகளின் கீழ் ரூபா 2,127.74 மில்லியனைச் செலவு செய்வதற்கு கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் 2008 நவம்பர் 17 ஆந் திகதி சனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அதிகாரசபைக்கு வழங்கப்படும் கட்டளையின் பிரகாரம் அத்திட்டத்தினைக் கைவிட்டு 2009 ஆம் ஆண்டிலிருந்து பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஜாதிக சவிய கமநெகும நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

(ஆ) 2012 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரையான காலத்திற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்துவதற்கு இலக்கிடப்பட்டிருந்தது.

(இ) நிறுவனத்தின் குறிக்கோள்களில் உள்ளடக்கப்பட்ட பின்வரும் செயற்பாடுகள் அமுல்படுத்தப்படாதிருந்ததுடன் அதற்குரிய திட்டத்தினைத் தயாரிக்கும் போது மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(i) உற்பத்தித்திறனை அதிகரித்தல், பொருளாதார அபிவிருத்தியினை மேம்படுத்துதல், வருமானம் மற்றும் தொழில்வாய்ப்புக்களை உருவாக்கும் குறிக்கோளுடன் அபிவிருத்திச் செயற்திட்டங்களை பெயர் குறிப்பிடப்பட்ட பிரதேசங்களில் திட்டமிடலும் அமுல்படுத்துதலும்.

(ii) தெரிவுசெய்யப்பட்ட பிரதேசங்களின் ஒட்டுமொத்த அபிவிருத்தி திட்டங்களில் இனங்காணப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பாக முன்னுரிமை அடிப்படையில் விபரமாக ஆய்வு செய்தல்.

(iii) ஏதாவது நிர்ணயிக்கப்பட்ட செயற்திட்டங்கள் அல்லது நிகழ்ச்சித்தட்டங்களுக்காக வெளிநாட்டு நிதிகள் வழங்குவதற்கு அமைச்சரின் அமைச்சிலிருந்து வேண்டுகோள் விடுத்தல்.

## 5.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

201 ஆம் ஆண்டிற்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் கீழே காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) செயற்திட்டங்களைத் தீர்மானிக்கும் போது அதிகாரசபையின் அனைத்து பிரிவுகளையும் கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. நிறுவனத்தின் குறிக்கோள்களுக்கு மாற்றமாக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அதன் இலக்குகள் அடைந்துகொள்ளப்படாத சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன.

(ஆ) நிறுவனத்தின் குறிக்கோள்களையும் இலக்குகளையும் நிறைவேற்றும் போது 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 5.1.2 ஆம் பிரிவின் பிரகாரம், பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களை குறிப்பிட்டுக் காட்டப்படவேண்டிய போதிலும் 2011 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அவ்வாறு பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள் குறிப்பிட்டுக் காட்டப்படாது பொறுப்பான பிரிவு மாத்திரம் காட்டப்பட்டிருந்தது.

## 5.3 பாதீட்டு கட்டுப்பாடு

மதிப்பீடு செய்யப்பட்ட ஏனைய வருமானங்கள் நூற்றுக்கு நூறு வீதம் பாதகமான நிலைமையிலும் அபிவிருத்தி மற்றும் மூலதனச் செலவுகள் மதிப்பீடு செய்யப்பட்ட செலவுகள் மேற்கொள்ளப்படாதிருந்தமை மற்றும் சில மதிப்பீடு செய்யப்பட்ட அபிவிருத்திச் செலவுகளை விட மிகவும் குறைந்த செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை என்ற அடிப்படையில் பாதீடு சிறந்த முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 5.4 பொது முயற்சிகள் தொடர்பான கணக்குகள் குழுவின் தீர்மானத்தினை அமுல்படுத்தல்

(அ) இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகாரசபையின் 2007, 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளுக்கான கணக்குகளுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தொடர்பாக 2011 ஒக்டோபர் 25 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான கணக்குகள் குழுவின் தீர்மானம் மற்றும் கட்டளைகள் உரிய அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2012 மார்ச் 15 ஆந் திகதி வரையும் அத்தீர்மானம் தொடர்பாக பல்வேறு நிறுவனங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் கடிதத் தொடர்புகள் மேற்கொள்ளப்பட்டமை மாத்திரம் இடம்பெற்றுள்ளன.

(ஆ) (i) பொருளாதார அபிவிருத்தி அமைச்சு செயலாளரின் 2012 பெப்ரவரி 15 ஆந் திகதிய MED/AQ/5/7/2012 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் அதிகாரசபை தொடர்பாக பொதுமுயற்சிகள் மீதான பாராளுமன்ற தெரிவுக்குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்ட வெளிப்படுத்தல்கள் மற்றும் கட்டளைகள் தொடர்பான சிபார்சுகள் அமுல்ப்படுத்தப்பட வேண்டிய போதிலும் இனங்காணப்பட்டுள்ள ஒழுங்கீனங்கள் மீண்டும் இடம்பெறாதிருப்பதற்காக உத்தியோகத்தர்களுக்கு பொறுப்புக்கள் ஒப்படைக்கப்படுவதற்கும் மேன்மை தங்கிய சனாதிபதி அவர்களினால் தீர்மானம் எடுக்கப்பட்டு 2012 சனவரி 25 ஆந் திகதி அமைச்சரவையும் அங்கீகாரம் வழங்கியுள்ளமை தெரியப்படுத்தப்பட்டிருந்தது.

(ii) மேலும் இகங்காணப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக அரசாங்கத்திற்கு ஏதாவது நட்டங்கள் ஏற்பட்டால் அதனை அறவீடு செய்வதற்கும் ஒழுங்கீனங்கள் இடம்பெற்றிருந்தால் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுப்பதற்கும் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களின் பெயர் விலாசங்களை சரி செய்வதற்கும் இது வரை பயன்படுத்தப்பட்டுள்ள நடைமுறைகளை உள்ளடக்கும் அறிக்கையினைச் சமர்ப்பிக்குமாறு அதிகாரசபையின் தலைவருக்கு தெரியப்படுத்தியிருந்தும் தலைவரின் 2012 பெப்ரவரி 17 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் முறைப்படியாக விபரங்கள் வழங்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-------------------------------------------------

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அதிகாரசபையின் தலைவருக்கு அவ்வப்போது தெரியப்படுத்தப்பட்டன. அதிகாரசபை விசேட கவனம் செலுத்தப்படவேண்டிய முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) கணக்கீடு
(ஆ) கடன் பணத்தினையும் வருமானங்களையும் சேகரித்தல்
(இ) பழைய கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகள்
(ஈ) செயற்திட்டத்தினை அமுல்படுத்தல்
(உ) பொது முயற்சிகள் தொடர்பான குழுவின் சிபார்சுகளை அமுல்படுத்தலும் பின்தொடர் நடவடிக்கையும்

ஒப்பம் :- எச். ஏ. எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
*Nr/Sd*

**தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை**

**2011 டிசம்பர் 31இல் நிதி நிலைமை பற்றிய அறிக்கை**

| | | 2011 ஆம் ஆண்டு | | 2010 ஆம் ஆண்டு | |
|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | குறிப்பு | ரூபா சதம் | ரூபா சதம் | ரூபா சதம் | ரூபா சதம் |
| **நடைமுறையற்ற சொத்துக்கள்** | | | | | |
| ஆதனம், இயந்திரங்கள், உபகரணங்கள் (W.D.V) | 1 | 145,819,537 | | 149,475,797 | |
| முதலீடுகள் (LT) | 2 | 43,097,520 | | 43,913,183 | |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | | - | 188,917,057 | - | 193,388,981 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | |
| பதிவேடுகள், கையிருப்புக்கள் | 3 | 660,385 | | 533,010 | |
| வர்த்தக, ஏனைய பெறுகைகள் | 4 | 34,366,341 | | 37,222,492 | |
| முற்கொடுப்பனவுகள் | 5 | 979,842 | | 2,021,007 | |
| காசும் காசுக்கு சமமானவையும் | 6 | 5,570,258 | 41,576,826 | 61,478,247 | 101,254,757 |
| **மொத்த சொத்துக்கள்** | | | 230,493,883 | | 294,643,737.42 |
| **பொறுப்புக்கள்** | | | | | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | | | | |
| கொடுப்பனவுகள் | 7 | 15,081,083 | | 26,493,104 | |
| திரட்டிய செலவினம் | 8 | 39,891,644 | | 25,462,192 | |
| குறுகியகாலக் கடன்கள் (OD) | | - | 54,972,727 | - | 51,955,296 |
| **நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | | | | |
| கொடுப்பனவுகள் | | - | | - | |
| செலுத்த வேண்டிய கடன்கள் | | - | | - | |
| தாமதித்த வருமானம் | | - | | - | |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | | 34,808,657 | 34,808,657 | 23,268,505 | 23,268,505 |
| மொத்த பொறுப்புக்கள் | | | 89,781,384 | | 75,223,801 |
| மொத்த தேறிய சொத்துக்கள் | | | 140,712,499 | | 219,419,936 |
| தேறிய சொத்துக்கள்/பங்குகள் திரட்டிய நிதியம் | EC | 140,712,499 | | 219,419,936 | |
| ஒதுக்கீடுகள் | | - | 140,712,499 | - | 219,419,936 |
| திரட்டிய நட்டம் | EC | | - | | - |

65 ஆம் பக்கத்தில் இருந்து71 ஆம் பக்கம் வரையிலான கணக்கியல் கொள்கைகளும், குறிப்புக்களும் நிதித்துறை அறிக்கையில் முக்கிய இடத்தை வகிக்கின்றன.

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் தேவைகளையும், கணக்கியல் தரங்களையும் பூர்த்தி செய்யும் வகையில் அதிகார சபையின் நிதித்துறை அறிக்கைகள் அமைந்துள்ளன என்பதை நான் உறுதிப்படுத்துகின்றேன்.

……………………………………………

பணிப்பாளர் (நிதி மற்றும் நிருவாகம்)
தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை

இந்த நிதி அறிக்கைகள் தயாரிக்கப்படுவதற்கும், சமர்ப்பிக்கப்படுவதற்கும் பணிப்பாளர் சபை பொறுப்பாக உள்ளது. சபையின் சார்பில் அறிக்கையை அங்கீகரித்து கைச்சாத்திட்டுள்ளேன்.

……………………………………………….

தலைவர்/பணிப்பாளர் நாயகம்
தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை

**தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை**

**2010 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயற்பாட்டு அறிக்கை**

| | குறிப்பு | 2011<br>ரூபா | 2010<br>ரூபா |
|---|---|---|---|
| **செயற்படு வருமானம்** | | | |
| மீள்வரு மானியம் | | 107,600,000 | 105,632,000 |
| ஏனைய வருமானம் | 9 | 7,073,581 | 5,896,379 |
| | | 114,673,581 | 111,528,379 |
| **செயற்படு செலவினம்** | | | |
| ஊழியர் சம்பளங்கள் | 10 | 102,982,593 | 87,740,681 |
| பிரயாணச் செலவு | 11 | 2,379,175 | 2,218,317 |
| விநியோகம் மற்றும் வாடிக்கையாளர் சேவை | 12 | 5,348,518 | 4,429,865 |
| பராமரிப்புச் செலவு | 13 | 12,170,101 | 9,292,973 |
| ஒப்பந்தச் சேவைகள் | 14 | 3,778,800 | 3,865,199 |
| தேய்மானம் | 01 | 11,074,248 | 10,766,528 |
| ஏனைய செயற்படு செலவினங்கள் | 15 | 3,346,529 | 1,887,641 |
| மொத்த செயற்படு செலவினங்கள் | | 141,079,964 | 120,201,203 |
| காலப்பகுதிக்கான செயற்படு நடவடிக்கைகளின் அதிகம்/(குறைவு) | | (26,406,382) | (8,672,824) |

அதிகார சபையில் நிதி அறிக்கையின் முக்கிய இடத்தை வகித்துள்ள 65 ஆம் பக்கத்தில் இருந்து 71 ஆம் பக்கம் வரையிலான கணக்கியல் கொள்கைகளுடனும், குறிப்புக்களுடனும் நிதி அறிக்கைகள் வாசிக்கப்படுவது அவசியமாகும்.

அடைப்புக்குள் இடம்பெற்றுள்ள இலக்கங்கள், கழிக்கப்பட வேண்டியவை என்பதைக் காட்டுகின்றன.

**தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை**

**2011 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் பற்றிய அறிக்கை**

| | திரட்டிய நிதியம் | திரட்டிய பற்றாக்குறை அல்லது மேலதிகம் | மொத்தம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| **2011 டிசம்பர் 31 இல் நிலுவை (செயற்பாடு வருமானத்திற்கு முன்னர்)** | 167,118,881 | - | 167,118,881 |
| கணக்கியல் கொள்கையில் மாற்றங்கள் | - | - | - |
| மீளத் தெரிவிக்கப்பட்ட நிலுவை | 167,118,881 | - | 167,118,881 |
| ஆதனங்கள் மீள் மதிப்பீட்டின் மேலதிகம் | - | - | - |
| முதலீடுகள் மீள் மதிப்பீட்டின் பற்றாக்குறை | - | - | - |
| நாணயப் பரிவர்த்தனை வித்தியாசங்கள் | - | - | - |
| நிதிச் செயற்பாட்டு அறிக்கையில் இடம்பெறாத தேறிய இலாபங்களும் நட்டங்களும் | - | - | - |
| காலப்பகுதிக்கான மேலதிகம் / (பற்றாக்குறை) | - | (26,406,382) | (26,406,382) |
| 2011 டிசம்பர் 31 இல் நிலுவைத் தொகை | 167,118,881 | (26,406,382) | 140,712,499 |

| திரட்டிய நிதியம் | அட்டவணை | | | மொத்தம் |
|---|---|---|---|---|
| 2011.01.01 இல் நிலுவை | | - | 219,419,936 | |
| கூட்டுக: 2011.01.01 இல் இடம்பெறும் வேலைகள் | | | 17,189,233 | |
| 2011.01.01 இல் திரட்டிய அபிவிருத்திச் செலவினம் | | | 1,754,939,136 | |
| | | | 1,991,548,305 | - |
| திரட்டிய நிதியத்தின் முன்னைய வருட சீராக்கல்கள் | | | (1,726,239) | |
| | | | 1,989,822,066 | |
| 2011ல் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி | | - | 119,102,000 | |
| வழமையான திட்டங்கள் | | | 50,000,000 | |
| விசேட திட்டங்கள் | | - | 2,158,924,066 | 2,158,924,066 |
| 2011.12.31 இல் திரட்டிய அபிவிருத்திச் செலவினம் | அட்டவணை 22 | அட்டவணை 20 | | (1,991,513,537) |
| இடம்பெறும் வேலைகள் | அட்டவணை 20 | அட்டவணை 16 | | (291,648) |
| | - | - | - | - |
| 2011.12.31 இல் திரட்டிய நிதியம் (செயற்பாட்டு வருமானத்திற்கு முன்னர்) | | | | 167,118,881 |

அதிகார சபையில் நிதி அறிக்கையின் முக்கிய இடத்தை வகித்துள்ள 65 ஆம் பக்கத்தில் இருந்து 71 ஆம் பக்கம் வரையிலான கணக்கியல் கொள்கைகளுடனும், குறிப்புக்களுடனும் நிதி அறிக்கைகள் வாசிக்கப்படுவது அவசியமாகும்.

அடைப்புக்குள் இடம்பெற்றுள்ள இலக்கங்கள், கழிக்கப்பட வேண்டியவை என்பதைக் காட்டுகின்றன.

**தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை**

**2011 டிசம்பர் 31 இல் திரட்டிய காசுப்பாய்ச்சல் அறிக்கை**

| | 2011 | 2010 |
|---|---|---|
| செயற்படு நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்ச்சல் | ரூபா | ரூபா |
| சாதாரண நடவடிக்கைகளில் இருந்து மேலதிகம் / (பற்றாக்குறை) | (26,406,382) | (8,672,824) |
| காசற்ற நடவடிக்கைகள் | | |
| | 11,074,248 | 10,766,527 |
| தேய்மானம் | 12,362,617 | 2,418,712 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 17,189,233 | 8,803,513 |
| முன்னைய வருட சீராக்கல்கள் இடம்பெறும் வேலைகள் | (1,726,239) | (548,954) |
| திரட்டிய நிதியம் | (1,093,516) | (4,480,769) |
| திரட்டிய தேய்மானம் | (49,590) | 328,372 |
| திரட்டிய அபிவிருத்தி செலவினம் | 3,017,431 | (39,193,277) |
| கொடுப்பனவுகள் அதிகரிப்பு / (குறைவு) | - | (230,440) |
| காணி, இயந்திரங்கள், உபகரணங்கள், வாகனங்களின் விற்பனையில் இலாபம் / (நட்டம்) | 913,790 | (884,020) |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்களில் அதிகரிப்பு / (குறைவு) | - | - |
| பெறுகைகளில் அதிகரிப்பு | 2,856,152 | 21,149,136 |
| வேறு அசாதாரண பொருட்கள் | - | - |
| செயற்படு நடவடிக்கைளில் இருந்து தேறிய காசுப்பாய்ச்சல் | 18,137,742 | (10,544,025) |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து காசுப்பாய்ச்சல்** | | |
| மூலதனச் செலவினம் | (235,480,884) | (246,473,154) |
| தலைமை அலுவலக கட்டட நிர்மாணம் | (6,483,097) | (23,541,790) |
| நிலையான சொத்து புனரமைப்பு (காணி கணக்குகளில் வைப்பு) | (255,126) | (10,869,990) |
| நிலையான சொத்துக்களின் புனரமைப்பு - வாகனங்கள் | (122,800) | (118,000) |
| இயந்திரங்கள், உபகரணங்கள் கொள்வனவு | (507,375) | (23,275,188) |
| முதலீட்டு விற்பனை மூல வருமானம் | 815,663 | 300,000 |
| மோட்டார் சைக்கிள் மற்றும் வாகன பரிமாற்றம் | - | 237,912 |
| முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து தேறிய காசுப்பாய்ச்சல் | (242,033,618) | (303,740,210) |
| **நிதிசார் நடவடிக்கைகளில் இருந்து காசுப்பாய்ச்சல்** | | |
| வழமையான திட்டங்களுக்கான மூலதனம் | 119,102,000 | 233,230,000 |
| விசேட திட்டங்களுக்கான மூலதனம் | 50,000,000 | 156,510,033 |
| இடம்பெறும் வேலைகள் | (291,648) | (17,189,232) |
| பணிக்கொடைக் கொடுப்பனவுகள் | (822,466) | (966,029) |
| | 167,987,887 | 371,584,772 |
| காசும் அதற்குச் சமமானவற்றில் தேறிய அதிகரிப்பு/(குறைவு) | (55,907,989) | 57,300,537 |
| காலப்பகுதியின் ஆரம்பத்தில் காசும் காசுக்கு சமமானவையும் | 61,478,247 | 4,177,710 |
| காலப்பகுதியின் இறுதியில் காசும் காசுக்கு சமமானவையும் (குறிப்பு 6) | 5,570,258 | 61,478,247 |

அதிகார சபையில் நிதி அறிக்கையின் முக்கிய இடத்தை வகித்துள்ள 65 ஆம் பக்கத்தில் இருந்து 71 ஆம் பக்கம் வரையிலான கணக்கியல் கொள்கைகளுடனும், குறிப்புக்களுடனும் நிதி அறிக்கைகள் வாசிக்கப்படுவது அவசியமாகும்.

அடைப்புக்குள் இடம்பெற்றுள்ள இலக்கங்கள், கழிக்கப்பட வேண்டியவை என்பதைக் காட்டுகின்றன.

## 01. பதிவுசெய்யும் பிரிவு

இந்த நிதிக் கூற்றுக்கள் 1998 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டட அரச நிறுவனம் ஒன்றான இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்த்தாகும். இச்சபையின் தலைமை அலுவலகம் மாத்தறை, வல்கம வடக்கு, மாத்தொட்டகம, இல.15 என்னும் இடத்தில் அமைந்துள்ளது.

### 1.2 நிறுவனத் தகவல்கள்

#### 1.2.1 தொலைநோக்கு

துரிதமாக வளர்ச்சியடைந்துவரும் ஆசிய - பசிபிக் பிராந்தியத்திற்கு நுழைவாயிலாக அமையும் அதேசமயத்தில், கவர்ச்சிகரமான, சவால் விடுக்கக்கூடிய சந்தர்ப்பங்களை, இளைஞர்களுக்கு உருவாக்கி, புவியியல் ரீதியில், நிலைபேறான கலாசார அடிப்படையில், அதிசயிக்கத்தக்க சூழலை உள்ளடக்கிய, பொருளாதார சுபீட்சம் கொண்ட, தென் பிராந்தியத்தை உருவாக்குவதே எமது தொலைநோக்காகும்.

#### 1.2.2 இலக்கு

தனியார்துறையினரதும், உப அமைப்புக்களினதும் ஒத்துழைப்புடன், பிராந்திய மக்களுக்கு அவசியமான தேவைகள், பிராந்தியத்தின் மூலவளங்கள் என்பனவற்றை கடும் பரிசோதனையின் அடிப்படையில் இனம் காண்பதன் மூலம் சிறந்த வாழ்க்கைத் தரத்தையும், சவாலாக அமைந்துள்ள சந்தர்ப்பங்களையும் வழங்கும் சூழலுக்கு உட்பட்ட வகையில் இலக்குத் தீர்மானிக்கப்பட்ட தனி நபர் வருமானத்தை அடைவதும், பிராந்தியத்தின் மொத்த பொருளாதார உற்பத்தியின் துரித வளர்ச்சிக்குப் பங்களிப்பை வழங்குவதுமே எமது இலக்காகும்.

#### 1.2.3 குறித்துரைக்கப்பட்ட பிரதேசங்கள்

1996 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் 3(1)ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை ஜனநாயக சோஷலிஸக் குடியரசின் 2001.12.20 ஆம் திகதிய விசேட அரசாங்க வர்த்தமானியின் 01 ஆம் பகுதியின் முதலாவது உப பிரிவுக்கு அமைய அதிகார சபையின் குறித்துரைக்கப்பட்ட பிரதேசம் என்பது காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, மொனராகல மாவட்டங்களையும், இரத்தினபுரி மாவட்டத்தின் இரண்டு பிரதேச செயலாளர் பிரிவுகளான கொலன்ன மற்றும் எம்பிலிப்பிட்டிய என்பனவற்றையும் உள்ளடக்கியதாகும்.

#### 1.2.4 ஊழியர்களின் விபரங்கள்

| | |
|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 03 |
| மூன்றாம் நிலை | 09 |
| இரண்டாம் நிலை | 95 |
| ஆரம்பக்கட்டம் | 78 |
| மொத்தம் | 266 |

## 02. கணக்கியல் கொள்கைகள்

### 2.1 நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் முறை

தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையின் நிதி அறிக்கைகள் இலங்கை கணக்கியல் தரங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டு, கால எல்லைக்கு உட்பட்ட செலவின அடிப்படையில் தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்பட்டுள்ளது. வருமானமும், செலவினங்களும் அவற்றுக்குப் பொருத்தமான காலப்பகுதிக்கான நிதி அறிக்கையில் திரட்டிய அடிப்படையில் பதிவு செய்யப்பட்டுள்ளன. தேவையான இடங்களில் தெரிவிக்கப்பட்ட குறிப்புக்கள் மூலம் கொள்கைகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

### 2.2 பதிவுசெய்யும் காலம்

நிதிக்கூற்றுக்களுக்கான பதிவு செய்யும் காலமானது, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் வருடமாகும்.

## 03. சொத்துக்களும் அவற்றை மதிப்பிடும் முறையும்

### (அ) நடைமுறைச் சொத்துக்கள்

நடைமுறைச் சொத்துக்களாக ஐந்தொகையில் காட்டப்பட்டிருக்கும் சொத்துக்களிடையே கையிருப்பு மீதி, வங்கிக் கணக்கு மீதி மற்றும் சபையின் சாதாரண செலவுகளுக்கான காலப்பகுதியில் அல்லது பதிவுசெய்யும் தினத்தில் இருந்து ஒரு வருட காலத்திற்குள்ளான இரு காலப்பகுதிகளில் குறைந்த காலப்பகுதியில் பணமாக மாறக்கூடும் என எதிர்பார்க்கப்படும் நடைமுறைச் சொத்துக்களாகும்.

### (ஆ) காணிகள் மற்றும் இயந்திர உபகரணங்கள்

### (1) அடையாளம் காணல் மற்றும் மதிப்பீடு செய்தல்

காணிகள், இயந்திர உபகரணங்களுக்கான செலவுகள் / மீள் மதிப்பீட்டுத் தொகைக்கு அமைய கணக்கிடப்பட்டு அத்தொகையிலிருந்து திரட்டிய தேய்மானம் மற்றும் திரட்டிய இழப்பீடுகள் கழிக்கப்பட்டு ஏதேனும் நட்டங்கள் ஏற்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து நிகர புத்தகப் பெறுமதியில் காண்பிக்கப்படுகிறது. கொள்விலையில் சொத்துக்களை அடைந்து கொள்வதற்கு நேரடியாக செலவிடப்பட்ட தொகைகளும் இதில் அடங்கும். கட்டட நிர்மாணங்கள் செலவில் பொருட்களுக்கான செலவு, மனித வள செலவுகள் மற்றும் அச்சொத்துக்களை பயன்படுத்துக்கு கொண்டுவருவதற்காக மேற்கொள்ளப்பட்ட நேரடி செலவுகளும் ஏதேனும் பொருத்துக்கள் அல்லது அகற்றல்கள் தேவைப்படிப்படின் அவற்றுக்கான செலவுகளும் இவற்றில் அடங்கும். காணிகள் அதன் கொள்விலையில் அல்லது அரச மதிப்பீட்டாளரினால் மதிப்பிடப்பட்ட பெறுமதியில் இதில் எந்தத் தொகை பொருந்துமோ அந்தத் தொகையில் மதிப்பிடப்பட்டுள்ளது.

இயந்திர உபகரணங்களின் பகுதிகளுக்கு வெவ்வேறான ஆயுள் காலங்கள் இருப்பின் அவற்றை இயந்திர உபகரணங்களில் இருந்து மற்றொரு பிரிவாக (பிரதான பிரிவாக) கணக்கிடப்பட்டுள்ளது.

காணி மற்றும் இயந்திர உபகரணங்களை அகற்றும் போது ஏற்படும் இலாபம் அல்லது நட்டம், அவற்றை அகற்றும் போது கிடைக்கும் வருமானம் அந்த சொத்துக்களின் தற்போதைய வருமானத்துடன் ஒப்பிடப்பட்டு கணக்கிடப்படுவதுடன், அந்த இலாபம் அல்லது நட்டம் மூலதனம் / அபிவிருத்தி வருமானம் கணக்கில் நிகர பெறுமதிகளாக அடையாளம் காணப்படும்.

**(2) புதிய பிரிவுகளுக்கான செலவினங்கள்**

காணிகள், இயந்திர உபகரணங்களின் பகுதியை புதிதாக சேர்க்கும் போது, அப்பகுதியின் மூலம் எதிர்காலத்தில் சபைக்கு அனுகூலங்கள் கிடைக்கும் வாய்ப்பு காணப்படுமாயின், அப்பகுதியின் செலவுகளை எதிர்பார்ப்புடன் மதிப்பிடக்கூடிய சந்தர்ப்பங்களில், அதற்கான செலவுகள் வெவ்வேறாக அடையாளம் காணப்படும். அவ்வாறு அடையாளம் காணப்படும் பிரிவுகளுக்கு தற்போதைய வருமானம் சேர்க்கப்படுவதில்லை. சொத்துக்கள் மற்றும் இயந்திர உபகரணங்களை நாளாந்தம் பராமரிப்பதிற்கான செலவுகள் அவற்றை வைத்திருக்கும் காலப்பகுதிக்கான வருமானம் மற்றும் செலவுகள் அறிக்கையில் அடையாளம் காணப்படும்.

**(3) தேய்மானங்கள்**

ஒவ்வொரு பிரிவுக்கும் வெவ்வேறாக சொத்துக்களின் தேய்மானம் பற்றிய சபையின் கொள்கையானது, கொள்வனவு செய்யப்பட்ட வருடத்தில் இருந்து தேய்மானம் கணக்கிடுவதை ஆரம்பித்ததும், அகற்றப்படும் வருடத்திற்கான தேய்மானங்களை கணக்கிடாது இருப்பதுமாகும். சொத்துக்களின் ஆரம்பச் செலவுகளுக்கு அமைய பின்வரும் சதவீதங்களின் கீழ் அவற்றின் தேய்மானங்கள் கணக்கிடப்படும்.

| | |
|---|---|
| கட்டடங்கள் மரத்தளபாடங்களும் | 05% |
| உபகரணங்களும் | 10% |
| மின்சார சாதனங்கள் | 20% |
| மோட்டார் வாகனங்கள் | 20% |
| தொலைத்தொடர்புக் கருவிகள் | 15% |
| பயிற்சிக்கான உபகரணங்கள் | 25% |
| பெயர்ப்பலகைகள் | 10% |

**04. கையிருப்புகள்**

பல்வேறு பாவனைப் பொருட்கள் மற்றும் பொருட்களின் தொகுதிகள் என்பன இதிலடங்கும். எவ்வாறாயினும், இந்தக் கையிருப்புகளின் அநேகமானவை காரியாலய எழுதுகருவிகள் மற்றும் குறைந்த பெறுமதியான பொருட்களாகும். அவை, கொள்விலை அல்லது நிகர பெறுமதி ஆகியவற்றில் குறைந்த பெறுமதிக்கு அமைய கணகிடப்பட்டுள்ளன. சாதாரண வர்த்தக நடவடிக்கைகளின் போது விற்பனை விலையிலிருந்து உரிய கையிருப்புக்களை மேலும் பூர்த்தி செய்வதற்கான மதிப்பிடப்பட்ட தொகை மற்றும் அவற்றை விற்பனை செய்வதற்கான தொகை ஆகியவற்றைக் கழித்து நிகர பெறுமதிக்கு மதிப்பிடப்படும்.

முதலில் கிடைத்தவற்றை முதலில் விநியோகிக்கும் அடிப்படையின் கீழ் உரிய கையிருப்புக்களின் பெறுமதிகள் கணக்கிடப்பட்டு, அப் பெறுமதிகளுக்கு அமைய உரிய சொத்துக்களை அடைவதற்கு மேற்கொள்ளப்பட்ட செலவுகள் மற்றும் அவற்றை தற்போதுள்ள இடத்திற்கு கொண்டுவரவும் தற்போதுள்ள நிலைக்க மாற்றவும் மேற்கொள்ளப்பட்ட செலவுகளும் இதிலடங்கும்.

**05. கிடைக்க வேண்டியவை**

கிடைக்கவேண்டிய வருமானங்கள் அவை கிடைக்கப்பெறும் பெறுமதிகளில் கணக்கிடப்பட்டு, அறவிட முடியாக்கடன் மற்றும் சந்தேகக் கடன்களைக் குறைத்த பின் நிகர பெறுமதி புத்தகங்களில் காட்டப்பட்டுள்ளன.

06. **ஊழியர் அனுகூலங்கள்**

(1) **கட்டாய பங்களிப்புத் திட்டங்கள் ஊ.சே.நி, ஊ.ந.நி**

1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டத்திற்கு அமைவாகவும், 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் கீழும் அவற்றுக்கான திருத்தங்களுக்கு அமைவாகவும், இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையினால் ஊழியர் சேமலாப நிதிக்கு 12% மும், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3% மும் பங்களிப்பு வழங்கப்படுகின்றது.

(2) **ஊழியர் நன்மைத் திட்டம் ஓய்வுக் கொடுப்பனவுககள்**

இலங்கை கணக்கியல் தரம் 16 ஆம் இலக்கத்திற்கு உட்பட்ட வகையில், 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் பிரகாரம் வழங்கப்பட வேண்டுமெனக் கருதப்பட்ட ஓய்வில் செல்வோருக்கான பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் நிதி அறிக்கையில் இடம்பெற்றுள்ளன. சட்டத்தின் விதிகளுக்கு அமைய ஒரு ஊழியர் 05 வருடங்கள் சேவையைப் பூர்த்தி செய்த பின்னர் இதற்கு தகுதி பெறும் நிலைக்கு உட்படுகிறார். அந்தப் பொறுப்புக்குரிய நிதியம் ஒன்று வேறாக ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதுடன், அந்தப் பெறுமதிக்கு வேறு எந்தவொரு வகையிலும் ஒதுக்கங்கள் செய்யப்படவில்லை.

பணிக்கொடையைப் பெறுவதற்கென மொத்தம் 266 ஊழியர்களில் 265 பேர் உரிமை பெற்றுள்ளனர். 2011 ஆம் ஆண்டின் இறுதியில் இதற்கென மேற்கொள்ளப்பட்ட வருடாந்த ஒதுக்கீடு ரூபா 12,362,617.45 ஆகும். இதனடிப்படையில் 2011.12.31 இல் திரட்டிய ஏற்பாடு 34,808,656.95 ஆக இருந்தது.

**07. மூலதனச் செலவுகளும் நிச்சயமற்ற பொறுப்புக்களும்**

சகலவித சாத்தியமற்ற பொறுப்புக்களும், நிச்சயமற்ற பொறுப்புக்களும் ஆராயப்பட்டு தேவை ஏற்பட்ட இடத்தில் சரி செய்தல் மற்றும் வெளிப்படுத்தல் என்பன நிதி அறிக்கையில் இடம்பெற்றுள்ளன.

நிச்சயமற்ற பொறுப்புக்கள் என்பது, கடந்தகால நிகழ்வொன்றின் காரணமாக ஏற்படும், ஏற்படக் கூடிய சொத்துக்களும் பொறுப்புக்களுமாகும். சபையின் கட்டுப்பாடற்ற எதிர்கால நிச்சயமற்ற நிகழ்வுகள் அல்லது கொடுப்பனவுகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இவை உறுதிப்படுத்தப்படும்.

**7.1 கதுருதுவவத்த - காலி**

இந்தக் காணி, காணிச் சுவீகரிப்பு சட்டத்தின் 38(அ) பிரிவின் கீழ் 1998.09.29 ஆம் திகதி வெளியிடப்பட்ட 1044 ஆம் இலக்க அதிவிசேட அரசாங்க வர்த்தமானியின் அறிவித்தலுக்கு அமைய சுவீகரிக்கப்பட்டுள்ளது. அதில் குடியிருந்த 29 பேருக்கு நஷ்டஈடாக ரூபா 10,869,989.60 வழங்கப்பட்டது. மதிப்பிடப்பட்ட எஞ்சிய தொகை (வட்டி) ரூபா 6,675,954.00 ஆகும். காணியின் விஸ்தீரணம் 19 ஏ. 2 ரூட், 14.1 பேர்ச்

**08. வருமானம்**

**(1) வருமானங்களை அடையாளம் காணல்**

சபையின் வருமானங்கள் பிரதானமாக அரச நிதி ஒதுக்கீடுகளைக் கொண்டு இயங்குகிறன. இந்த ஒதுக்கீடுகளில் காலத்திற்குக் காலம் வழங்கப்படும் மற்றும் நீண்டகாலங்களுக்கு வழங்கப்படும் மூலதனம் / அபிவிருத்திக்கான ஒதுக்கீடுகள் உள்ளடக்கப்படுகிறன. செலவுக்கு / சாதாரண பெறுமதிக்கு நிதி அடிப்படையில் கிடைக்கப்பெறும் வருமானங்களாகவே இவை அடையாளம் காணப்படுகின்றன. இவற்றுக்கான செலவுகள் பதிவேட்டு அடிப்படையில் நிதிக் கூற்றுக்களில் காணப்படுகின்றது. ஒருசில வருமானங்களை பெற்றுக்கொள்வதில் பெருமளவு நிச்சயமற்ற தன்மை காணப்படின் அவை வருமானமாகக் கருதப்படவில்லை.

**(2) கூலி ஏனைய வருமானம்**

வெளிக்கள தொழில் முயற்சியாளர்களுக்கும், முதலீட்டாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ள சொத்துக்களுக்கான கூலி வருமானம் பதிவேட்டு அடிப்படையில் அடையாளம் காணப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளது.

**09. ஏனைய செலவுகள்**

ஏனைய செலவுகள் உரிய செலவுத் தொகைக்கு அமைய நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளன.

**10. செலவினம்**

**(1) செலவுகளை அடையாளம் காணல்**

சபையை பராமரித்து வரும் மூலதனச் சொத்துக்களை சிறந்த முறையில் செயற்படுத்தவும், அவற்றைப் பராமரிக்கவும் செலவிடப்படும் செலவுகள் வருடத்திற்கான குறைபாடு அல்லது அதிகரிப்பு இனங்காணப்பட்டு வருமானத்திற்கு எதிராக பதியப்படும்.

சபையின் வருமான அளவுகளை அதிகரிப்பதற்காகவும், சபையின் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்காகவும் நிலையான சொத்துக்களை சுவீகரிப்பதும், விருத்தி செய்வதும், முன்னேற்றுவதும் போன்ற நோக்கங்களில் மேற்கொள்ளப்படும் செலவுகள் மூலதனச் செலவுகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

பழுதுபார்த்தல் செலவுகள் மற்றும் மீள் நிரப்பும் செலவுகள், அந்தச் செலவுகளை மேற்கொண்ட வருடத்தின் வருமானத்திற்கு எதிராக பதியப்படும்.

**(2) மீள் செலவினம்**

முக்கியமாக கீழ்க்காணும் காரணங்களின் அடிப்படையில் மீள் செலவினம் ஏற்பட்டுள்ளது.

- ஊழியர்களுக்கான செலவினம்
- பிரயாணச் செலவினம்
- கொடுப்பனவு சம்பந்தமான செலவினம்
- பராமரிப்புச் செலவினம்
- ஒப்பந்த அடிப்படையிலான சேவைகள்
- ஏனைய மீள் செலவினங்கள்

**(3) மூலதன / அபிவிருத்திச் செலவுகள்**

மூலதனச் செலவு என்பது, சபையின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கென மேற்கொள்ளப்படும் செலவுகளாகும். அச்செலவுகளில் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு தேவையான செலவினங்கள் தவிர்ந்த மேலும் அவற்றில் சேர்க்கக்கூடியவையாகக் கருதப்படும் திட்டங்களை வகுப்பதற்கான செலவுகள், திட்டங்களை ஒருங்கமைப்பதற்கான செலவுகள், மற்றும் திட்டங்களுக்கான அறிக்கைகளை தயார்செய்வதற்கான செலவுகள் என்பனவும் இதிலடங்கும்.

**11. நிதிக் கொடுக்கல் வாங்கல் கூற்று**

இலங்கை கணக்கியல் தரங்கள் இல.09 க்கு அமைய நிதிக் கொடுக்கல் வாங்கல் கூற்றினை தயார்செய்வதும் சமர்ப்பிப்பதும் சபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**12. காசும் காசுக்கு சமமானவையும்**

காசு மற்றும் காசுக்கு சமமானவையாக கையிலிருக்கும் காசு கேட்டவுடன் மீளப் பெறக்கூடிய வைப்புக்களினால் ஈடு செய்யாத மற்றும் வங்கி மேலதிகப்பற்றினால் ஈடு செய்யப்படாத நிகர பெறுமதி எதிர்பாராத அளவு பெறுமதி மாற்றம் ஏற்படாது நிச்சயமாக தெரிந்த பெறுமதிக்க இலகுவாக பணமாக மாற்றக்கூடியவை மற்றும் இலகுவாக பணமாக மாற்றக்கூடிய குறுங்கால முதலீடுகள் என்பன அடையாளம் காணப்படுகின்றன.

**13 ஒப்பீட்டுத் தகவல்கள்**

தற்போதைய காலத்திலும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் தன்மையை உறுதிப்படுத்துவதற்காக மற்றும் நிதித் தகவல்களை நியாயமான முறையில் சமர்ப்பித்தற்காகவும் கடைப்பிடிக்கப்படும் பிரித்தல்களுக்கு மாற்றங்களை ஏற்படுத்தாமையை உறுதிப்படுத்துவதற்கும் தேவையான இடங்களில் ஒப்பீட்டு நிதித் தகவல்கள் காண்பிக்கப்பட்டுள்ளன.

**14. ஐந்தொகை தினத்தின் பின் ஏற்பட்ட நிகழ்வுகள்**

ஐந்தொகை தினத்தின் பின்னர் நடந்துள்ள சகல நிகழ்வுகளுக்குரிய அளவுகளும் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கருத்திற் கொள்ளப்பட்டுள்ளதுடன், தேவையான இடங்களில் அவற்றுக்கான சரி செய்தல்கள், வெளிக்காண்பித்தல்கள், நிதிக் கூற்றுக்களின் குறிப்புகளில் முன்வைக்கப்பட்டுள்ளன.

## 15. இணைந்து மேற்கொள்ளும் வர்த்தகங்கள் சார்ந்த விடயங்கள்

### (1) ருஹுுணு 2001 மல்டிவிஷன் நிறுவனத்தில் இருந்து வருமானம்

ஊடகம், சுற்றுலா, விமானப் போக்குவரத்து அமைச்சு தனியார் தொலைக்காட்சி, ஒளிபரப்பு நிலையம் ஒன்றை அமைத்து நடத்துவதற்கென தென் இலங்கை அபிவிருத்தி அதிகார சபைக்கு அனுமதிப்பத்திரம் ஒன்றை வழங்கியுள்ளது. (1996.10.24 திகதிய MTA/M/RC/54 ஆம் இலக்கக் கடிதம்) இதனைத் தொடர்ந்து தொலைத்தொடர்புப் பணிப்பாளர் நாயகம் 19 MDS ஒளிபரப்பு அலைவரிசைகளை ஒதுக்கீடு செய்துள்ளார். (1996.12.02 திகதிய DGT/MDS/1/1996 இலக்க கடிதம்)

அவுஸ்திரேலியாவின் சாம்பே நிறுவனத்தோடு அதிகார சபை 1997.06.06 ஆந் திகதியில் செய்துகொண்ட உடன்படிக்கையின் அடிப்படையில் 19 MDS ஒளிபரப்பு அலைவரிசைகள் (கொழும்பில் 6, நாடு முழுவதும் 13) சாம்பே நிறுவனத்திற்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டன. கேபிள் தொலைக்காட்சி ஒளிபரப்பை நடத்துவதற்கென உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு அமைய ருஹுுணு 2001 மல்டிவிஷன் நிறுவனம் என்ற அமைப்பை இரு தரப்பினரும் உருவாக்கியுள்ளனர். உடன்படிக்கையில் 11.1 இன் பிரகாரம் மொத்த வருமானத்தில் 10 சதவீதத்தை மல்டிவிஷன் நிறுவனம் காலாண்டு அடிப்படையில் புலமைச்சொத்து என்ற வகையில் செலுத்துவது அவசியமாகும்.

இருந்த போதிலும், 2005.04.26 வரை மல்டிவிஷன் நிறுவனம் எந்தவொரு கொடுப்பனவையோ அல்லது அந்தத் திகதி வரைக்குமான வருடாந்த கணக்கு விபரங்களையோ அதிகார சபைக்கு வழங்கவில்லை. இதனையடுத்து அப்போதைய தலைவரின் தலையீட்டின் காரணமாக 2005.04.27 ஆம் திகதியன்று ரூபா 7,694,218.24 ஐ அதிகார சபை பெறமுடிந்துள்ளது.

இந்த விடயம் தொடர்பான நடைமுறை ரீதியிலான சூழ்நிலைகள் கடினமாக இருப்பதன் காரணமாக, பெறப்பட வேண்டிய மொத்த நிலுவைத் தொகையை நிச்சயமாகத் தெரிவிப்பது என்பது மிகவும் கஷ்டமான விடயம். எனவே, ரொக்கப் பணமாக 2005 ஆம் ஆண்டு வரை பெற்றுக்கொள்ளப்பட்ட தொகையை மாத்திரம் கணக்கில் காட்டுவதைத் தவிர வேறு எதனையும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ருஹுுணு 2001 மல்டிவிஷன் நிறுவனத்திடம் இருந்து பெறப்பட வேண்டிய புலமைச் சொத்தை வசூலிக்கவென நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் அதேசமயத்தில், மல்டிவிஷனுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அலைவரிசைகளை மீளப்பெறுவதற்கு பலதரப்பட்ட சட்ட அடிப்படையில் அதற்கு எதிராக தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழு 7797/SP இலக்க வழக்கை கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது. இதனை அறிந்ததும், மல்டிவிஷனில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய பணம் முழுவதும் கிடைக்கும் வரை அலைவரிசைகளை மீளப்பெற வேண்டாம் என்று அதிகார சபை தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குவின் தலைவருக்கு கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது.

இருந்த போதிலும், இந்த வழக்கின் இறுதி விசாரணைகள் 2008.07.24 ஆம் திகதி இடம்பெற்றன. இந்தத் தருணத்தில் மல்டிவிஷனில் இருந்து சகல அலைவரிசைகளையும் மீளப் பெறும்படி ஆணைக்குழுவிற்கு உத்தரவிட்டு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக தீர்ப்பின் அடிப்படையில் ஸ்கைவிஷன் ரேடியோ அமைப்பிற்கு 8 அலைவரிசைகள் கையளிக்கப்பட்டுள்ளன.

இதன்காரணமாக, மல்டிவிஷனில் இருந்து பெறப்பட வேண்டிய புலமைச்சொத்து நிலுவையை அதிகார சபை வசூலிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. அதேவேளை, மல்டிவிஷன் நிறுவனம் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க புதிய கம்பனிச் சட்டத்தின் கீழ் மீளப் பதிவு செய்துகொள்ளவில்லை என்பதும் தெரிய வந்துள்ளது.

இத்தகைய சூழ்நிலையில் புலமைச்சொத்து நிலுவையை எவ்வாறு வசூலிப்பது என்பது பற்றியும் இந்த விடயம் தொடர்பாக எத்தகைய சட்ட நடவடிக்கையை மேற்கொள்ளலாம் என்பது தொடர்பாகவும் சட்டமா அதிபரிடம் இருந்து ஆலோசனைகள் கோரப்பட்டுள்ளன.

**16. சார்ந்த நிறுவனங்களில் முதலீடு**

(1) ருஹுனு 2001 பெஞ்சர் கெப்பிட்டல் நிறவனத்தில் (தெற்கு அபிவிருத்தி நிதி நிறுவனம்) முதலீடு

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் ருஹுண 2001 வெஞ்சர் கெப்பிட்டல் நிறுவனம் (தற்சமயம் வரையறுக்கப்பட்ட தென் பிராந்திய அபிவிருத்தி நிதி நிறுவனம்) 1996.12.15 ஆம் திகதி ஒருங்கிணைக்கப்பட்டது.

இதன் முகாமைத்துவம் தென் இலங்கை அபிவிருத்தி அதிகார சபையின் தலைவரின் கீழான அமைப்பினால் மேற்கொள்ளப்படுகிறது. இலங்கை வங்கியினதும் மக்கள் வங்கியினதும் இரு முகவர்கள் பணிப்பாளர் சபையினால் இடம்பெற்றுள்ளனர். 2011.12.31 ஆம் திகதி ஆகும் போது சபை இந்நிறுவனத்தில் மேற்கொண்டுள்ள முதலீடுகள் பின்வருமாறு:

| | |
|---|---|
| ஆரம்ப மூலதன வழங்கல் | 10,000,000.00 |
| சுழலும் கடன் நிதியம் | 33,072,519.77 |
| **மொத்தம்** | **43,072,519.77** |

இந்த மூலதனத் தொகையையோ அல்லது வட்டி மற்றும் பங்கிலாபம் என்ற பயன்பாட்டையோ இத்தகைய தொகைகளைச் செலத்தும்படி அதிகார சபை தொடர்ச்சியாக கோரிக்கைகளை விடுத்த போதிலும், நிறுவனம் இதுவரை செலுத்தவில்லை. ஆனால், அந்நிறுவனத்தின் நிர்வாக சபையினர் இச்சபைக்கு அறிவித்திருப்பதாவது, அந்நிறுவனமானது, ஆரம்பம் முதல் நஷ்டத்தில் கொண்டு நடத்தப்பட்டதாகவும், ஆகையினால் இச்சபைக்கு எந்தவொரு கொடுப்பனவும் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும கூறப்பட்டுள்ளது. மேலும் அந்நிறுவனம் அறியத்தந்திருப்பதாவது, 2011 ஆம் ஆண்டு முதல் நிறுவனம் இலாபம் பெற ஆரம்பித்துள்ளதுடன், எதிர்காலத்தில் சபையின் முதலீட்டுக்கு ஏற்ற பிரதிபலன்களை பெற்றுத்தருவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதி செய்துள்ளனர்.

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

## தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை

**2011 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்தின் நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்**

**குறிப்பு - 1**
நிலையான சொத்துக்கள் - தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை

| விபரம் | 01.01.2011 இல் மொத்தம் | சேர்க்கைகள் | அகற்றல்கள் | 31.12.2011 இல் மொத்தம் |
|---|---|---|---|---|
